சாதனை நாயகி

திருவாட்டி செல்வமலர் சுந்தரேசன்

# மணிவிழா மலர்

## 2014



கற்கலை
எழில்மிகு
சிற்பங்களாக்கிய
அபூர்வ உளி

சாதனை நாயகி
திருமதி.செல்வமலர் சுந்தரேசன்
அவர்களின்

# மணிவிழா மலர்

பதிப்பாசிரியர்
பரா.ரதீஸ்

[மலராசிரியர், மணிவிழாக்குழு.
ஆசிரியர், தமிழ்ப்புலம்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை]

செல்வமலர் சுந்தரேசன்
மணிவிழாக்குழு

2014

**தலைப்பு**
திருவாட்டி செல்வமலர் சுந்தரேசன்
மணிவிழா மலர்

**பதிப்பு**
சித்திரை - 2014

**மலராசிரியர்**
பரா. ரதீஸ்

**வெளியீடு**
செல்வமலர் சுந்தரேசன் மணிவிழாக்குழு

**வடிவமைப்பும் அச்சும்**
**S.P.M** பிறின்ரேர்ஸ், வி.எம்.றோட், பருத்தித்துறை.
*T.P.No: 0774966997, 021 226 0055*

**Title**
*Mrs.Selvamalar Suntharesan*
*Manivilamalar*

**Edition**
*April - 2014*

**Edited by**
*Para.Rathees*

**Published**
*Mrs.Selvamalar Suntharesan Manivila Committee*

**Disigned & Printed by**
**S.P.M** *Printers, V.M.Road, Point Pedro.*
*T.P.No: 0774966997, 021 226 0055*

# மணிவிழா நாயகர்கள்



திரு.திருமதி.சுந்தரேசன் செல்வமலர் தம்பதிகள்

# திருவாட்டி செல்வமலர் சுந்தரேசன் மணி விழாக்குழு – 2014

**தலைவர்**
திருவாளர்.வ.கிருஸ்ணசிங்கம்

**உபதலைவர்**
திருவாளர்.ச.பிரதீபன்

**செயலாளர்**
திருமதி.இ.ஶ்ரீரங்கன்

**உபசெயலாளர்**
திருமதி.வ.இராமச்சந்திரன்

**பொருளாளர்**
திருமதி.மீ.கிருஷ்ணகாந்தன்

**மலராசிரியர்**
திருவாளர்.பரா.ரதீஸ்

**உறுப்பினர்கள்**

திருமதி.ஐ.நந்தகுமார்
திருவாளர்.இ.சண்முகசுந்தரம்
திருமதி.R.ஆனந்தராஜா
திருமதி.R.பிறேமகாந்தன்
திரு.K.கஜந்தன்
திருமதி.V.சித்திரவடிவேல்
திருமதி.S.வேணுகோபால்
செல்வி.Y.இராதாகிருஷ்ணன்
திருமதி.ச.சிவலிங்கம்
திருமதி.மை.சிறீஸ்கந்தசேகரம்
திரு.க.சிவகுமார்
திருமதி.இ.குகநாதன்
செல்வி.மை.வீரகத்தி
திரு.P.சிறிபவன்
திரு.T.யோகேந்திரன்
திரு.K.கிருஷ்ணகுமார்
செல்வி.சி.சிவகுரு
திருமதி.லீ.கணேசலிங்கம்
திரு.வீ.சேந்தன்
திருமதி.அ.பாலேந்திரன்
திரு.க.முகுந்தன்
திரு.T.கிருபாகரன்
திரு.B.கோபிதாஸ்
திருமதி.அ.சந்திரகாந்தன்
திரு.P.கதிர்காமநாதன்
திரு.A.உமாசங்கர்



# உங்களோடு........

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்றான் கணியன் பூங்குன்றன். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு தமிழனின் மானிட ஐக்கியம் சார்ந்த சிந்தனை இது. இன்றும் மேடைகளிலே சிலர் முழங்குகின்றார்கள். கடைப்பிடித்து ஒழுகுபவர்கள் எத்தனை பேர் என்பது கேள்விதான். உறவு கொண்டாடுவதற்கு முன்னர் அவருடைய ஊர், தொழில், பின்புலம், உறவினர் நிலை, கல்வி, பொருளாதாரம் என இவை சார்ந்த வினாக்களை எழுப்பி விடை கண்டு உறவு கொண்டாடுபவர்கள்தான் எம்மில் பலர். இக்கூட்டத்தினின்றும் விலகி பேதங்களின்றி உறவு கொண்டாடி மகிழ்கின்றவர் எங்கள் பெருந்தகை மணிவிழா நாயகி திருவாட்டி செல்வமலர் சுந்தரேசன். இதனால் தான் ஊரெல்லாம் கூடி அம்மைக்குப் பெருவிழாக் காண்கிறது. மணி விழாக்காணும் எங்கள் அதிபரை வாழ்த்திக் கௌரவிக்கும் முகமாக பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப்பலரும் கூடி மணிவிழாக்கண்டு இந்நூலை வெளியிடுகிறோம்.

## II

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு; தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்.

பாரதிக்குப் பெரும்புகழை ஈட்டிக்கொடுத்த கவிதை இது. எதைச் சொல்ல வந்தேன் என்று பாரதி இந்தக்கவிதையில் சொல்லவில்லை. இதனால் அறிஞர்கள் தத்தமது தகுதிக்கும் புலமைக்கும் சிந்தனைக்கும் ஏற்ப பலவாறு சொன்னார்கள். சொல்லாது விட்டால் மற்றவர்கள் சொல்வதற்கு நிறைய வாய்ப்புக்கள் உள என்பதை இக்கவிதை நிரூபிக்கிறது. நாங்களும் இந்த நூலுக்கு பெயர் சொல்லவில்லை. உங்களை சொல்லுங்கள் என்று விட்டிருக்கிறோம். மணி விழா மலருக்கு பெயர் வைப்பதில் சில சிக்கல்களும் உள. மணிவிழா மலருக்கு பெயர் வைத்து, அதன் காரணமாக, மணி விழா நாயகர்களை, பரந்து விரிந்த விமர்சனங்களுக்கு உட்படுத்திய வரலாறுகளும் எங்களுக்குள் உண்டு. இதுவும் நாம் பெயர் வைக்காமைக்கு ஒரு காரணம் தான்.

## III

இம்மலர் பிரதானமாக ஐந்து இயல்களைக் கொண்டமைந்துள்ளது. வந்தனைக்குரியவர்கள் வழங்கிய ஆசிச்செய்திகளை **ஆசியியல்** என்ற பகுதியில் அடக்கியிருக்கிறோம். சான்றோர்கள் உவந்தளித்த வாழ்த்துரைகளை **வாழ்த்தியல்** என்ற பகுதிக்குள் அடக்கியிருக்கிறோம். மணிவிழா நாயகியின் வாழ்க்கையோடு தொடர்புடைய கட்டுரைகளை **வாழ்வியல்** என்ற பகுதிக்குள் உள்ளடக்கி உள்ளோம். பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் எனப் புலமைசார் நிபுணர்களால் வழங்கப்பட்ட கட்டுரைகளை **கட்டுரையியல்** என்ற பகுதிக்குள் நீங்கள் பார்க்கலாம். இக்கட்டுரைகள் மொழி, பண்பாடு, ஆத்மீகம், கல்வி, பொருளாதாரம், மருத்துவம், புவியியல், சட்டம், முகாமைத்துவம், விவசாயம் எனப் பல்துறை சார்ந்த விடயங்களையும் வெளிப்படுத்தியிருக்கின்றன. இக்கட்டுரைகள் இம்மலருக்கு உயர்ந்த பெறுமானத்தையும் கற்றோரின் கணிப்பையும் அறிஞர்களின் அங்கீகாரத்தையும் அமரத்துவத்தையும் பெற்றுக் கொடுக்கும் என்பது எமது அசையாத நம்பிக்கை. மலர் வெளியீடு என்ற எமது கடின உழைப்பிற்கு இந்த ஆக்கங்கள் உயிர் கொடுத்துள்ளன. மணிவிழா நாயகி சார்ந்த கவிதைகளும் இ.பிரபோசங்கருடைய சுனாமி சார்ந்த கவிதையும் **படைப்பியல்** என்ற பகுதிக்குள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூலின் நிறைவிலே மணிவிழா நாயகி சார்ந்த புகைப்படங்கள் வரலாற்றுப் பதிவாக உள்ளன.

## IV

அறிவியலினுடைய மேம்பாடு உலகத்தைச் சுருக்கிவிட்டது என்கிறார்கள். உலகத்தை உள்ளங்கைக்குள் கொண்டு வந்து விட்டது, என்று பெருமைப்படுகிறார்கள். சுருக்கியது உலகத்தை மட்டுமல்ல மானிட ஆயுளையும் தான். மானிட வாழ்வை நகர்த்திச் செல்வது என்பது இன்றைய சூழ்நிலையிலே பெரும் போராட்டம். அதுவும் சமூக மேம்பாட்டிற்காக பாடுபடுகின்றவர்களுக்கு போராட்டத்தின் மேல் போராட்டம். 17 ஆண்டுகளுக்கு மேலாக ஓர் உயர் பள்ளியில் அதிபராக நின்றுபிடிப்பது என்பது சாதனைகளும் சோதனைகளும் கலந்த நீண்ட நெடிய பயணம். மணிவிழா நாயகி, வாழ்வில் எதிர்கொண்டிருக்கக்கூடிய சவால்களை எல்லாம் உடைத்தெறிந்து, சோதனைகளையெல்லாம் துரும்பாக்கி, சாதனைகளை தன் வாழ்வாக்கி இருக்கிறார். எல்லாவற்றையும் தாண்டி மணிவிழாக்காணும் நம் தலைவி பவளவிழா, அமுதவிழா, நூற்றாண்டு விழா எனப்பல விழாக்களைக்கண்டு பார் போற்ற வாழ, நான் நித்தமும் வணங்கும் கலையின் அரசனாம் சிவன்தாள் பணிந்து அமைகிறேன்.

**வாழ்க தமிழ்! வளர்க கலை!!!**

**மலராசிரியர்,**
**மணிவிழா மலர்க்குழு.**

**என்றும் அன்புடன்**
**பரா.ரதீஸ்**

# இம்மலரின் இதழ்களாக....

பக்கம்


ஆசியியல்

- ❋ நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி 01
- ❋ வல்லிபுர ஆழ்வார் பிரதமகுருவின் ஆசிச்செய்தி 02
- ❋ அருட்தந்தை சூ.டேமியன் அவர்களின் ஆசியுரை 03
- ❋ நெல்லண்டைப்பத்திரகாளியம்மன் பிரதமகுருவின் அருளாசியுரை 04
- ❋ மெதடிஸ் திருச்சபை முகாமைத்துவக் குருவின் ஆசிச்செய்தி 05
- ❋ முன்னாள் மாகாணக்கல்விப் பணிப்பாளரின் அருளாசி 06

வாழ்த்தியல்

- ❋ She has steered the school for 17 long years through very crucial, periods 07
- ❋ நவீன முகாமைத்துவப் போக்கிற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர் 08
- ❋ மணிவிழாக்காணும் மலர்மகளே வாழி ! 09
- ❋ Felicitation Message for Diamond Jubilee 11
- ❋ நல்ல அதிபர், நல்ல பாடசாலை 12
- ❋ எல்லோர் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றவர் 14
- ❋ துணிச்சல் மிக்க அதிபர் 16
- ❋ பாடசாலையை மேன்மையுறச் செய்தவர் 17
- ❋ சாதனை படைத்த அதிபர் 18
- ❋ மாணவர் முன்னேற்றத்திற்காய் அர்ப்பணித்தவர் 19
- ❋ சவால்களுக்கு முகங்கொடுத்து பாடசாலையைக் கட்டிக்காத்தவர் 20
- ❋ முரண்பாடற்ற சிறந்த நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கியவர் 21
- ❋ பாடசாலையைத் தனது உயிர்மூச்சென எண்ணிச் செயற்பட்டவர் 22
- ❋ ஆளுமை மிக்க முகாமையாளர் 23
- ❋ Message from Mrs.Padma Thangrajah 24
- ❋ Service Appreciation to the MGHS Principal 25
- ❋ Best wishes & Congratulations on a well Deserved Retirement 26
- ❋ Message from S.Yogendranathan 27
- ❋ Message of Felicitation from the Former Senior Sectional Head 29
- ❋ வியத்தகு சாதனைகளை நிலைநாட்டியவர் 30
- ❋ பாடசாலையின் மீள்புனரமைப்பிற்காக அயராது உழைத்தவர் 31
- ❋ தன்னலமற்ற அதிபர் 32
- ❋ கல்லூரியின் வரலாற்றோடு தன்னை இணைத்துக்கொண்டவர் 33
- ❋ கற்களை கவினுறு சிற்பங்களாக்கிய அபூர்வ உளி 34
- ❋ புத்திசாலித்தனமாகவும் சாதுரியமாகவும் செயற்பட்டவர் 35
- ❋ ஆளுமையின் வடிவம் 36
- ❋ ஆசிரியர்களிற்கு வழிகாட்டிய மேய்ப்பன் 37
- ❋ A dutyconscious Principal 38
- ❋ கல்லூரியின் உயர்விற்கு ஏணிப்படியாய் 40

## வாழ்வியல்


- சவால்களை எதிர்கொள்ளும் திறன்களைத் தன்னகத்தே கொண்டவர் 41
- மெதடிஸ்த பெண்கள் உயர்தரபாடசாலையின் ஒளி விளக்கு 43
- துணிவும் நேர்மையும் கொண்டு செயற்படும் திறன் கொண்டவர் 46
- சாதனை நாயகி செல்வமலர் சுந்தரேசனோடு (நேர்காணல்) 48
- அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் 1997 தொடக்கம் 58
- 2014வரை எம் பாடசாலை
- மணிவிழாக்காணும் மகத்தான சுந்தரமலருக்கு 64
- வடமராட்சியின் கலங்கரை விளக்கு அதிபர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் 66
- பண்பும் பாசமும் நிறைந்த ஆளுமை மிக்க சீமாட்டி 68
- பழைய மாணவியாய்.... 71


## கட்டுரையியல்


- நிர்வாகிகளுக்கு தலைமைத்துவ திறன்களை விருத்தி செய்தல் 73
- பெண்களும் சட்டமும் 78
- பாடசாலைச் சுகாதாரம் 81
- The value of Scouting 84
- குறுகிய காலத்தில் வணிக நிறுவனங்கள் சந்தையில் தோல்வியடைதல் 85
- இரு வாழ்த்து 88
- காலநிலை மாற்றம் பயிர்ச்செய்கையில் ஏற்படுத்தும் தாக்கம் 95
- பாரதி - ஒரு பன்முக ஆளுமை 101
- தமிழ்மொழி கற்பித்தலும் - மொழித்திறன் விருத்தியும்... 105
- Rama Namam 109
- புவிவெப்பமடைதலும் அதன் விளைவுகளும் ஓர் பார்வை 111
- மாணவர்களும் போக்குவரத்துச் சேவையும் 122
- நேர முகாமைத்துவம் 124
- பிள்ளையின் கல்வியில் பெற்றோரின் பங்கு 128
- Exploiting literature in the teaching of English as a second Language 132


## படைப்பியல்


- Reminiscence of Selvamalar Suntharesan 145
- சேவைக்காய் உதித்த செம்மல் 146
- வாழ்த்துப்பா 147
- என்றும் மறவா.... 148
- மலர் 149
- A question to mother nature 151
- செய்யாமல் செய்த உதவிக்கு 153



# ஆசியியல்



# அருளாசிச் செய்தி

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய சுவாமிகள்**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

**கல்விசார் பெருந்தகையீர்!**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு நிலையில் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் அவர்களுக்கு மணிவிழாமலர்வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். மனிதனை கண்ணுள்ள மனிதனாக ஆக்குவது கல்வி. கல்வியை வழங்குபவன் இறைவனாகப் போற்றப்படுகின்றான். இக் கல்விக்காக நீண்டகாலமாகப் பணியாற்றி அனைவரின் நன்மதிப்பையும் தன்வசப்படுத்தியவர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன். எளிமையான தோற்றம் இனிமையான பேச்சு, எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றும் செயல்திறன் அனைத்தையும் தனதாக்கி கல்விப்பணியாற்றிய அதிபர்களை வாழ்த்திப் பாராட்ட வேண்டியது நமது கடமை. இதை உணர்ந்த கல்விச்சமூகம் அதிபரை பாராட்டுவது இன்றைய இளம் ஆசிரிய சமூகத்திற்கு தெம்பூட்டுவதாக அமையும். அதிபர் தனது பணியினூடாக நன்மாணாக்கரை உருவாக்கிய பெருமைக்குரியவர். ஓய்வு நிலைக் காலங்களிலும் திருமதி,செல்வமலர் சுந்தரேசன் கல்விப்பணியும் சமூகப்பணியும் சமயப்பணியுமாற்றி இறை இன்பத்துடன் வாழ வாழ்த்து கின்றோம். இவரின் பணியை பாராட்டி நூல்வெளியிடும் பாடசாலைச் சமூகத்தை வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



# பிரதமகுருமார்களின் நல்லாசிகளும் நல் வாழ்த்துக்களும்

**பிரம்மஸ்ரீ. ச. க. சுதர்சனக்குரு J.P**
பிரதமகுரு,
அருளமிகு ஸ்ரீ வல்லிபுரஆழ்வார் சுவாமி கோவில்,
துன்னாலை, புலோலி.

இன்று தனது அறுபது அகவையில் இளைப்பாறும் அதிபர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் அவர்கள் ஆசிரியத்தொழிலில் சிறப்பாகப் பணிபுரிந்து, பதினேழு ஆண்டுகள் மேற்படி மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் தொடர்ச்சியாக அதிபராகப்பணிபுரிந்து கல்லூரியின் வளர்ச்சியில் அதிக பங்கு வகித்து, பலப்பல அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொண்ட துடன் கல்வித் தரத்திலும் மாணவிகளை வளம்பெறச்செய்து மேம்பாடடைய வைத்துக், கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர் என்றால் மிகையாகாது. ஸ்ரீவல்லிபுரமாயவனை தொடர்ச்சியாக வந்து வழிபட்டு ஆன்மீக உணர்வுகள் நிறைந்த இவர்கள் கல்லூரியின் மாணவிகளின் ஒழுக்கநெறிகளையும் ஆன்மீக நெறிகளையும் வளர்த்து தலைசிறந்த மாணவிகளாக வளர்த் தெடுத்த பெருமையும் கொண்டவர். அழியாத கல்விச்செல்வத்தை மாணவிகளுக்கு அளித்த பெருமைக்குரிய இவர்கள் இன்று ஓய்வு பெறுகின்றார். தனக்கே உரித்தான பாணியில் திறப்பட கல்லூரியை வழிநடத்தி வந்த அதிபரின் இடத்தை வேறு எவராலும் நிரப்பமுடியாது.

ஓய்வுநிலை அதிபரானாலும் அவரது அளப்பரிய சேவையை கல்லூரிச்சமூகம் மறக்கமாட்டாது.

இன்று ஓய்வுபெறும் அதிபர் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ்ந்து மேன்மேலும் பலபணிகள் புரிந்து சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வு வாழ்ந்து சிறப்புக்கள் அடைய ஸ்ரீவல்லிபுர மாயவனின் நல்லாசிகளையும் எமது நல்வாழ்த்துக்களையும் மிக மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கின்றோம்.

**நன்றி சுபம்.**



# ஆசியுரை

**அருட்தந்தை சூ.டேமியன்**
அஞ்சலியகம்,
நெல்லண்டை வீதி,
தும்பளை, பருத்தித்துறை.

மணிவிழாவையும் சேவைநலன் பாராட்டையும் கொண்டாடும் எனது மதிப்புக்குரிய அதிபர் உயர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் அவர்களுக்கு இறைஆசி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த 17 ஆண்டுகளாக வடமராட்சியில் புகழ்பூத்த மெதடிஸ்த பாடசாலையில் சிறந்த தாயாக, அர்ப்பணிப்புள்ள அதிபராக, கடமையாற்றி வந்துள்ளார். பாடசாலை நெருக்கீடுகள் பலவற்றைச் சந்தித்தபோதும் அதனுடைய தரம், மாணவர்களின் கல்வி, இணைசார் பாடங்கள், விளையாட்டு, ஆளுமை விருத்தி, நற்பண்புகள் போன்ற பல விழுமியங்களைக் கட்டிக்காத்து மாணவர்களை நெறிப்படுத்தி வளர்த்த பெருமை அதிபர் அவர்களுக்குரிய தனிச்சிறப்பம்ச மாகும். மேலும் கடமைக்காக மாத்திரமல்லாது பாடசாலையில் முழு வளர்ச்சிக்காக இரவு பகல் என்று பாராது தன்னையே கரைத்து பணி புரிந்துள்ளார். இவர் செய்த பணிகள் அனைத்துக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறி, இறையாசி வேண்டி நிற்கிறேன். எல்லாம் வல்ல பரம்பொருளின் ஆசி என்றும் தங்களுடன் இருப்பதாக.



# அருள் ஆசியுரை


**சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்**
பிரதிஅதிபர்,
யா/அம்பன் அ.மி.த.க.பாடசாலை.
பிரதம குரு,
நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்,
தும்பளை.

**பெ**ருமதிப்பு மிக்க ஸ்ரீமதி சுந்தரேசன் செல்வமலர் அவர்களை நான் எனதுபால பருவம் தொடக்கம் இன்றுவரை நன்கறிவேன். எமது அன்னை அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் முதல் மாணவியாக, பொறுப்புமிக்க மாணவியாக இன்று மிக உயர்ந்த பதவிகளுடன் திறன்மிகு கல்வித்தரத்துடன் மிளிர்வதை மனமகிழ்வோடு நினைத்துப் பார்ப்பதுண்டு. அதிபராக, சிறந்த அன்பு மிக்க தாயாக, தியாக சிந்தனைமிக்க சீர்மியராக அவர் திகழ்ந்து ஓய்வுநிலை பெற்று, மணிவிழா இன்று, அவரை வாழ்த்தி, ஆசிகூறி உவகையடைகின்றேன்.

பணிவும், பரிவும், பாசமும், நிறைபெருமதிப்பும் கொண்ட அன்னை செல்வமலர் அவர்கள் எதையும் வெளிப்படையாகப் பேசி விடயங்களை சாதிக்கவல்லவர். எந்த இடத்திலும் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றிடுவார். கணவன் கடமைகள், சகோதரர்கள் கடமைகள், சமூகக்கடமைகள் எல்லாவற்றையும் ஒருங்கே குறைவின்றி செய்து பெருமை பெற்றவர்.

பாடசாலை பெருவளத்துடன் முழு வசதியுடன் செயற்பாடு கொண்டமைவதற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். நெல்லண்டை பத்திரகாளிகோவில் பூசைவேளைகள் தவறாது தூய்மையுடன் வந்து வணங்கும் காட்சி என்கண்முன் இன்றும் நிற்கின்றது. எல்லாவளங்களும், நலங்களும் பெருகிட எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீபத்திரகாளி, ஸ்ரீவீரமாகாளி, வடபத்திரகாளி திருவருள் சுரக்கவேண்டுமென்று ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.

**(சுபமஸ்து)**



# ஆசிச் செய்தி

**Rev.K.M.றெஜினோல்ட் ஈஸ்பரன்**
முகாமைக்குரு,
மெதடிஸ்த திருச்சபை,
பருத்தித்துறை.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை தனது 200ஆவது மெதடிஸ்த தினத்தை கொண்டாவுள்ள இந்த வருடத்தில் மெதடிஸ்த திருச்சபை வடமராட்சியில் கல்விமான்களை உருவாக்கவும் பெண்களும் கல்வியினூடாக பல உயர் பதவிகளை வகிக்க வேண்டுமென்ற தூர தரிசனத்துடன் மெதடிஸ்த மிஷனரிகள் ஆரம்பித்த பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் கல்வி கற்று ஆசிரியராகி அதிபராகி பல பாடசாலைகளில் பணியாற்றி கடந்த 17 வருடங்கள் மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் அதிபர் பணியை மிகச் சிறப்பான முறையில் செய்து முடித்து ஓய்வு பெறுகின்றதான மதிப்புக்குரிய அதிபர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் அவர்களை வாழ்த்தி ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

உண்மையில் இப் பணியினைச் செய்வதற்கு நல்ல அறிவினையும், நல்லதிறனையும், மனப்பாங்கினையும் கொண்டிருந்தார் என்பதனை மறுக்கவோ, மறக்கவோ முடியாத ஒரு பேருண்மையாகும். இவற்றுக்கு மெய் வடிவம் கொடுத்து இக் கல்லூரியைக் கட்டுப்பாங்குடனும் மிகவும் கட்டுக் கோப்புடனும் ஆசிரிய வள அணியினரை சரியான ஆலோசனை வழிகாட்டலுக் கூடாக நெறிப்படுத்தி மாணவிகளை ஒழுக்கமுள்ளவர்களாக உருவாக்கியதிலும் உடல், உள, சமூக, ஆன்மீக விழுமியங்களை மதிக்கக் கற்றுக்கொடுத்து சகல துறைகளிலும் இணைப்பாட விதான (Extra Curricular Activities) செயற்பாடுகளிலும் மிளிரச் செய்த பெருமை மதிப்புக்குரிய அதிபர் அவர்களைச் சாரும் என்பது மிகையாகாது.

மதிப்புக்குரிய அதிபர் ஓய்வு பெற்றுச் செல்வது இக் கல்லூரிக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு என்றாலும் தவிர்க்கமுடியாதொன்றாகும். இருந்த போதிலும் ஓய்வு பெற்றுச் செல்லுகின்ற அதிபர் அவர்கள் தனது பணியினைத் திறம்பட செய்து முடித்த திருப்தியுடனும் இறைவனின் நிறைவான ஆசிர்வாதத்துடனும் மனமகிழ்ச்சியுடனும் மிகுந்த சமாதானத்துடனும் நிறைவான வாழ்வு வாழ வாழ்த்தி இறை மகன் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன்.



# குருவின் அருளாசி

**செல்வி. தி. பெரியதம்பி**
முன்னாள் மாகாணக் கல்விப்பணிப்பாளர்

வடமராட்சி மண்ணில் தடம்பதித்துள்ள தலைசிறந்த பாடசாலைகளில் யா/பருத்தித்துறை, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையும் ஒன்று என்பதில் மிகையாகாது. ஓய்வுபெறும் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களின் நீண்டகால வழிகாட்டலில் வளம்பல பெருக்கி தலைநிமிர்ந்து நிற்கும் இப்பாடசாலை தொடர்ந்தும் பல சாதனைகள் படைப்பதுடன் திறமைமிக்கவர்களையும் சமூகப்பற்றுள்ள வர்களையும் உருவாக்கி வலிமைமிக்க ஒரு சமுதாயத்தை தோற்றுவிப்பதில் தனது பங்களிப்பை நல்கும் என்பதில் ஐயமில்லை.

போர்க்காலச் சூழலில் வளங்கள் மிகவும் நலிந்த நிலையில் காணப்பட்ட பாடசாலையை 1997ம் ஆண்டு இவர்கள் பொறுப் பேற்று தனது அயராத உழைப்பினாலும் மற்றவர்களை அரவணைத்து காரியங்களைச் சாதிக்கும் திறனாலும் தேசிய மட்டத்தில் கணிக்கப்பட்டுள்ள நிலையைக் கொண்டு வந்துள்ளார். இவருடைய சிந்தனை, சொல், செயல் என்பவற்றில் எப்போதும் ஒரு உத்வேகம் காணப்பட்டது. இதன் காரணமாகவே இவர் இப்பாடசாலையை முன்நோக்கிச் செல்ல வழிகாட்டக்கூடியதாக அமைந்தது.

ஓய்வு காலத்தில் தனது சேவையை நினைவுகூரும்போது இவர் உள்ளத்தில் திருப்தியும் மகிழ்ச்சியும் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. இவர் தனது கல்விச்சேவையை ஓய்வுகாலத்தில் தொடரவும் ஆரோக்கியத்துடனும் மனநிறைவுடனும் வாழவும் வாழ்த்தி, இறையருள் கிட்ட வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

# வாழ்த்தியல்





# She has steered the school for 17 long years through very crucial, periods

**Mr.T.Gurukularajah**
*Hon.Minister of Education,*
*Cultural Affairs,*
*Sports and Youth Affairs,*
*North Province.*

I have pleasure in sending a message to be included in a Magazine to be published by the school community, on the eve of the retirement of the Principal of the Methodist Girls' High School, Point Pedro.

She has steered the school for 17 long years through very crucial, periods. The school was almost under siege, as for any function in the school, and the principal had an uphill task in entertaining the guests.

Credit must be given to her for rebuilding the school damaged by the tsunami She also got the damaged boundary wall abutting the road, re-built to give a majestic look befitting the school.

She has two more credits among others to adorn her success story. They are the well furnished auditorium and the acquisition of a bus for the school through a past pupil of the school.

Just after assuming duties as the Minister of Education for the Northern Province, I had occasion to pay the school a visit and I was impressed by the gaiety look not only of the school but also the smartness of the school band and the performance of the studets.

I wish her well in her retired life which too, I hope she will devote to the welfare of the community.



# நவீன முகாமைத்துவப் போக்கிற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்

**திரு. சி. சத்தியசீலன்,**
செயலாளர்,
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம், யாழ்ப்பாணம்.

வடமராட்சி கல்வி வலயத்தின் பருத்தித்துறை பிரதேசத்தில் உள்ள யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அதிபராக இருந்து ஓய்வுநிலைக்குச் செல்லும் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நவீன முகாமைத்துவ போக்கிற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து ஆசிரியர்களிற்கு சிறந்த தலைமைத்துவத்தினை வழங்கி, சமூகத்தினை உள்வாங்கி, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு, தனது பூரணமான பங்களிப்பினை வழங்கியமை பாராட்டத் தக்கதாகும். தனது சேவைக்காலத்தில் பாடசாலையின் மாணவர்களை பௌதீகவளங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததுடன் மாணவர்களை கல்வியிலும் புறகிருத்திய செயற்பாடுகளிலும் மாகாணமட்ட, தேசிய மட்டங்களில் சாதனை புரிந்து பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமையினை தேடித்தந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கம், கல்விச்சமூகம் என்பவற்றுடன் நல்லுறவினைப் பேணி பாடசாலையின் நிர்வாகத்தினை சிறப்பான முறையில் முன்னெடுத்துச் சென்றுள்ளார். நற்பண்புகளும் நல்லொழுக்கமும் நேர்மனப் பாங்கும் சமூக விழுமியங்களை மதித்து நடக்கும் மாணவ சமுதாயத்தை உருவாக்கிய இவரது கல்விப்பணியை வாழ்த்துவதுடன் அவர் ஓய்வுகாலத்தில் இன்னும்பல சமூகப்பணிகளை மேற்கொண்டு நீண்ட ஆயுளுடன் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்திட எல்லாம்வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.



# மணிவிழாக்காணும் மலர்மகளே வாழி !

**திரு. வ. செல்வராசா**
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.

ஆறொன்ப தாண்டு சித்திரையில் அவதரித்து
ஏழு பன்னிரண்டாண்டு ஆசிரியப் பணியேற்று
ஆறைந்து ஆண்டு அளவிலாப் பணியாற்றி
ஆறு பத்துக் காணும் அருமலரே நீ வாழி!

சித்திரையின் புத்திரியே செல்வம் நிறை மலரே
கற்றதனைக் கரும்பாக்கிக் கற்பித்த கலைச்சுடரே
எத்தனையிடர் வரினும் அத்தனையும் துரும்பாக்கி
எங்கள் குல மங்கையரை வாழவைத்தீர் நீ வாழி!

மெதடிஸ்த திருச்சபையின் பிதாமகனார்
மெருகூட்டி வளர்த்தெடுத்த பள்ளியனைத்
தளராது உயர்த்தித் தலைநிமிர வைத்தாயே
தலைசாய்த்துப் போற்றுகிறோம் வாழி! வாழி!

பழமை மிகு கட்டடங்கள் யாவும் நீக்கிப்
புதியதொரு வடிவத்தை ஆக்கித் தந்து
பொலிவுடனே பள்ளியினை அலங்கரித்துப்
புதுமை புகுத்தி வைத்தாய் வாழி! வாழி

பதினாறு வருடங்கள் அதிபராய்ப் பணிசெய்து
தளராது சேவை செய்த தவமகளே
நலிவுற்ற பள்ளியினைப் பொலிவுபெற வைத்து
நல்லதொரு ஆலயமாய் ஆக்கிவைத்தாய் வாழி! வாழி!


1984 ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்தாவில் ஆசிரியராகத் தடம்பதித்து மூன்று தசாப்தகாலம் ஆசிரியராகவும், அதிப ராகவும் பணியாற்றி மணிவிழாக் காணும் திருமதி.செல்வமலர் சுந்தரேசனை வாழ்த்துவதிற் பெருமிதமடைகிறேன்.

திருமதி.செ.சுந்தரேசனின் குறுகியகால ஆசிரியப் பணியினால் பயனடைந்த மாணவர்கள் பலர். ஆசிரியராக ஏழாண்டுகள் ஆற்றிய அயராத பணியே அவரை அதிபராகப் பதவியுயர்த்தியது. 1997 ஆம் ஆண்டு அவர் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் பாடசாலையின் அதிபராகப் பதவியேற்றார். நாட்டுச் சூழ்நிலையால் நலிவுற்ற இப்பாடசாலையை மீளக்கட்டியெழுப்புவதில் முனைப்புடன் செயற்பட்டார். மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை மேம்படுத்தியதுடன், மணல் மேடாய்க் காட்சியளித்த பாடசாலைக் கட்டடங்களையும் அகற்றிப் புதியதொரு தோற்றத்தைக் கொடுத்தார். இக்கல்லூரியின் தாபகரான பேர்சிவல் அடிகளாரின் சிந்தனையைச் செயலாக்குவதில் அவர் அயராது பாடுபட்டார்.

திருமதி.செ.சுந்தரேசனின் அயராத முயற்சியால் இப்பாடசாலை புதியதொரு தோற்றத்தைப் பெற்றது. நவீன யுகத்தை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களுக்கான கணினிக் கற்கை நிலையம், விஞ்ஞான ஆய்வுகூடம் என்பன கட்டியெழுப்பப்பட்டன.

பாடசாலைக்கெனப் புதிததொரு கேட்போர்கூடத்தையும் அவர் கட்டுவதற்காகப் பாடுபட்டார். அவரது அயராத முயற்சியால் இப்பாடசாலை இன்று புதியதொரு தோற்றத்துடன் காட்சி தருகின்றது. திருமதி.செ.சுந்தரேசனின் 16 வருட கால அதிபர் பணியின் செழுமையை இக்கல்லூரித் தோற்றம் தெளிவாகக் காட்டுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.



# Felicitation Message for Diamond Jubilee

**Mr.K.Premakanthan**
Additional Provincial Director of Education,
(Education Development)
Northern Province.

I have the pleasure to have the opportunity to release felicitation message for Diamond Jubilee to Mrs.Selvamalar Suntharesan , Principal , J/Methodist Girls' High School, Point Pedro on her 60th Birthday.

She is very brilliant , intelligent and enthusiastic scholar who always think for the prosperity of her students, follow teachers and school.

She always treat her students as her own daughters. She always pray for the prosperity of the students of her school when offering poojas at temples.

During the periods of disaster, she very worked hard to resume normaly from the unexpected destiuction. She has been very lucky to facilitiate the reconstruction of J/Methodist Girls' High School, Point Pedro, in the period of her regame as the Principal.

Definitaly she will be very proud in producing a lot of scholars to empower Tamil women in the Vadamaradchy area by matercalizing the vision of weslian Methodist Mission.

May god bless her by providing her and her family a prosperous and peaceful future during her retirement life.



# நல்ல அதிபர் , நல்ல பாடசாலை

**ஆ.ராஜேந்திரன்**
மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
(நிர்வாகம்)
வடமாகாணம்.

நல்ல அதிபர் உள்ள கூடாத பாடசாலையும் இல்லை கூடாத அதிபர் உள்ள நல்ல பாடசாலையும் இல்லை" என்பர் கல்வியியலாளர்கள். இந்த நல்ல பாடசாலையின் பண்புகளாக சிலவற்றைக் குறிப்பிடுகின்றனர். அப்பாடசாலையில் நல்ல ஓர் அதிபர் கடமையில் இருப்பார் ; அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர் குழாம் ஒன்று இருக்கும்; அப்பாடசாலை மீதான சமூக மதிப்பு மிக உயர்வானதாக இருக்கும் ;மாணவர்களின் பாடசாலை மீதான நேயம் உன்னதம் பெற்றிருக்கும் ; மாணவரின் தினசரி வரவு உயர்ந்த மட்டத்தில் பேணப்படும் ; பொதுப்பரீட்சை அடைவுகள் தொடர்ச்சியாக அதரிகரித்துச் சென்று உயர்நிலை பெற்றிருக்கும்; பாடசாலையின் பௌதிக வளங்கள் மட்டுமல்லாது அப்பாடசாலையின் பண்புத்தரமும் மேம்பட்டிருக்கும்.

நல்ல அதிபர் ஒருவர் உயர்வான சமூக மதிப்பைப் பெற்றிருப்பார். அதிபர் ஆசிரியர் உறவு மேம்பட்டிருக்கும் மாணவர் மீதான தனிப்பட்ட மற்றும் கல்வி நலன்சார் அக்கறை சிறப்பானதாக இருக்கும். இவரது கடமைக்காலம் பாடசாலையின் வரலாற்றில் விதந்து பேசப்பட்டிருக்கும்.

இவ்விரு பிரதான அம்சங்களுடன் நான் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையை இணைத்துப் பார்க்கின்றேன். மெதடிஸ்த திருச்சபையால் உருவாக்கப்பட்ட நீண்ட நிலைத்த கல்விப்பாரம்பரியத்தைக்கொண்ட இப்பாடசாலையை நேரில் தரிசிப்பவர்கள். இப்பாடசாலை மீது அக்கறைகொண்டு அதனை அவதானித்து வருபவர்கள் இந்த நல்ல முடிவிற்கே வருவர். இப்பாடசாலையின் உயர்வுக்காக உழைத்த நல்ல பல அதிபர்கள் வரிசையில் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் அவர்கள் சிறப்பிடம் பெறுகின்றார். முன்னைய அதிபர்களின் கடமைக்காலத்தை பற்றி அறிந்துள்ளேன். ஆனால் இவ்வதிபரின் ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட கடமைக்காலத்தில் இவரையும், இவரது கடமைக் காலத்தையும் மதிப்பிடும் சந்தர்ப்பங்கள் பல எனக்குக்கிடைத்தன. வெளிவாரி மதிப்பீடுகளின்போது, எம்முடன் வருகைதந்த

அலுவலர்களும் இப்பாடசாலை, அதன் அதிபர் தொடர்பாக உயர்வான மதிப்பீட்டினையே வெளிப்படுத்திவந்தனர்.

தவிர, இவரது தனிப்பட்ட ஆளுமைப்பண்புகள் பல விடத்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தனது மாணவிகளின் நலன்சார்ந்து அவர் எடுக்கும் தீர்மானங்கள்; தனது பாடசாலையின் தேவைகளை எவ்விடத்தும் தயக்கமின்றி வெளியிடும் தன்மை ; இப்பாடசாலையின் உயர்வுக்காய் அயராது உழைத்ததன்மை ; இப்பாடசாலையின் மாணவிகளை தனது சொந்தப்பிள்ளைகள் போல் அன்பு பாராட்டியமை; பாடசாலையின் வெற்றிகளில் குதூகலித்தது மட்டுமன்றி; தோல்விகளில் துவண்டுவிடாமல் தொடர்ந்து முயற்சித்தமை எனப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

எப்போதும் இன்முகத்துடன் எவரையும் வரவேற்கும் பண்பு இவருடன் கூடப் பிறந்ததொன்று இவரது அன்பான உபசரிப்பைப் பெற்ற எவரும் அதனை என்றும் நினைவில் வைத்திருப்பர் ; கல்விக்கான புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்று பெற்ற அனுபவங்களை ஏனைய பாடசாலைகளுடன் பகிர்ந்து அவற்றின் முன்னேற்றத்திற்கு உதவியவர். சிறந்த அதிபருக்கான விருதினைப் பெற்றவிடத்தும் என்றுமே அடக்கத்தை வெளிப்படுத்தியவர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக சிறந்த மனிதப் பண்புகளைக் கொண்டிருந்தவர். சிறந்த ஒரு குடும்பத்தில் பிறந்து, மிகச்சிறந்த ஓர் இடத்தில் வாழ்க்கைப்பட்டாலும் என்றுமே அவர் தற்பெருமை பாராட்டியது கிடையாது. இத்தகைய பண்புகள் மிக்க இவரது பதவிக்காலம் யா/மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை வரலாற்றில் பதிவுசெய்யப்படும் எனத்திடமாக நம்பலாம். அவர் தனது துணைவருடனும் உறவுகளுடனும் நீண்டகாலம் மகிழ்வாக வாழவேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்.



# தனது கண்ணியமான நேர்மையான துணிச்சல்மிகு சேவையால் எல்லோர் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றவர்

**திரு. சி. நந்தகுமார்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
வடமராட்சி.

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அதிபராக பதினேழு ஆண்டுகள் தொடர் சேவையாற்றி இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்கின்ற திருமதி. செல்வமலர் சுந்தரேசன் அவர்களின் சேவை நயப்பையொட்டி வெளிவருகின்ற மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இக் கல்லூரியின் நீண்ட வரலாற்றில் கூடுதல் காலம் அதிபராகப் பணியாற்றியவர் என்ற பெருமையை திருமதி. செல்வமலர் சுந்தரேசன் அவர்கள் பெற்றிருப்பது பாராட்டுக்குரியது.

தனது 30வருட கால கல்விச் சேவையில் ஆசிரியையாக, அதிபராக நிறைவான பணியாற்றி கௌரவத்துடனும், மதிப்புடனும் ஓய்வு நிலை பெறுகின்ற அதிபர் திருமதி செ.சுந்தரேசனுக்கு எனது பாராட்டுதல்கள்.

1984ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் ஆசிரியர் பணியை ஆரம்பித்து நல்லாசிரியையாக சேவையாற்றிய பெருமைக்குரியவர். 1991ம் ஆண்டு இலங்கை அதிபர் சேவையில் இணைந்து யாழ் பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் தனது அதிபர் பணியை ஆரம்பித்து யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையோடு 23 ஆண்டுகள் அதிபர் சேவையை நிறைவு செய்த பெருமைக்குரியவர்.

சேவை மூப்பு, திறமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு IIIக்கு 2011ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட சிறந்த சேவையாளருக்கு எனது வாழ்த்துக்கள்.

தனது கண்ணியமான நேர்மையான துணிச்சல்மிகு சேவையால் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றுள்ள திருமதி செ.சுந்தரேசன் இன்று ஓய்வு பெற்றுச் செல்வது இக் கல்லூரிக்கு பாரிய இழப்பாகவே உள்ளது.

யுத்த சூழ்நிலையில் இக் கல்லூரி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இயங்கிய காலத்தில் கல்லூரியை பாதுகாத்து வளர்த்த பெருமைக்குரியவர். சுனாமி அழிவிலிருந்து கல்லூரியை மீட்டெடுத்து இன்று அழகுடனும், கம்பீரத்துடனும் நிமிர்ந்து காட்சியளிப்பதற்கு அத்திவாரமாக திகழ்ந்தவர் ஓய்வு பெற்றுச் செல்வது இக் கல்லூரி சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகவே உள்ளது.

ஆங்கில மொழி மூலமான துணிவுடன் ஆரம்பித்து சாதாரண தரப் பரீட்சையிலும், உயர்தரப் பரீட்சையிலும் உயர்வான சாதனைகள் படைத்த சாதனையாளர். வடமராட்சி வலயத்தின் உயர் சாதனைகளுக்கு பெருமை சேர்த்த கல்லூரியின் முதல்வர். கல்வி பெறுபேற்று சாதனைகளிலும் இணைப்பாட விதான சாதனைகளிலும் வடமராட்சியின் முன்னிலை பெற்ற பாடசாலையின் முகாமையாளர். இவரது அயராத உழைப்பினால் மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை உயர் நிலை பெற்றுள்ளதை மறுக்க முடியாது.

இவரது அர்ப்பணிப்பான கல்விப் பணிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்து ஓய்வு நிலையில் நலமுடனும் மகிழ்வுடனும் குடும்பத்தோடு நீடித்தகாலம் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.



# துணிச்சல் மிக்க அதிபர்

**திரு. சி. புஸ்பலிங்கம்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி),
கல்வி அமைச்சு,
வடமாகாணம்.

**யா**/மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலையில் 17 ஆண்டுகள் சேவையாற்றி அகவை 60பதில் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திருமதி. செல்வமலர் சுந்தரேசன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்வடைகின்றேன். பாடசாலைகளின் நிர்வாகமும், முகாமைத்துவமும் சிக்கலடைந்து வரும் காலங்களில் சிறப்பான அதிபர் பணியை வழங்கியிருந்தார். நான் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலையில் ஆசிரியராக இருந்த காலத்திலேயே திருமதி. செ.சுந்தரேசன் அதிபராக வந்து சேர்ந்தார். அவர் மிகவும் சுறுசுறுப்பாகவும் ஈடுபாட்டுடனும் பாடசாலையை முகாமை செய்து வந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. தனது பாடசாலைக்குத் தேவையான வளங்களைச் சேர்ப்பதில் ஆர்வம் கொண்டவராக இருந்தார். இவரது காலத்தில் பல்வேறு வளங்கள் பாடசாலைக்கு சேர்க்கப்பட்டமை பாராட்டுக்குரிய விடயமாகும். இக்கட்டான காலங்களில் கூட பாடசாலையை சிறப்பாக நடாத்தி வந்தமை மறக்க முடியாத விடயமாகும். மேலும் துணிவாக கருத்துக்களைப் பல்வேறு கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் முன்வைப்பதற்கு பின் நிற்பதில்லை. மேலும் க.பொ.த.உயர்தரத்தில் கணித, உயிரியல் பிரிவுகளில் ஆங்கிலமொழி மூல வகுப்புக்களை நடாத்தி வடமராட்சி கல்வி வலயத்தில் வெற்றிகண்ட ஒரு பாடசாலையாகத் திகழவைத்த பெருமை இவரது துணிச்சலான முடிவுகளுக்கு கிடைத்த வெற்றியாகும். மேலும் பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்காகவும் கல்வி, இணைப்பாட விருத்திக்காகவும் பல திட்டங்களைச் செயற்படுத்தி வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். அத்துடன் பாடசாலை ஆசிரியர்களுடனும் அயல்பாடசாலை அதிபர்களுடனும், கல்வி நிர்வாகிகளுடனும், ஏனைய அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுடனும் நல்ல உறவை வளர்த்து வந்துள்ளார். இதேபோல் பாடசாலை மாணவிகளின் பெற்றோர்களுடன் சிறப்பான தொடர்பினைப் பேணி பாடசாலையை சிறப்பான ஒரு நிலையில் வைத்திருந்துள்ளார் என்பது பாராட்டுக்குரியதாகும்.

இத்தகைய பல்வேறு சிறப்பும் ஆளுமையுமுள்ள அதிபருக்கு மணிவிழா எடுப்பது சாலச்சிறந்ததாகும். இப்பணியை மேற்கொள்ளும் குழுவினருக்கு எனது பாராட்டுக்கள் உரித்தாகுக. மேலும் மணிவிழா நாயகிக்கு எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**நன்றி.**



# பாடசாலையை மேன்மையுறச் செய்தவர்

**Mr.S.Amirthalingam**
*President, National College of Education Jaffna.*
*B.Sc.(Hons)Dip.in.Edu.*
*PGDEM (Merit)*
*M.Sc.in.information*
*M.Sc.in applied statistics.*

**யா**/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் அதிபர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

யாழ்ப்பாணத்தின் வடமராட்சியில் புகழ்பூத்த பெண்கள் உயர்தர பாடசாலையொன்றின் அதிபராக கடமையாற்றி மணிவிழாக் காணும் மணிவிழா நாயகியின் சிறப்புக்கள் பலவாகும். யுத்தத்தினால் பாதிப்படைந்த பாடசாலையின் கட்டுமானப் பணியை சிறப்பாக மேற்கொண்டு முன்பு இருந்த பாடசாலையை விட மேன்மை பெறச் செய்த பெருமை அம்மையாரையே சாரும். அம்மணியின் அர்ப்பணிப்பும், விடாமுயற்சியும், பாடசாலை மீது கொண்ட பற்றுறுதியும், பாடசாலையில் மாணவர்களின் கலைத்திட்ட இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளில் உன்னதமான தேர்ச்சிமட்டத்திற்கு கொண்டு வருவதற்கு வழி வகுத்தது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். மேலும் அவர் தேசிய கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பட்டப்பின் கல்வி முகாமைத்துவக் கற்கை நெறியினை சமகாலத்தில் என்னுடன் பயின்றவர். கற்கும் காலத்திலேயே கற்கை நெறி தொடர்பான செயற்பாடுகளில் ஆர்வத்துடன் செயற்பட்டதனூடாக சகல விரிவுரையாளர்களாலும் மாணவ சகபாடிகளாலும் பாராட்டுப் பெற்றதனை இவ்விடத்தில் நினைவுகூர்கின்றேன். கல்வித்துறையில் அயராது பணியாற்றிய அவரின் சேவைநலன் அனைவரும் அறியவேண்டியது அவசியமாகும். அவ்வாறாக இந்த மணிவிழா அமைய வேண்டும். என இறைவனை பிரார்த்திப்பதுடன் அவர் தமது குடும்பத்தோடு என்றும் நல்லாசிகள், வளங்கள் பலவற்றைப் பெற்று வளமுடன் வாழ மனதார வாழ்த்துகின்றேன்.



# சாதனை படைத்த அதிபர்

"தேசமானிய" சபா ரவீந்திரன் J.P.U.M
"Attorney-At-Law, Notary Public,
Chairman, Urban Council,
Point Pedro.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் தொடர்ந்து பதினாறு வருடங்களுக்கு மேலாக கல்விப் பணிபுரிந்து சாதனைகள் பலவற்றை நிலைநாட்டி "அகவை அறுபதில்" காலடி எடுத்து வைக்கும் பெரும் மதிப்புக்குரிய அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். வடமராட்சியில் மிகப் பிரபல்யம் பெற்ற பாடசாலைதான் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகும். இந்தப் பாடசாலையின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் எனக்கு அதிக அக்கறை உண்டு.

போரினாலும், இயற்கை அனர்த்தத்தினாலும் பாடசாலைக் கட்டிடங்கள் யாவும் சிதைந்து போக, அதனை மீளக்கட்டியெழுப்பி கல்வித்துறையிலும், விளையாட்டுத் துறையிலும் தலை நிமிரச் செய்த பெருமை அதிபர் செல்வமலரையே சாரும். மிகக் கண்டிப்பான நிர்வாகம், ஒழுக்கம் மிக்க மாணவ சமுதாயம் என்பவற்றை வெற்றிகரமாக வளர்த்தெடுத்த அதிபர் இன்று மணிவிழா காண்பதையிட்டு நாங்கள் எல்லோரும் மனநிறைவு அடைகின்றோம். திருமதி.செல்வமலர் சுந்தரேசன் அவர்களின் நல்வழிகாட்டலும், சிறந்த ஆலோசனைகளும் தொடர்ந்தும் எமது கல்விச் சமுதாயத்திற்குக் கிடைக்கும் என பெரும் நம்பிக்கை கொள்கிறேன். திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களை சாதனை படைத்த அதிபர்கள் வரிசையில் முன்னணி வகிப்பதில் கல்விப் புலமே பெருமை அடைகின்றது.

கல்வித் துறையிலே முத்திரை பதித்து வரும் வடமராட்சியில், அதிபர் செல்வமலர் அவர்கள் அளப்பரிய சாதனைகள் பலவற்றைப் புரிந்து சாதனை நாயகியாக மிளிர்கின்றார். என்றும், எங்கும், எவருடனும் இன்முகம் காட்டி பாடசாலைத் தேவைகளை நிறைவேற்றுவதில் கூட இவருக்கு நிகர் இவரே. வாழ்க இவரது கல்விப்பணி. வளர்க இவரது சமூகப்பணி.




# தனது ஆற்றல்களையும் திறன்களையும் மாணவர் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்தவர்

**திருமதி சோதிநாயகி பாலசுந்தரம்**
பிரதிப்பரீட்சை ஆணையாளர்,
(ஓய்வுநிலை)

1984 ஆம் ஆண்டு செல்வி செல்வமலர் பரமலிங்கம் தனது ஆசிரியப் பணிக்காக முதன் முதலில் காலடி எடுத்து வைத்த இடம்தான் கொ/விவேகானந்தாக் கல்லூரி. அன்று தொட்டு இன்றுவரை அவரிடம் நான் காணும் அற்புதமான பண்பு தன்னலமற்ற சேவை உணர்வு. விவேகானந்தா கல்லூரியில் அவருடன் சேர்ந்து கடமையாற்றிய காலங்களில் அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. அவர் தனது ஆற்றல்களையும் திறன்களையும் மாணவர் முன்னேற்றத்துக்காக அர்ப்பணித்துப் பணிபுரிந்த விதம் பாராட்டுக்குரியதாகும். கல்விசார் செயற்பாடுகளில் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும்கூட தனது அற்புதமான ஆற்றல்களை வெளிப் படுத்தியவர். பாடசாலையில் எந்தவொரு நிகழ்வானாலும் செல்வி பரமலிங்கமும் அதில் இணைக்கப்பட்டிருப்பார்.

'எப்போதும் தயாராக இரு' என்ற மந்திரத்தை அவர் தன்னிலே வைத்துப் பணியாற்றினார். எந்நேரமானாலும் எந்த வேலையானாலும் சொன்னதும் செய்யத் தயாராக இருந்த அவரின் மனப்பாங்கு பாராட்டப்பட வேண்டியது. இதனாலேயே அவர் பாடசாலையில் அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர், பழைய மாணவர், பாடசாலைச் சமூகம் என அனைவரினது மனதிலும் தனக்கெனவொரு தனியிடத்தைப் பெற்று மதிப்புக் குரியவராக விளங்கினார். மாணவரின் கல்வியிலும் ஆளுமை விருத்தியிலும் அக்கறை காட்டுவதோடு மட்டுமன்றி தன்னையும் தான் சார்ந்தவர்களையும் ஊக்கமளித்து முன்னேற்றுவதிலும் அக்கறையும் ஆர்வமும் கொண்டிருந்தார். செல்வி பரமலிங்கம், திருமதி சுந்தரேசனாகி, அதிபர் தரம் என்ற உயர்வையும் பெற்றே விவேகானந்தாவிலிருந்து யாழ் மண்ணிற்குச் சென்றார்.

இதனால் கொழும்புவாழ் மாணவர்கள் அவரது சேவையை இழந்த போதிலும் யாழ்ப்பாண சமூகம் அவரது திறமைகளை நன்கு பயன்படுத்திக் கொண்டது மகிழ்ச்சி அளிக்கிறது. இன்று ஒய்வு நிலை அடைந்தாலும் இவரின் ஆத்ம சக்தி அவரை என்றும் ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் வாழவைக்கும். ஏனெனில் நல்லன நினைத்து நல்லன செய்வார் நன்மை பெறுவது நியதி. அவரின் எதிர்கால வாழ்வும் கடந்த காலங்கள் போன்றே இனிமையும் மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் நிறைந்ததாக அமைய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.



# பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இன்னோரன்ன சவால்களுக்கு முகம் கொடுத்து பாடசாலையைக் கட்டிக்காத்தவர்

**கவிஞர் இ.த.ஜெயசீலன்**
பிரதேச செயலர்,
வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை.

ஈழமணித் திருநாட்டின் சென்னியாம் யாழ்ப்பாணத்தின் மூளை போன்ற வடமராட்சிப்பதியின் அறிவுச்சுடரை பிரகாசிக்கச் செய்யும் அறிவாலயங்களில் தலைசிறந்த ஒன்று யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை. மிக நீண்ட வரலாறும் பாரம்பரியமும் எண்ணற்ற சாதனைகளையும் கொண்ட இம் மகளிர் கல்லூரியின் வியத்தகு அதிபர்களில் ஒருவராக தற்போது பணிபுரிபவர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் அவர்கள். அவர்கள் கடந்த 17 ஆண்டுகளாக இக்கல்லூரிக்கு ஆற்றிவரும் சேவை அளப்பரியது. கண்ணியமும் கட்டுப்பாடும் மிகுந்த அதிபர் அவர்களின் காலத்தில் பாடசாலை இன்னோரன்ன சாதனைகளை நிலைநாட்டி உயர்ந்தோங்கியது என்றால் மிகையில்லை. யுத்த காலத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தில் பாடசாலை இயங்கிய காலத்தில் பல்வேறு நெருக்கடிக்களுக்கு மத்தியில் இன்னோரன்ன சவால்களுக்கு முகம் கொடுத்து பாடசாலையை கட்டிக் காத்தவர். இவருடைய காலப்பகுதியிலேயே பாடசாலை அதிகளவு பௌதிக வளங்களை பெற்றுக்கொண்டது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தனித்துவமான சீருடையை அறிமுகப்படுத்தி அழகு பார்த்தவர். க.பொ.த உயர்தரப்பிரிவில் ஆங்கில மூல கற்பித்தலை வடமராட்சியில் முதலில் ஆரம்பிக்க காரண கர்த்தாவாக விளங்கியவர் இவர். தனது ஆற்றலாலும் தனித்துவத்தாலும், விடாமுயற்சியாலும் கல்லூரியின் வளர்ச்சியில் அதிக ஈடுபாடு காட்டியவர். இவருடைய காலப்பகுதியில் பாடசாலை புதுப்பொலிவும் புதுமெருகும் பெற்றதுடன் மிகச் சிறந்த அழகான இருமாடியுடன் கூடிய கட்டடம் பாடசாலையின் சொத்தாக கிடைக்கப்பெற்றது.

இத்தகைய பெருமைகளுக்குரிய பெருமாட்டி திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்கள் மணிவிழா காண்பதையிட்டு பெருமகிழ்வடைவதுடன் அவரை வாழ்த்திப் பணிகிறேன். அதிபரின் நல்வாழ்வுக்காக எல்லாம் வல்ல இறையருளை வேண்டிப்பணிகிறேன்.




# முரண்பாடற்ற சிறந்த நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கியவர்

**திரு. ச. ஸ்ரீராமச்சந்திரன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
பருத்தித்துறை.

*யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் அதிபராக 17 வருடங்கள் தன்னலமற்ற அர்ப்பணிப்பான சேவையாற்றி ஓய்வு பெறும் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வடமராட்சியின் கல்விப் பாரம்பரியத்தில் நூற்றுத்தொண்ணூறு வருட வரலாற்றுடன் சிறந்த உயர்தர பாடசாலையாக விளங்கும் யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் உழைத்த அதிபர்கள் வரிசையில் திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களுக்கும் சிறப்பான இடம் உண்டு என்பதில் ஐயமில்லை.*

*அவர் அதிபராக இப் பாடசாலையைப் பொறுப்பேற்ற பின்பு முரண்பாடற்ற சிறந்த நிருவாகக் கட்டமைப்பினை உருவாக்கி உயர்ந்த விழுமியம்மிக்க கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு மாணவர்களை வளர்த்து மேம்படுத்தினார் என்றால் மிகையாகாது. மாணவர் சிறந்த கல்வியை பெறும் அதே நேரத்தில் கலை, கலாசாரம், ஒழுக்கம், விளையாட்டு, சாரணியம் ஆகிய சகல துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்குடன் ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் அரும்பாடுபட்டார். தனிப்பட்ட ரீதியாக சகல மாணவர்களிடமும் அதீத அக்கறையுடன் செயற்பட்டார்.*

*மாணவர், ஆசிரியர், கல்வித்திணைக்கள அதிகாரிகள், பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் ஆகிய யாவருடனும் முரண்பாடின்றி சுமூகமான நல்லுறவினைப் பேணி பாடசாலையின் வளர்ச்சியில் அதிக அக்கறையுடையவராகச் செயற்பட்டவர். இப்பாடசாலையின் வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டவர். பாடசாலைக்குத் தேவையான பெரும்பாலான வளங்களைத் தேடிச்சேர்த்துள்ளார். நாட்டில் நிலவிய போர்க்காலச் சூழலில் அழிவடைந்த கட்டடங்களை ஈடுசெய்யும் வகையில் நிறைவான அழகான கட்டடங்களை நிருமாணித்து தேவைகளையும் பூர்த்தி செய்து அழகிய தோற்றம் கொண்ட பாடசாலையாக உயர்த்தியுள்ளார். தான் கற்ற பாடசாலையிலே சிறந்த அதிபராகச் சேவையாற்றி ஓய்வுபெறும் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்கள் ஓய்வு காலத்தில் நலமாக, சிறப்புடன் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.*



# பாடசாலையை தனது உயிர் மூச்செனை எண்ணிச் செயற்பட்டவர்


**N.Theivendrarajah**
*SLEAS,*
*Principal,*
*J/Hartley College,*
*Point Pedro.*

தற்காலத்தில் 17 வருடங்கள் தொடர்ச்சியாக ஒரு பிரபல பாடசாலையில் பணியாற்றுவதென்பது மிகப் பெரிய சவாலாகும். திருமதி.செல்வமலர் சுந்தரேசன் புகழ்பூத்த பாடசாலையான மெதடிஸ்த மகளிர் கல்லூரியின் அதிபராக இக்கட்டான காலகட்டங்களினூடாக இப்பாடசாலையை சிறப்பாக வழிநடத்திச் சென்றுள்ளார். தனது காலத்தில் பாடசாலைக்கு பெறக்கூடிய அனைத்து வளங்களையும் தொடர்பாடல் திறன், தனித்துவமான ஆளுமை என்பவற்றினால் பெற்றுக் கொண்டார். பாடசாலையின் மீது அவர் கொண்டிருந்த விசுவாசம், அவரது கடின முயற்சிகளை வெற்றிபெறச் செய்தது. இறைநம்பிக்கையில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு பாடசாலையின் எல்லா மட்டங்களிலும் பரவியிருந்தது.

அவரது விருந்தோம்பல் பண்பும், கள்ளம் கபடமற்ற வெளிப்படையான பேச்சும் அவரது உயர்வுக்கும் பாடசாலையின் மேன்மைக்கும் அடிநாதமாக விளங்கின. அவரது நேர்மை கேள்விக்கு அப்பாற்பட்டது. பாடசாலையின் பௌதிக வளர்ச்சிக்கு சமாந்தரமாக கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாட்டிலும் அடைந்த வளர்ச்சி பாராட்டிற்குரியது.

யுத்த காலத்திலும் ஒரு மகளிர் கல்லூரியை தொய்ய விடாது பேணிப் பாதுகாத்தமை அவரது துணிச்சலுக்கும், திறமைக்கும் எடுத்துக்காட்டாகும். தனக்குச் சரியென்று பட்டதை தயக்கமோ, அச்சமோ இன்றி எவ்விடத்திலும் முன்வைக்கும் பாங்கு அவருக்கே உரியது சிறப்பம்சமாகும்.

இந்தப் பாடசாலையை தனது உயிர் மூச்செனை எண்ணி செயற்பட்ட அவருக்கு மட்டுமன்றி அதற்கு துணை நின்ற அவரது துணைவர் கலாநிதி.வை.சுந்தரேசன் அவர்களுக்கும் பாடசாலைச் சமூகம் நன்றியுடையதாக இருக்கும் என்பதிலே ஐயமில்லை. ஒருவருக்கு மற்றவர் துணையாக இருக்கும் அவர்களது ஓய்வுகாலம் நலமாகவும், மகிழ்ச்சியாகவும் அமைய வேண்டுமென எங்கள் கல்லூரி ஆசிரியர் மாணவருடன் சேர்ந்து தங்களை வாழ்த்துவதோடு இறையாசியையும் வேண்டி நிற்கின்றோம்.



# ஆளுமை மிக்க முகாமையாளர்

**வே.தி.செல்வரத்தினம்**
ஓய்வு நிலைப்பிரதிதிச் செயலாளர்,
வடமாகாணக் கல்வி அமைச்சு.

திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களை யான் கற்பித்த பாடசாலையில் க.பொ.த (உ/த) வகுப்பிற்கு இந்து நாகரீகம் கற்பிக்கும் ஆசிரியராகக் கண்டேன். வகுப்பொழுங்குகளைப் பேணும் ஆளுமை மிக்க ஆசிரியராக இருந்தமை இவர் பிற்காலத்தில் ஒரு சிறந்த முகாமையாளராக இருப்பார் என்று எண்ண வைத்தது. அவர் கற்பித்த பாடசாலைகளான கொ/விவேகானந்தா ம.வி, யா/பெரியபுலம் ம.வி என்பவற்றில் ஒழுக்காற்றுகைக் குழுவில் கடமையாற்றியமை அவரது ஆளுமை வளர்ச்சியில் பங்களித்தது என்றால் மிகையாகாது. இவர் பரீட்சையில் இலங்கை அதிபர் சேவையில் சேர்ந்து, பின் இலங்கை கல்விநிர்வாக சேவைப் பரீட்சையிலும் சித்தியடைந்தமை இவரது நுண்மதிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

தான் கற்ற பாடசாலையொன்றில் அதிபராகக் கடமையாற்றக் கிடைத்தமை இவரது சிறந்த ஆசிரிய சேவைக்கு ஆண்டவனால் அளித்த வெகுமதி என்றால் மிகையாகாது. நான் பருத்தித்துறைக் கோட்டக்கல்வி அலுவலராகவும் பின்பு வடமராட்சி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றிய காலத்தில் திருமதி.செ.சுந்தரேசனின் முகாமையைப் பார்வையிடக் கூடியதாக இருந்தது. நெகிழ்ச்சித்தன்மை அதேநேரத்தில் ஒழுங்காற்றலில் உள்ள இறுகியதன்மை, பாடப் புலத்தில் உள்ள அறிவு, தனது சக ஆசிரியர்கள், ஊழியர்களை தனது வலைப்பின்னலில் வைத்திருந்தமை என்பன இவர் இப்பாடசாலையின் சிறந்த முகாமையாளர் என்பதை சமூகத்திற்கு எடுத்துக்காட்டியது.

இவர் ஓர் ஆசிரிய குடும்பத்தில் பிறந்தமையும் துணைவர் திரு.சுந்தரேசன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில பிரிவின் தலைவராக இருந்தமையும் இவரது பணிக்கு பெரிதும் உதவின. சிறந்த ஆங்கிலப் புலமைமிக்க இவரின் துணைவரின் அறிவு இவருக்கும் பற்றியதால் பாடசாலை விழாக்களில் இவரது ஆங்கில உரை மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்க ஒரு உந்துதலாக இருக்கும். தனது ஓய்வு காலத்தில் தொடர்ந்தும் கல்விக்குச் சேவையாற்றியதுடன் சுக பலத்துடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் ஆசிர்வதிப்பார். இவர் ஆற்றிய சேவைக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.



## Message from Mrs.Padma Thangarajah

**Mrs.Padma Thangarajah**
Patron,
Past Pupils' Association (Sydney Branch).

I have great pleasure in writing a few words about the outgoing principal Mrs. Selvamalar Suntharesan of Methodist Girls' High School, Point Pedro. She has been serving as principal in this school for the last seventeen years. In her tenure as principal, she has done tremendous work for the upliftment of the school. It was a time of disturbances and turbulences due to the ethnic war that took place in the country. She overcame the challenges with courage and carried out her duty well.

She strived hard to bring back the school to its old grandeur and the succeeded with the support of various sources who did the funding. I am proud to say that we are one of them. She managed to give the school a new outlook and maintained its dignity.

In spite of the hardships the school underwent, the educational standard of the school did not diminish. This was purely due to the strict supervision of the principal and her efficient staff.

The Principal proved herself equally eminent like the past principals namely miss.Mary chinniah, miss.M.Arumugam, Mrs.T.Ariaratnam and a host of others who toiled hard for the advancement of this great institution. Mrs.Selvamalar, through countless efforts still kept up the educational institution with its past pomp and glory true to the school motto 'onward upward Towards the Light'.

On behalf of our Past Pupils' Association, Sydney I wish Mrs.Selvamalar a happy and peaceful retired life.

May God's blessings be with her.

*Thanks*



# Service Appreciation To The MGHS Principal

**Mrs.Thirah Jai Indiran**
United Kingdom.

It has been my privilege to honour Mrs Selvamalar Suntharesan on her retirement and exceptional service as a principal in Methodist Girls High school (MGHS). I am so proud of being her classmate, founder member of the PPA (UK) and her close friend.

During her time with the school, Mrs Suntharesan built a legacy that places her among the greatest servants in the MGHS history. We are inspired by her namesake and driven by our own sharply focused ambitions. In the last 17 years, she has made rapid developments and improvements of the school and hence, it brought the school to a high standard

She has made substantial progress in creating value at most important assets and delivered strong financial and academic results.

We pay tribute to her both exceptional and dedicated services and hence, she is irreplaceable. We wish her all the best for her future. Our children and our blessings always stay with her.



# *Best Wishes & Congratulations on a well Deserved Retirement*

**Miss.T.Veluppillai**
Retired Vice Principal,
J/Methodist G.H.S.
Point Pedro.

**I** am happy to send this message for your Diamond Jublee to say farewell at the retirement of my longtime college and friend Mrs.Suntharesan after 17 years as the Principal of Methodist Girls' High School.

Her years the head of the institution were not the easiest they were extremely stressful of often hayardous years for all of us at school. The responsibility for the welfare of young girls under her care during the war around us tell on the slim shoulders of Mrs.Sundaresan for many long years. All credit to her and to her staff for the way they struggled on without losing hope. Mrs.Suntharesans association with the school was long as she was also a student here. Leaving an institution with so many lies is always a wrench, especially a school where one has been so long. However here is a well deserved retirement after many years of truly arduous fruitful service.

I wish her all the best for the future and many years of happy and peaceful rest with her loving family.



# Message from S.Yogendranathan

**Mr.S.Yogendranathan**
Immediate Past President,
Hartley College PPA,
Colombo Branch.

I am pleased to send this message for publication in the Souvenir on the occasion of the retirement of Principal Mrs.S.Suntharesan, from active service.

A Souvenir is a tribute to the past. It is a symbol of gratitude to those who had labored untiringly to make the institution great.

My memories of MGHS goes back to the late nineteen fifties when I ended my school career as the Head prefect of Hartley College (in 1959 / 1960) , during which period we had a few functions held jointly by both Schools. Once again, it was only very recently in April 2012, that I had the opportunity of attending your school and this time, to speak at the School assembly on the invitation of Principal Mrs.S.Suntharesan. This was during my visit together with Senator lan K.Karan. The Ambassador for the Federal Republic of Germany H.E.Jens Plottner, and Mr.Rohan Gomis, to open a plaque at the Hartley College Hostel construction site, as the Project Chairman.

What struck me was the manner in which Mrs.Suntharesan, arranged our visit to the School and the eagerness in which she discussed the facilities available and that are needed for the School to go forward. MHGS has alwlays shone with success in Education. Sports and any curricular activities in our region. Under the guidance, supervision and direction of such a keen and dedicated Principal, one could see the growth of this Girls School to greater dimensions. She has been a motivation factor to the Teachers students and even the parents I am made to understand.

During the short period I have known her, I could easily vouch that due to her keenness, today the School has achieved several milestones. The School has a brand new bus, which facilitates lot of activities of the students. She has made the children to make full use of it, in their forward march.

She has still not finished with her guest for improving the standards in the School, since she is in the process of building a new canteen, and reconstruction the damaged portions in the school, hardly a few days before her retirement!. She is a smiling individual, ever willing to help and also receive help from old girls and boys and well wishers.

Mrs.Suntharesan, you are such a devoted worker, the day has come to give recognition to your wonderful dediction towards your work.

I wish you to have a relaxing and happy future after your retirement!

***"Education is what remains after one has forgotten everything he learned in school". - Albert Einstein***



# Message of Felicitation from the Former Senior Science Sectional Head

**Methodist Girls' High School, Point Pedro.**

**Miss.E.I.Nallathamby**
*Senior Science Sectinal Head*
*B.A.Science-University of Madras*
*Diploma in Education - University of Peredeniya*
*M.A.in Education - University of Jaffna.*

**I** bring you all, good things of great joy from our Methodist Church in Sri Lanka, Point Pedro, Kaddaivelly circuit. I consider it a great privilege, to say a few words of appreciation, for the services, rendered by our Principal Mrs.Selvamalar Suntharesan. whose retirement falls on April 2014.

I Rnew her as a student of Point Pedro. but I never taught her Mrs.Suntharesan was always ready and anxious to talk in English, as much as possible to one and all.

Her way of teaching English in class her behoviour with the principal and subordinates were highly commendable. I have no doubt, that she would help the school, even after retirement to see that her school wins the "Inter-School Matches" in Netball, Jumps & Races. This is the type of Principals what the school needs, and Mrs.Suntharesan is no exception.

May I wish her, health , wealth & happiness, now and always. May the 'good Lord" grant her peace that passeth all understanding.

With best wishes.



# மாணவிகளின் கல்வி மேம்பாட்டிலும் பாடசாலை அபிவிருத்தியிலும் வியத்தகு சாதனைகளை நிலை நாட்டியவர்

சாமஸ்ரீ தேசஜோதி ஏ.என்.எஸ்.திருச்செல்வம்
(ஜே.பி)
இளைப்பாறிய உள்ளூராட்சி நூலகா

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை பாரம்பரியத்தை பாதுகாத்து புகழ்பூத்த பாடசாலையாக கல்வி உலகிலே திகழ்ந்து சாதனைகளை நிலைநாட்டுவதற்கு இப்பாடசாலையின் ஆளுமை மிக்க அதிபர்கள், ஆசிரியர்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பான கல்விச் சேவைகளும் கல்வித்திணைக்களம், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளின் பூரண ஒத்துழைப்புகளுமே காரணமாகும்.


நாட்டிலே ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் பல இன்னல்களை அனுபவித்து வந்த காலகட்டத்தில் பாடசாலையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவலநிலை தோன்றியது. பாடசாலை நிர்வாகம் சொல்லெணா கஷ்டங்களுடன் பல்வேறு தரப்பினரின் ஒத்துழைப்புகளுடன் பாடசாலை வடஇந்து மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டு இயங்கி வந்தது. பின்னர் இந்திய அமைதிகாக்கும் படையினரால் பாடசாலை, பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. அப்போது திருமதி சந்திரசேகரம் அதிபராக இருந்தார். அவரின் ஆளுமைமிக்க செயற்பாடுகளினாலும், கல்வித்திணைக்களத்தின் பூரண ஒத்துழைப்புகளினாலும் பாடசாலை மீண்டும் சிறப்பாக இயங்கத் தொடங்கியது.

திருமதி.செல்வமலர் சுந்தரேசன் பாடசாலையின் பாரம்பரியத்தினை கட்டிக்காத்து மாணவிகளின் கல்வி மேம்பாட்டிலும், பாடசாலை அபிவிருத்தியிலும் வியத்தகு சாதனைகளை நிலைநாட்டியுள்ளது பாராட்டுக்குரியது. பாடசாலையின் 175வது ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்பாக கொண்டாடி-175வது ஆண்டு மலரையும் வெளியிட்டார்.

பாடசாலையின் பல்வேறு வளர்ச்சிச் செயற்பாடுகளும் மாணவர்கள் கல்விச் சாதனை நிகழ்த்துவதற்கும் வேண்டிய கல்விச் சேவைகளை அதிபர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் சிறப்பாக மேற்கொண்டிருந்தது வரப்பிரசாதமாகும். அவர் சேவையிலிருந்து இளைப்பாறுகின்றார். அவர் இளைப்பாறி அவரது வாழ்க்கை சீரும் சிறப்புமுற்று மகிழ்ச்சியாக இருக்க எல்லாம்வல்ல இறைவன் அருள் பாலிக்க வேண்டும்.

# பாடசாலையின் மீள் புனரமைப்பிற்காக அயராது உழைத்தவர்

பழைய மாணவர் சங்கம்
கனடா.



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் கல்வி கற்று, இப்பாடசாலையிலே அதிபராக பதவியேற்று 18 வருடங்கள் சிறப்பான சேவையாற்றும் பேற்றினை எமது அதிபர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் அவர்களுக்கு இறைவன் அளித்தமைக்காக, அவருக்கு நன்றி கூறும் இவ்வேளையில், தமது சேவையிலிருந்து இளைப்பாறும் எமது அதிபரை நாம் எமது கனத்த இதயங்களுடன் வாழ்த்துகிறோம்.

அவர் தமது சேவைக்காலத்தில், இப்பாடசாலையின் மீள் புனரமைப்பிற்காக அயராது உழைத்ததின் பயனாக, இப்பாடசாலை வளாகத்திலே அமைக்கப்பட்டுள்ள பாடசாலைக் கட்டடங்கள், அவரது உழைப்பினை பறைசாற்றி, அவர் புகழை வானுயர வைக்கின்றன.

**"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவு இலா**
**ஊக்கம் உடையான் உழை"**

தளர்ச்சியற்ற ஊக்கத்தை உடையவனிடத்திலே ஆக்கங்கள் அனைத்தும் வழி கேட்டுக்கொண்டு தாமே போய்ச் சேர்ந்து, நிலையாகவே தங்கிவிடும். இக் குறளுக்கேற்பவே தளர்ச்சியற்ற ஊக்கத்துடன் பணியாற்றிய எமது அதிபர் தனது ஓய்வுக் காலத்திலும் தனது ஊக்கத்தின் வெளிப்பாடாக பல்வேறு நற்பணிகளை ஆற்றுவார் என்ற நம்பிக்கையோடு வாழ்த்தி, இறைவன் தம் ஆசீரை அவருக்கு நிறைவாக அளிக்க வேண்டுமென்று பிரார்த்திக் கொண்டு, மீண்டும் அவரை வாழ்த்தி விடைபெறுகிறோம்.



# தன்னலமற்ற அதிபர்

**லயன் தி.யோகேந்திரன் (JP)**
முன்னாள் செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திக் குழு (SDC),
யா/மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.

*சிறந்த தலைமைத்துவத்தோடு சிறப்பான நிர்வாகத்தை ஆற்றி ஓய்வுபெறும் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்கள் வளமிகு கல்விச் சேவைதனை 191 ஆண்டுகள் பழமைவாய்ந்த யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் வளர்ச்சிக்காக தனது சேவைக்காலத்தில் 17 வருடங்கள் மிக நெருக்கடியான காலகட்டங்களிலும் தளராது சேவையினை ஆற்றியுள்ளதுடன் இவர் இலங்கை கல்விநிர்வாக சேவையிலும் உள்வாங்கப்பட்டுள்ளார். சேவையிலிருந்து ஓய்வுபெறும் அதிபர் அவர்களின் மணிவிழா மலருக்கு இப்பாடசாலையின் அபிவிருத்தி குழுவின் (SDC) செயலாளர் என்ற வகையில் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.*

*தன்னலமற்ற அதிபராக விளங்கி இப்பாடசாலையில் கல்வி கற்ற ஒவ்வொரு பிள்ளைகளையும், கல்வியிலும் ஒழுக்கத்திலும், ஆன்மீகத்திலும், விளையாட்டிலும் எழிச்சியுறச்செய்ய அவர்கள் வழங்கிய அர்ப்பணிப்பான சேவை போற்றுதற்கு உரியது. இப்பாடசாலையினால் விதைக்கப்படுகின்ற வித்துக்கள் நமது நாட்டில் மட்டுமன்றி ஏன் சர்வதேசத்திலும் பெரும்விருட்சமாக காட்சியளிப்பது தாங்கள் வழங்கிய சேவைக்கு மகுடம் சூட்டுவதாக உள்ளதுடன் பெண்களின் கல்விவளர்ச்சிக்கும் வழிசமைத்துள்ளது.*

*இவர் தனது சேவைக்காலத்தில் பாடசாலை சார்பான பௌதீக அபிவிருத்தியிலும் மனிதவள அபிவிருத்தி செயற்பாட்டிலும் ஆற்றிய சேவை காத்திரமானது என்பதுடன் பாடசாலை சமூகத்துடன் ஒருமித்து நின்று நேர்த்தியாகவும் சிறப்பாகவும் பணிகளை செய்து முடிக்கும் பண்பு போற்றுதற்குரியதாகும்.*

*இவர் மனநிறைவுடன் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றாலும் தனது கல்விச் சேவைதனைத் தொடர்ந்தும் கல்விச் சமூகத்திற்கு வழங்கவேண்டும். ஒரு சிறந்த அதிபராக, ஒரு சிறந்த கல்வியாளராக, ஒரு சிறந்த முன்னோடியாக திகழ்கின்ற இவரை நீண்ட ஆயுளும் நல்லாரோக்கியமும் பெற்று சிறப்பாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.*



# கல்லூரியின் வரலாற்றோடு தன்னை இணைத்துக் கொண்டவர்

திருமதி.ஜமுனா நந்தகுமார்
(B.A.(SP.Hon), Dip.in.Edu)
பிரதி அதிபர்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

**யா**/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் பதினாறு ஆண்டுகளுக்கு மேலாக அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்கின்ற திருமதி.செல்வமலர் சுந்தரேசன் (SLEAS III) அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

இக்கல்லூரியின் பழைய மாணவியாக இருந்து இக் கல்லூரியிலேயே அதிபராகச் சேவையாற்றி கல்லூரியின் வரலாற்றோடு இணைந்து தற்போது ஓய்வு நிலையில் உள்ள அதிபர்கள் வரிசையில் நீண்டகாலம் அதிபராக சேவையாற்றி அதிபர் என்ற பெருமையை பெற்றுள்ள திருவாட்டி செ.சுந்தரேசனுக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையை கல்வி யிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் வலய, மாகாண, தேசிய மட்ட சாதனையாளராக்கிய பெருமைக்குரியவர். பாடசாலையோடு சமூகத்தையும் பழைய மாணவர்களையும், பெற்றோரையும் இணைத்து பாடசாலையின் வளர்ச்சியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றியதோடு கல்லூரித் தாய் இன்று அழகுடனும், கம்பீரத்துடனும் நிமிர்ந்து நிற்பதற்கு இரவு பகல் பாராது சேவையாற்றிய பெருந்தகைக்கு எனது வாழ்த்துக்கள்.

மாணவர்களின் ஒழுக்கம், பண்பாடு, கல்வி அடைவு என்பவற்றை உயரிய நோக்காகக் கொண்டு சேவையாற்றியதுடன் மாணவர் களை கண்டிப்புடனும் கனிவுடனும் அரவணைத்து கல்லூரியின் நீண்ட பாரம்பரியமான ஒழுக்க விழுமியங்களை பேணிப் பாதுகாத்த பெருமைக்குரியவராக திகழ்கின்ற திருவாட்டிக்கு எனது வாழ்த்துக்கள்.

யுத்தம், சுனாமி என்ற இரு பேரழிவுகள் ஏற்படுத்திய அழிவுகளிலிருந்து கல்லூரியை மீட்டெடுத்த திருவாட்டி தனது நிறைவான சேவையால் எல்லோர் மனதிலும் உயர்வான இடத்தைப் பெற்றுள்ளார். தனது 30 வருட கல்விச் சேவையின் பின்னர் ஓய்வு பெற்று செல்வது கல்விப் புலத்துக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். இவர் கல்லூரிக்கு ஆற்றிய சேவை காலத்தால் என்றும் மறக்க முடியாதவை.

தனது ஓய்வு காலத்தில் நலமுடனும் மகிழ்வுடனும் நீடித்த காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.



# கற்களை கவினுறு சிற்பங்களாக்கிய அபூர்வ உளி

**பரா.ரதீஸ்**
தலைவர்,
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

**"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**
**எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி"**

*என்று பாடினான் பாட்டிற்கொரு புலவன் பாரதி. ஆணாகப் பிறந்து, பெண் விடுதலையின் அவசியத்தை அவாவி நின்றான் அந்த அற்புதக்கவிஞன். பெண் 'விடுதலை' அடைந்தால் தான் தேசம் விடுதலை அடையும் என்று நம்பியவன் அவன். அவன் அவா; நம்பிக்கை; கனவு வீண் போகவில்லை. அவன் கண்ட புதுமைப்பெண்கள் பாரில் பல்கிப் பெருகினர். அவன் புத்திரிகள் புவியை அழகு செய்தனர். பேர்த்திகள் பெருமடங்காயினர். பூட்டிகள் புதுவிதி கண்டனர். மொத்தத்தில் இப்பாவலனின் பரம்பரை பாரின் தலைவிதியையே மாற்றி அமைத்தது.*


II

*பாரதிக்கு பேர்த்தியாய் ஏட்டை எடுத்து, கல்விப்பாட்டைப் படித்து, "மாதர்க்கென்றொரு புது விதி வரைந்து நாட்டை ஏற்றமுற யான் செய்குவன்" என்றே எழுந்தவர் தான் எங்கள் மணி விழா நாயகி திருவாட்டி செல்வமலர் சுந்தரேசன் அவர்கள். "பிறந்து உடல்வளர்ந்து, காம வலைதனிலே உழன்று, மடிந்து, மறைந்த" மானிடர் வரிசையினுள் சிறைப்படாது இச்சிறையுடைத்து தன்னால் இயன்ற பணி தரணிக்கு வழங்கிய தங்கமலர் இவர். எம் தேசத்தின் செல்வமலர் இவர்.*

III

*இவர் மணிவிழாக்காணும் காலத்தில் ஆசிரிய நலன்புரிச் சங்கத்தின் தலைவராக இருந்து மணிவிழாக் கொண்டாடுகின்ற வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.*

*மணி விழா நாயகியை வாழ்த்த எனக்கு வயதில்லை. வணங்கி அமைகின்றேன்.*



# புத்திசாலித்தனமாகவும் சாதுரியமாகவும் செயற்பட்டவர்

**வ. கிருஸ்ணசிங்கம்**
தலைவர்,
மணிவிழாக்குழு,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

**அ**கவை அறுபதில் ஓய்வு பெறும் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

இப் பாடசாலையின் பழைய மாணவியான இவர் இக்கல்லூரியின் அதிபராக பதினேழு வருடங்கள் அரும் பெரும் சேவையாற்றி கல்லூரி அன்னையை மாண்புறச் செய்துள்ளார். இறுக்கமான பாதுகாப்புச் சூழல் காணப்பட்ட காலத்திலும் மிகவும் புத்திசாலித்தனமாகவும், சாதுரியமாகவும் செயற்பட்டு கல்லூரி நிர்வாகத்தை சிறப்பாக செயற்படுத்தினார்.

இவரது சேவைக்காலத்தில் இப்பாடசாலை கல்வி ரீதியாகவும், பௌதிக வளங்கள் ரீதியாகவும் முன்னேற்றமடைந் துள்ளது. மாணவர்கள் கல்வி சார் மற்றும் இணைப்பாடவிதான போக்குவரத்து மேற்கொள்வதற்காக பழைய மாணவனின் அனுசரணையுடன் பேருந்து ஒன்றைப் பெற்றுக் கொடுத்துள்ளார். பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் வடமராட்சியில் முதன் முதலில் மாணவர், ஆசிரியர்களுக்கான சீருடையை அறிமுகப்படுத்தினார். உயர்தர மாணவர் மன்றம் ஒளியை நோக்கி சஞ்சிகையை வருடாவருடம் வெளியிடுவதற்கு வழிவகுத்தார்.

கல்லூரி நிர்வாகத்தை திறம்பட செய்யும் அதிபராக மட்டுமன்றி தனக்கு ஓய்வு நேரம் கிடைக்கும் போது மாணவருக்கு ஆங்கிலபாடத்தையும் கற்பிப்பார். தாயாக அரவணைத்து அவர்களின் கல்வித் தரத்தையும் பண்பாடுகளையும் உயர்த்தியவர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு பழைய மாணவர் சங்கம் போன்றவற்றின் செயற்பாட்டிற்கு உறுதுணையாக செயற்பட்டுள்ளார். இவரின் சேவைக்காலத்தில் கல்விப் பெறுபேறுகள் மேலும் மேலும் உயர்ந்துள்ளதுடன் விளையாட்டுச் சாதனைகள் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மிக மிக முன்னேற்றமடைந்துள்ளது. இத்தகைய சிறப்பான பெருமைமிக்க இவர் தனது ஓய்வுக் காலத்தில் சிறந்த ஆரோக்கியமும், இறையருளும் நீண்ட ஆயுளும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்.



# ஆளுமையின் வடிவம் திருமதி செ.சுந்தரேசன்

**திருமதி. இ. சிறீரங்கன்**
ஓய்வுநிலை பிரதி அதிபர்
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
செயலாளர், மணிவிழாக்குழு.

**யா**/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் 17 வருடங்களாக அதிபராக அருஞ்சேவையாற்றி இன்றுடன் ஓய்வுப் பெற்றுச் செல்கின்ற அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களுக்கு என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

முகாமையாளர், போதனாதலைவர், வினைத்திறன் மிக்க ஊடுகடத்தி, வழிகாட்டி, ஆலோசகர், புதுமைவிரும்பி, மாற்றத்தை ஏற்பவர் போன்ற பல நடிபங்குகள் மூலம் பாடசாலையை மெருகூட்டி, புதுப்பொலிவுடன் வளர்த்த பெருமைக்குரியவர் திருமதி செ.சுந்தரேசன் அவர்கள்.

**"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்"** - என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய யாரால் என்ன காரியம் சாதிக்க முடியும் என்பதை அறியும் மதிநுட்பமும், அக்காரியத்தை அவர்களிடமே கொடுத்து காரியம் சாதிக்கும் நுண்ணிய ஆற்றலும் அதிபரின் ஆளுமையின் மிகச் சிறந்த வெளிப்பாடாகும்.

ஆளுமை மிக்க அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களது ஓய்வுக்காலம் மனஅமைதியும், குடும்ப மகிழ்வும் நிறைந்ததாக அமைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



# ஆசிரியர்களுக்கு வழிகாட்டிய மேய்ப்பன்

**திருமதி.அருந்ததி பாலேந்திரன்**
ஆசிரியர் சங்க செயலாளர்

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் மூலகாரணமாக அமைவது கல்வியாகும். அவ்வாறான கல்வியை தரமான முகாமைத்துவத்தினூடாக வழங்குவதில் திறமை மிக்கவராக விளங்கியவர் எமது பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்கள். இவர் தனது அன்பினாலும் ஆளுமைப் பண்பினாலும் எல்லோர் இதயங்களிலும் இடம் கொண்டவர். பாடவிதான செயற்பாடுகளிலும் பாட இணைச் செயற்பாடுகளிலும் எமது பாடசாலை முன்னணியில் நிற்க தன்னை அர்ப்பணித்தவர். இவரது இறை நம்பிக்கையும் விடாமுயற்சியும் இவருக்கு வெற்றிமேல் வெற்றியைத் தந்தன. அல்லும் பகலும் இவரது உழைப்பு எமது பாடசாலையின் உயர்விற்கு வித்திட்டது. மாணவர்கட்கு ஒளிகாட்டும் கலங்கரை விளக்கமாக 'ஆசிரியர்கட்கு வழிகாட்டும் மேய்ப்பனாக எமது அதிபரின் செயற்திறன்கள் என்றுமே போற்றுதற்குரியன.

"உள்ளத்தால் பொய்யாதொழுகின் - உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

குறள்காட்டிய நெறி நின்ற எமது அதிபர் வாழி.



# A dutyconscious Principal

**Mrs.M.G.Thavratnam**
(Retired Principal)

It gives me great pleasure in sending this message of felitication on the occasion of the principal's both birthday celeberation and the publication of the commermorting magazine.

When Mrs.Suntharesan was appointed as the principal of our school after my retirement in June 1997 there were many changes in the field of education. Computer studies and other technological subjects brought about changes in the school curriculum and the Principal had to find teachers to teach these subjects. The mediam of instruction also had to be changed from swabasha to English. The Principal was keen on the students learning English, and encouraged the students to sit for O/L and A/L exams in English medium. The results of the exams were quite good.

As an old girl of the school she kept up the traditions of the school, but some times had to change them when necessary. The discipline of the students both out side the school or inside is highly commendable.

Any function of the school, specially prize giving, was celeberated in a grand scale. Welcoming of chief guest and others on the stage was appreciable with some of the students dressed grandly with their hands full of flowers were lined up on the stage.

On the school's 185th anniversary, the Principal organised various inter school essay competitions as well as competitions among the school students. The final function was held in the school hall with distinquished guests on the stage. The Principal was honoured by the retired Principal, by covering her shoulders with the golden shawl.

The school colours were seen every where with the walls of classroom colour washed in purple and yellow. The school also excelled in sports and other cultural activities gaining places in competitions at divisional, zonal and district levels. The Principal gave all encouragement to the students and the teachers who trained them.

Procuring the land adjoining the western side of the school, the putting up of the school front beautiful and intricately designed gate facing the sea, the new administration block, and the auditorium on the eastern side were all done by the untiring and encouraging efforts given by the Principal.

Past distinquished pupils and members of OGA from abroad like UK and Canada were invited. When they visited the school, they address the students assembly at different times.

The Principal has done her very best during the 17 years of her service.

I wish her many more happy years of retirement serving the school and the society.

May God bless for her untiring services.



# தடை பல தாண்டி கல்லூரி உயர்வுக்கு ஏணிப்படியாய்.....

**திருமதி. அ. சந்திரகாந்தன்**
உபதலைவர்,
பழைய மாணவர் சங்கம்.

தீந்தமிழும் கல்வியும் உயர்ந்து விளங்கும் பருத்திப்பதியின் கலங்கரை விளக்கமாய் விளங்கும் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் **1997-2014** வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெறும் திருமதி செ.சுந்தரேசன் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அனைத்து மாணவர்களாலும் விரும்பப்படும் ஒரு சிறந்த அதிபராக விளங்கியவர் திருமதி.செ.சுந்தரேசன் அவர்கள். இவர் **1997**ம் ஆண்டு எமது பாடசாலையில் அதிபராகப் பொறுப்பு ஏற்ற காலத்தில் இருந்து எந்த ஒரு விடயத்தையும் திட்டமிட்டு மேற்கொள்வதனால் பல வெற்றிகளுக்கு நாயகியாகத் திகழ்கின்றார். அத்துடன் கோட்ட தேசிய மட்டத்தில் எமது பாடசாலை மாணவர் இடம்பெறும் பல்வேறுவகையான நிகழ்வுகளிலும் மாணவர்கட்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளார். "மாணவச் சக்தி மாபெரும் சக்தி" என்ற கருத்தைக் கொண்டு அவர்களது எதிர்காலம் சுபீட்சமாக அமைய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தமது கடமையைச் செவ்வென ஆற்றிய அதிபரின் பணி பாராட்டுதற்குரியது.

அவரது மணிவிழாவைப் பூர்த்தியாக விழாவெடுத்துக் கொண்டாடும் கல்லூரிச் சமூகத்தின் அளப்பரிய பணி வரவேற்கத்தக்கது. அத்துடன் அதிபர் அவர்கள் தமது கௌரவ சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு மலர் வெளியிடுவது மகிழ்வழிக்கின்றது.

அதிபர் அவர்கள் சிறந்த பக்தியுள்ளவர், சிந்தனையாளர், சிறந்த பண்பாளர், மிடுக்கான நிர்வாகத்தினால் பாடசாலையின் நிர்வாகத்திறனால் பாடசாலை நிர்வாகத்தை சீருடன் நடாத்தி வருபவர்.

பாடசாலையின் கல்விப் பணியுடன் நின்றுவிடாது சமயப் பணிகளையும் ஆற்றி ஆன்மீகத்தையும் பலப்படுத்தியுள்ள ஒருவர். இங்கு சர்வ சமய வழிபாடுகள் இனிதே நடை பெறும் களமாக அதனை வளர்த்து வருவது அவரது சிறப்பான பண்பாகக் காணப்படுகிறது.

இவரது காலத்தில் பாடசாலை பல அபிவிருத்திகளை அடைந்துள்ளமை கண்கூடு.

இவரை மனமகிழப் பாராட்டுவதுடன் இவரது ஓய்வுக்காலம், உடல் நலத்துடன் நீடூழி காலம் அமையப் பெற்று சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனிடம் பணிகின்றேன்.

# வாழ்வியல்





# சவால்களை எதிர்கொள்ளும் திறன்களை தன்னகத்தே கொண்டவர்

பேராசிரியர்.மா.நடராஜசுந்தரம்
ஓய்வுநிலை பேராசிரியர்

**வ**டமராட்சி பிரதேசம் கடந்த மூன்று தசாப்தங்களாக பல்வேறு இடர்களுக்கு மத்தியில் சிக்குண்டிருந்தது. மெதடிஸ்த பெண்கள் பாடசாலையும், ஹாட்லிக்கல்லூரியும் உயர் பாதுகாப்பு வலயத்துள் உள பாதுகாப்பு வலய பாடசாலைகளாக இருந்தன. இந்த காலகட்டத்தில் (1996) மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அதிபராக இருந்த திருமதி தவரட்ணம் அவர்கள் பல்வேறு வகையான சவால்களையும் எதிர்நோக்கி வெற்றிகண்ட, ஒருவர் போற்றப்படவேண்டியவர் 1997ம் ஆண்டு நடுப்பகுதியில் இந்த பாடசாலைக்கு அதிபருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட நிலையில் புறச்சூழல் மிகவும் நெருக்கடியாக இருந்தமையால் பாரிய அந்த பொறுப்பை ஏற்க எவரும் முன்வரவில்லை. ஆனால் எந்த சவால்களையும் எதிர்கொள்ள ஒரு பெண்மணி அஞ்சா நெஞ்சத்தவர் தயாரானார்.


இப்பாடசாலையின் பழைய மாணவியும் பேராதனை பல்கலைக்கழக பட்டதாரியுமானன திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்கள் ஆரம்பத்தில் 1984ல் கொழும்பு விவேகானந்தர் வித்தியாலயத்திலும் தொடர்ந்து அதிபர் தரம் 2 பரீட்சையில் சித்தியடைந்ததன் விளைவாக யாழ் பெரியபுலம் மகாவித்தியாலயத்திலும் உப அதிபராக நியமனம் பெற்று 23.06.97 வரை கடமையாற்றினார். மெதடிஸ்த பெண்கள் பாடசாலைக்கு அதிபர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் விளைவாக 23.06.1997ல் அதிபராக பதவி ஏற்றார். மிகவும் இளம் வயதிலேயே அதிபரான அந்த புகழைப் பெற்றுள்ளார். சவால்களை எதிர்நோக்கி எந்த ஒரு செயற்பாடுகளையும் வெற்றிகரமாக செய்யக்கூடிய மனவைராக்கியத்தையும் நம்பிக்கையையும் பொறுப்புக்களை ஏற்கக்கூடிய பண்புகளையும் எதற்கும் தயங்காது வகைகூறும் ஆற்றலையும் வினைத்திறன்மிக்க தொடர்பாடலையும் உள்ளடக்கிய ஒரு சிறந்த ஒரு தலைமைத்துவ திறன்களையும் தன்னகத்தே கொண்ட திருமதி சுந்தரேசன் அவர்கள் பாடசாலைக்கு கிடைத்த ஒரு மிகப்பெரிய பொக்கிசமாகும்.

பாடசாலையின் எதிர்காலம் அமைவிடம் ஒரு கேள்விக்குறியாக இருந்த இக்காலப்பகுதியில் ஒரு புறம் இராணுவம், மறுபுறம் பெண்பிள்ளைகள், இடைக்கிடை பதற்றநிலை யாவற்றையும் தனது பண்பாலும் அர்ப்பணிப்பாலும் வெற்றிகொண்டு பாடசாலையை பல வழிகளில் முன்னேற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு சிறந்த பக்க பலமான ஆசிரியகுழாமின் உதவியுடன் பாடசாலைக்கொடியை இலங்கை பூராவும் ஒவ்வொரு மாணவ, ஆசிரிய அதிபர் செயற்பாட்டில் பறக்கலிட்ட பெருமை அதிபர் அவர்களையே சாரும். அவருடைய கடமை உணர்வும் அர்ப்பணிப்பும் வெற்றிக்கு வழி வகுத்தன.

பாடசாலை தேசிய மட்டத்தில், தமிழ்மொழி தினம் ஆங்கில மொழித்தினம், சொல்வதெழுதல், கபடி போட்டிகளில் வெற்றிபெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர். மேலும் மாணவர்கள் இயற்கை இரசாயன சங்க போட்டி ரூபவாகினி நடத்திய போட்டிகளிலும் மாணவர்கள் பங்குபெற வாய்ப்புச்செய்து கொடுத்துள்ளார். அவருடைய சேவையின் உச்சக்கட்டமாக பாடசாலையில் வடமராட்சிப் பிரதேசத்தில் ஆங்கிலமொழி மூலம் மாணவர்களுக்கு கற்பிக்கும் வசதியை ஏற்படுத்தி, 100% மாணவர்களை சித்தியடையச் செய்ததன்றி 2013 A/L பரீட்சையில் மூன்று மாணவிகள் 3 'A' ஆங்கிலமொழி மூலம் பெற்றுள்ளனர். இப்பெருமை அதிபர் அவர்களையே சாரும்.

அதிபர் அவர்கள் தொடர்ந்தும் தம்முடைய கல்வியறிவினை விருத்தி செய்யும் நோக்கில் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் தொடர்ந்து Post Graduate Diploma in Educational Management பட்டத்தை Meritல் சித்தியடைந்தார். தொடர்ந்து S.L.P.S 1 என்ற நிலைக்கு பதவி உயர்த்தப்பட்டு பின்பு S.L.E.A.S பட்டத்தையும் பெற்று எல்லோருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார் என்றால் மிகையாகாது. அதிபராக இருந்த காலத்தில் 2001ம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் இந்தியா NIEPA புலமைப்பரிசில் இலங்கை அதிபர்களுக்கும் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்குமான பயிற்சியில் 3 வார பயிற்சி பெற்றார். 2003 ஏப்பிரில் 3 வாரம் அதிபர்களுக்கான ஒன்ராறியோ அதிபர் சங்கத்தின் பயிற்சி பெற்றார்.

வயது எல்லையடையும் பொழுது எல்லோரும் ஓய்வு நிலைக்குவருவர். ஆயினும் அதிபர் அவர்கள் இன்னும் சில வருடங்கள் சேவை செய்யும் ஆற்றல்திறன் அவரிடம் காணப்படுகின்றது. அவற்றை சமூக சேவையில் அர்ப்பணிக்கவேண்டும் எனக்கூறி அவரை வாழ்த்துகின்றேன்.





# மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் ஒளிவிளக்கு

**திரு.ந.குணசீலன்**
ஓய்வுநிலை பிரதிஅதிபர் (ஹாட்லிக்கல்லூரி)
தவிசாளர், மத்தியஸ்தசபை,வடமராட்சிவடக்கு

வடமராட்சி மட்டுமன்றி இலங்கையிலேயே தனித்துவமான ஒரு பாடசாலை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை. இப்பாடசாலையில் காலத்துக்குக் காலம் பல அதிபர்கள் வந்து போனார்கள். ஆனால் ஒரு சில அதிபர்களின் அர்ப்பணிப்பு சேவை காரணமாக அவர்கள் பெயர்கள் என்றும் நிலைத்துள்ளன. குறிப்பாக செல்வி.சின்னையா, செல்வி.ஆறுமுகம், செல்வி.R.J.மான் ஆகியோரைக் குறிப்பிடலாம். இதேபோன்று நெருக்கடியான காலகட்டத்தில் அதிபராக இருந்து சாதனை படைத்தவர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன். இவர் மாணவியாக இப்பாடசாலையில் இருந்தபோது நான் ஆசிரியராக இருந்தேன். அப்போதுதான் இவரின் திறன்கள் பலவற்றை அறிய வாய்ப்பு ஏற்பட்டது. பாடசாலை நிகழ்வுகளில் முன்னின்று உதவும் மனப்பான்மை, பாடசாலைப்பற்று, ஆசிரியர்களை மதிக்கும் மனப்பாங்கு, வெற்றி தோல்வி பாராது போட்டிகளில் பங்குபற்றும் மனவலிமை, தானாக முன்வந்து எச்செயற்பாட்டிலும் உதவும் தன்மை என்றெல்லாம் அடுக்கிக்கொண்டே போகலாம். பின்னர் நெருக்கடியான காலகட்டத்தில் தான் இப்பாடசாலையின் அதிபர் பொறுப்பை ஏற்றிருந்தார். அக்கால கட்டத்தில் நான் ஹாட்லிக்கல்லூரியில் கடமையாற்றினேன். இவர் பதவியேற்றபின் வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் கோட்டக்கல்வி அதிகாரியின் பணிப்பின் பேரில் அதிபர் கூட்டம் நடைபெற்றது. அங்கு நானும் சென்றிருந்தேன். திருமதி செல்வமலர் என்னைக்கண்டவுடன் விழுந்து வணங்கி என்னிடம் ஆசீர்வாதம் பெற்ற நிகழ்வை நான் என்றும் மறக்க முடியாது. குருபக்தி என்பதை தன் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் ஒரு சிறந்த அதிபர். அதன்பின் ஒவ்வொரு ஆசிரிய தின நிகழ்விலும் இவர் என்னிடம் ஆசிர்வாதம் பெறத்தவறுவதில்லை. எனவே தன் ஆசிரியரை என்றும் வணங்கி ஆசிபெறும் மனப்பாங்கு இவரிடம் தாராளமாக உண்டு. அதிபர்கள் கூட்டத்தில் பாடசாலைத் தேவைகளை வெளிப்படையாகவே கூறி அதை கல்வி அதிகாரிகள் மூலம் பெறத்தயங்குவதில்லை. ஆங்கிலமொழி மூல கற்றலை ஏற்படுத்தி மாணவிகளைப்

பயன்பெற வைத்தவர். எவரும்செய்யத் துணியாத செயலை மாணவர்கள் நன்மைகருதி இவர் செய்தார். க.பொ.த (உ/த) வகுப்பில் கணித, உயிரியல் பிரிவுகளை ஆங்கிலமொழி மூலமான கற்கைகளை ஏற்படுத்தினார். இதன் மூலம் முதல் முறை தோற்றிய 7 மாணவிகளும் 100% சித்தியினைப் பெற்றார்கள். அண்மையில் வெளிவந்த பரீட்சை முடிவுகளில் க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) வகுப்புக்களில் மாணவிகள் மிகத் திறமையான பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கும் அதிபருக்கும் புகழைத்தேடிக் கொடுத்தனர். கல்வியில் மட்டுமல்ல விளையாட்டுக்களிலும் மாணவிகளை உற்சாகப்படுத்தி அவர்கள் பலரை தேசிய மட்டத்திற்குக் கொண்டு சென்ற பெருமை இவரையே சாரும்.

இவரின் குடும்பம் இறைபக்தியுடைய ஒரு குடும்பம். இவரது தகப்பனாரும் தாயாரும் கொட்டடிப்பிள்ளையார், கோட்டுவாசல் அம்மன் கோவில் இரண்டிலும் நிறைய பக்தியுடன் தினமும் வணங்குவார்கள். இவர்களின் இப்பக்தி இவரிடமும் நிறைய உண்டு. எனவே மாணவர்களை வழிப்படுத்தும் ஆற்றல் இயற்கையாகவே இவருக்கு இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். இவர் பாடசாலை நிகழ்வுகளைச் சிறந்த முறையில் நடத்துவதை நாம் அவதானிக்கலாம். ஆசிரிய ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்புடன் எல்லா நிகழ்ச்சிகளும் ஒழுங்குபடுத்தும் ஆற்றல் இவரிடம் உண்டு. அத்துடன் கனடா, லண்டன், கொழும்பு போன்ற இடங்களில் இருக்கும் பழைய மாணவர்களுடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தி மாணவர்களின் கல்வி, விளையாட்டுக்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கியுள்ளார். பாடசாலையின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சிறந்த அதிபர். இதனால்தான் ஜனாதிபதியிடம் சிறந்த அதிபருக்கான பரிசைப் பெற்றுள்ளார்.

பெற்றோர்களுடனும், திணைக்கள அதிகாரிகளுடனும் அன்பாகவும், ஆர்வமாகவும் நடந்து, பாடசாலையின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் ஆற்றல் உடையவர். மாணவிகளின் ஒழுக்கம் கட்டுப்பாடு என்பவற்றில் கண்டிப்பாக உள்ளவர். இப்படியான வினைத்திறனுடைய ஒரு அதிபர் இப்பாடசாலைக்குக் கிடைத்தது பாடசாலையின் வளர்ச்சிக்கு பேருதவியாகவுள்ளது. இப்பாடசாலையின் ஒவ்வொரு வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைவது அதிபரும் ஆசிரியர் குழாமுமாகும். அதிபருக்கு பொருத்தமான ஆசிரியர் குழாம் இருந்தால், அதிபர் பாடசாலையைச் சிறப்பாக நடத்தமுடியும். ஒரு சிறந்த தலைமைத்துவம் சிறுவயதிலிருந்தே ஆரம்பித்து வளர்க்கப்படுகின்றது. மாணவ மட்டத்தில் தலைமைத்துவ அனுபவங்களைப்பெற்று பின்னர் அதை முகாமைத்துவத்திற்கு பயன்படுத்தக்கூடியதாயிருக்கும். முன்பிருந்த நிர்வாகத்திலும் பார்க்க இப்போதுள்ள முகாமைத்துவம் சிக்கல் நிறைந்தது. ஒரு பாடசாலையை முன்பு நிர்வகிப்பது அதிக கஷ்டமல்ல, தலைமைத்துவத்திற்குப் பணிந்து நடக்கும் ஆசிரியகுழாம் இருந்தது. ஆசிரியர்கள் சேவை அர்ப்பணிப்புடன் செயற்பட்டதால் முன்பு நிர்வாகம் சுலபமாக இருந்தது. ஆனால் தற்போதுள்ள முகாமைத்துவம் இருக்கும் வளங்களைக் கொண்டு செயற்படவேண்டியுள்ளது. வளப்பற்றாக்குறை இருந்தாலும் ஏதோ வகையில் சமாளிக்க வேண்டியுள்ளது. இவ்வாறான காலகட்டத்தில்தான் திருமதி.செல்வமலர் இப்பாடசாலையை எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் சிறப்பாக நடாத்தி வந்ததை நாம் மறக்கமுடியாது.

திருமதி செல்வமலர் சுந்தரேசன் கல்வி நிர்வாகசேவையில் இருக்கும் ஒருவர். இவர் வலயக்கல்வி அலுவலகத்தில் கல்வி அதிகாரியாக இருக்கலாம். ஆனால் இவர் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும் என்ற நோக்குடன் தொடர்ந்தும் இப்பாடசாலை அதிபராக இருந்தார். இவரது காலத்தில்தான் பல உட்கட்டுமான

வசதிகளை இப்பாடசாலை பெற்றது. கேட்போர்கூடம் ஒன்று அமைக்கப்பட்டது. இப்பாடசாலையின் நீண்டநாள் கனவு நிறைவாக வந்துள்ளது. இவரது அயராத முயற்சியினாலேயே இக் கேட்போர் கூடம் அமைக்கப்பட்டது. கிறிஸ்தவ மாணவர்களுக்கான பிரார்த்தனை அறையும் புதிதாகக்கட்டப்பட்டுள்ளது. கணினிஅறை, நூல்நிலையம், ஆய்வுகூடங்கள் என்று பல வளங்கள் இவருடைய காலத்திலேயே இப்பாடசாலைக்குப் கிடைத்துள்ளது. போக்குவரத்திற்காக ஒரு முச்சக்கரவண்டியும், பஸ்சும் கிடைத்துள்ளது.

எனவே பாடசாலைக்குத் தேவையான வளத்தை ஏற்படுத்தி மாணவிகளின் கற்றலைச் சிறப்பாக நடத்திய பெருமை இவரையே சாரும். பரிசளிப்பு விழாவிற்கான பரிசுகளை பழைய மாணவிகள் சங்கங்களுக்கூடாக வாங்கி மாணவிகளுக்குக் கொடுத்தது சிறப்பான செயற்பாடாகும். விளையாட்டுக்களில் அதிக அக்கறை எடுத்து துடுப்பாட்டம், வலைப்பந்தாட்டம் போன்றவற்றிற்கான பயிற்சியளிப்பவர்களை வரவழைத்து மாணவிகளுக்குப் பயிற்சி அளித்ததன் பயனாக அவர்கள் மாவட்டமட்டம், அகில இலங்கை, மட்டம் என்று போட்டிகளில் சிறப்பாக கலந்து வெற்றியும் பெற்றனர். விளையாட்டுக்களுக்காகவும் பழைய மாணவிகள் சங்கத்தினூடாக நிதியைப்பெற்று அவ்விளையாட்டுக்களுக்குப் பயன்படுத்தி மாணவிகளின் திறமையை வெளிக்கொணர்ந்தார். இவ்வாறாக கல்வி, விளையாட்டு போன்ற துறைகளில் பலரின் ஒத்துழைப்புடன் பாடசாலையை முன்னேற்றிய பெருமை இவரையே சாரும்.

இவ்வாறான செயல்திறனுடைய அதிபரின் ஓய்வு பாடசாலைக்கு ஒரு பேரிழப்பாகும். ஆயினும் இப்பாடசாலையின் புகழை மங்கவிடாமல் காக்கும் வலிமை ஏனையவர்களுக்கும் உண்டு என்பதனால் எதிர்காலத்தில் இப்பாடசாலை பேரும் புகழுடனும் மிளிரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. திருமதி செல்வமலர் சுந்தரேசனின் அற்பணிப்பான சேவைக்கு நாம் போற்றவேண்டும். அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டிநிற்கின்றோம்.





# துணிவும் நேர்மையும் கொண்டு செயற்படும் திறன் கொண்டவர்

**செல்வி. அ. கந்தையா**
ஓய்வு நிலை அதிபர்,
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.

**த**னது சேவையில் இருந்து ஓய்வுபெறும் திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களுக்குப் பாராட்டுக் கட்டுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். 1993ஆம் ஆண்டில் இருந்து 1997ஆம் ஆண்டு வரை குறுகிய காலமாக இருந்தாலும் தனது நிறைவான பணியால் யா/பெரியபுலம் மகா வித்தியாலயம் நினைவு கூரும் ஒருவராகச் செயற்பட்டவர் என்று சொல்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1993ஆம் ஆண்டு அதிபர் 2 தரத்திலான ஆசிரியராக அவர் எமது பாடசாலைக்கு வந்தபோது நான் அங்கு உபஅதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அத்துடன் 40 பாடவேளை ஆசிரியரும் கூட. இயல்பாகவே பாடசம்பந்தமான கருத்துப் பகிர்வுகள் இருவரிடையேயும் ஒரு நெருக்கத்தைத் தந்திருந்தது. அதன் காரணமாக பாடசாலை சார் கல்விச் செயற்பாடுகள் அனைத்திலும் மிக ஆர்வமாகக் கலந்து கொள்வார். மாணவர்களை வழி நடாத்துதல், ஆசிரியர்களோடு இணைந்து செயற்படுதல், காலமறிந்து உதவுதல், துணிவும் - நேர்மையும் கொண்டு செயற்படும் திறன், அத்தனையும் ஒருங்கே அமையப் பெற்றவராய் இருந்தார். பாடசாலைச் செயற்பாட்டுக்கு முழுவிருப்போடு தனது பங்களிப்பைப் பகிர்ந்து கொள்வார். மாணாக்கள் ஒழுங்கமைப்பு, காலைப் பிரார்த்தனை உடற்பயிற்சி செயற்பாடு, விளையாட்டுப் போட்டி சமய, தமிழ் விழாக்கள் என்று சகல நிகழ்வுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கும் தன்மை கொண்டவராக விளங்கினார். எமது பாடசாலையின் தனித்துவமான பண்பாக சகல ஆசிரியர்களும் ஒரே குடும்பம் போன்றும், மாணாக்கர் அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தோடும் தான் நாம் அனைவரும் செயற்பட்ட படியால் எம்மால் நிரம்பவே சாதிக்கமுடிந்தது. இப்பட்டறிவு திருமதி செல்வமலர் சுந்தரேசனது அதிபர் கால செயற்பாடுகளுக்கு நிச்சயமாக கை கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. பாடசாலையின் யா/பரியோவன் முதலுதவிப்படையிலும்

அங்கத்தவராகக் செயற்பட்டுள்ளார். இந்து நாகரிகத் துறையில் நாங்கள் இருவரும் இணைந்திருந்த காரணத்தால் 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வு வரை இந்துநாகரிகப் பாடத்தின் வளவாளர்களாக நாங்கள் செயற்பட்டு க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான பல கருத்தரங்குகளைப் பாடசாலைகளில் நடத்தியுள்ளோம் என்பதும் நினைவுக்கு வருகின்றது.

1997ஆம் ஆண்டு உப அதிபராக இருந்த நான் அதிபராக பதவிஉயர்வு பெற்றுச் செல்ல எனக்கு உபஅதிபராக திருமதி.செ.சுந்தரேசன் அவர்கள் நியமனம் பெற்றார். இங்கு ஏற்கனவே சகல செயற்பாடுகளுடன் பெற்றுக் கொண்ட பட்டறிவுடன், இங்கு பெற்றுக்கொண்ட முகாமைத்துவ அனுபவம் அவருக்கு ஒரு சிறந்த அதிபராகும் வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தது எனலாம். தான் கல்வி கற்ற தான் பிறந்த மண்ணில் பதவி கிடைக்கும் போது அதனைப் பொறுப்பேற்பது தார்மீகக் கடமையாகும். “என்னை இந்நிலைக்கு உயர்த்திய கல்லூரியின் வளர்ச்சிக்கு என்னாலான பங்களிப்பைச் செய்வதோடு என் போன்று மாணவரையும் பெருமையுடன் வாழச் செய்ய வேண்டும்” என்ற ஒரு அவா அவரிடம் இருந்ததை உணர முடிந்தது. அதை நன்றே நிறைவாகச் செய்துள்ளார்.

அதிபர் பதவி என்பது மிகப்பொறுப்பு வாய்ந்த பதவி. சமூக அந்தஸ்திலும் மிக உயர்ந்த பதவியாகும். பாடசாலைகளில் இருந்து வெளியேறிய மாணவர்கள் தான் பல்வேறுபட்ட பதவிகளையும் வகிக்கின்றனர். அவர்களை நல்ல பிரஜைகளாகச் சமூகத்துக்களிக்கும் பொறுப்பு பாடசாலைகளுக்குரியது. அந்தப் பாடசாலையின் அதிபர் துணிவு, ஆளுமை, வாண்மைச் சிறப்பு, அர்ப்பணிப்பு மிக்கவராக இருந்தால் சாதிக்கலாம், நிறையவே சாதிக்கலாம். அதைச் செயலில் காட்டியுள்ளார் திருமதி.சுந்தரேசன் அதிபர் என்றால் மிகையாகாது. பாடசாலை பல்வளமும் பெற்றுப் பெருகிட பாங்குடன் பணிபுரிந்து ஓய்வு பெற்றுச் சென்றாலும் அவர் தம் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

இவரது ஓய்வுக்காலம் சிறப்புறவும், கல்வித்துறையில் இவரது சேவை தேவைக்கேற்ப தொடரவும் வாழ்த்துகின்றேன்.

**"தனியார் கல்வி நிலையங்களின் ஆதிக்கம் மேலோங்கி நிற்கின்ற இச் சூழ்நிலையிலே எமது கல்லூரி மாணவர்கள் பலர் பாடசாலைக் கல்வியை நம்புகின்றார்கள்"**

**-திருவாட்டி செல்வமலர் சுந்தரேசன்-**

**சாதனை நாயகி செல்வமலர் சுந்தரேசனோடு......**

**தொடுத்தவர் : நாகாஸ்திரன்**

**கேள்வி :**

**01. ஈழத்து பெண் கல்வி வரலாறு என்ற புத்தகத்தின் காத்திரமான அத்தியாயமாக விளங்கும் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் அதிபராக அணிசெய்யும் நீங்கள் உங்களுடைய குடும்பச்சூழல் பற்றிச் சுருக்கமாக கூறுங்கள்.**

**பதில் :**

*யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் 1954 ஏப்ரல் 4ஆம் திகதி பிறந்தேன். தந்தையார் வைத்திலிங்கம், பரமலிங்கம். இவர் பிரபல கட்டட ஒப்பந்தக்காரர். தாயார் சரஸ்வதி பரமலிங்கம். இக்கல்லூரியின் பழைய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. நாங்கள் ஐந்து பெண்கள், மூன்று ஆண்கள், எட்டு பேரில் ஏழு பேர் இந்தக்கல்லூரியின் பழைய மாணவர்கள். எல்லோரும் கல்வி கற்று உயர்நிலையில் இருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இதிலும் குறிப்பாக எனது சகோதரன் சித்திரவேலாயுதம் உப பொலிஸ் அதிகாரியாகப் பணியாற்றியவர். எனது சகோதரர்கள் வெளிநாட்டிலும், கொழும்பிலும், அரச துறையிலும், சுற்றாடற் துறையிலும் பணியாற்றுகின்றார்கள். எனது பெற்றோர்களும் சகோதரர்களும் என் உயர்வுக்கு பல்வேறு வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர்கள் என்பதை இவ்விடத்தில் கூற விரும்புகின்றேன். என் பெற்றோர்களைப் பொறுத்த வரையில் தம்மை மெழுகாக்கி என் வாழ்விற்கு ஒளி கொடுத்தவர்கள் என்று தான் கூறுவேன்.*

**கேள்வி :**

**02. எமது பிரதேசத்தின் பெண் முகாமைத்துவத்திற்கு முன்மாதிரியாக இருக்கும் நீங்கள் உங்கள் கல்விச்சூழல் பற்றிக் குறிப்பிடுங்கள்.**

**பதில் :**

எனது பாடசாலைக்கல்வி முழுவதும் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையாகவே அமைந்துவிட்டது. உயர்தரத்தில் விஞ்ஞானப்பிரிவில் கல்வி கற்றேன். ஆயினும் பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியாக வெளியேறும் வாய்ப்புக் கிடைத்தது. மீப்பே தேசிய கல்வி முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தில் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ சான்றிதழைப் (PGDEM) பெற்றிருக்கிறேன். இங்கு கல்வி கற்ற ஐம்பது மாணவர்களில் 5 தமிழர்களில் நான் ஒருத்தி தான் பெண். இக்கற்கை நெறி ஆங்கில மொழி மூலமானதாக அமைந்திருந்தது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தொழில்சார் ஆங்கிலச் சான்றிதழையும் பெற்றிருக்கின்றேன்.

**கேள்வி :**

**03. பாடசாலைக்காலத்தில் நீங்கள் பெற்றுக்கொண்ட முன்மாதிரி/மாதிரிகள் பற்றி சொல்லுங்கள்.**

**பதில் :**

வகுப்புத்தலைவியாக, மாணவத்தலைவியாக இல்லத்தலைவியாக இருந்திருக்கிறேன். இப்பதவிகளின் ஊடகத் தலைமைத்துவ ஆளுமைகளைப் பெற்றிருக்கிறேன். தரம் 8 வரை எனக்கு அதிபராக இருந்தவர் செல்வி சின்னையா. அவரிடமிருந்து அன்பு, அரவணைப்பு போன்ற உயர்ந்த விழுமியங்களை கற்றிருக்கிறேன். செல்வி. பெரியதம்பியிடம் (பின்நாளில் மாகாணக்கல்விப்பணிப்பாளராக இருந்தவர்) கணிதத்தைப் பயின்றவள். இவரிடம் இருந்து அன்பு, பண்பு, உண்மை, துணிதிறன் என்பவற்றை பெற்று இன்றும் இவற்றை என் வாழ்வில் பின்பற்றி வருகிறேன். செல்வி.அருள்நந்தி, திருமதி அரியரட்ணம், திருமதி அருள்பிரகாசம் ஆகியோர் நான் சாரணியத்தில் ஈடுபடுவதற்கு காரணமானவர்கள். தற்துணிவு, எதையும் செயற்படுத்தும் திறன், துணிந்து உரைக்கும் ஆற்றல் போன்றவற்றை சாரணிய காலத்தில் பெற்றுக் கொண்டேன்.

**கேள்வி :**

**04. உங்களுடைய மாணவர்கள் சாதனைகளின் இமயத்தை எட்டவேண்டும் என்று சதா எண்ணிக் கொண்டிருக்கின்ற நீங்கள் உங்கள் பள்ளிக்காலத்தில் பெற்றுக்கொண்ட சாதனைகள் பற்றி கூறுங்கள்.**

**பதில் :**

1973ம் ஆண்டு "சிறந்த சாரணி" ஆக தெரிவு செய்யப்பட்டு அவ்வாண்டு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பேராசிரியர் சு.வித்தியானந்தனால் கௌரவிக்கப்பட்டேன். 1974ஆம் ஆண்டு பாடரீதியாக நடத்தப்பட்ட போட்டியில் சிறந்த மாணவிக்கான பரிசு (மனைப்பொருளியல்) எனக்குக் கிடைத்தது. இவை எல்லாவற்றையும் தாண்டி இன்றும் என்னுள் காணப்படுகின்ற நேர்மை, அன்பு, குருபக்தி, தற்துணிவு, பிறரை மதிக்கும் திறன், துணிந்து உரைக்கும் ஆற்றல், உள்ளத்தூய்மை போன்றவற்றை பாடசாலைக்காலத்தில் நான் பெற்றுக்கொண்ட சாதனைகளாக எண்ணிப் பெருமையடைகிறேன்.

**கேள்வி :**

**05. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற முதுமொழிக்கிணங்க நீங்கள் பெற்றுக்கொண்ட அறிவினை மாணவர்க்கு விதைக்கின்ற உயர்ந்த தொழிலாகிய ஆசிரியத் தொழிலை தேர்ந்தெடுக்கிறீர்கள். உங்களுடைய கல்விப்பணியை கூர்ந்து கவனிக்கின்ற போது நீங்கள் ஆசிரியராக உருவாக்கியவர் அல்லர். ஆசிரியராக பிறந்தவராக சொல்லத்தோன்றுகிறது. உங்கள் ஆசிரியப்பணி பற்றி சுருக்கமாக பகிர்ந்து கொள்ளுங்கள்.**

**பதில் :**

*1984 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 10 ஆம் திகதி கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் எனது ஆசிரியப்பணியை ஆரம்பித்தேன். இப்பாடசாலையில் உயர்தர கலைப்பிரிவு மாணவர்களுக்கு பொருளியல், இந்து நாகரிகம், புவியியல் ஆகிய பாடங்களைக் கற்பித்தேன். க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்பித்தேன். இதைவிட இந்துமாமன்றம், உயர்தர மாணவர்மன்றம் என்பவற்றிற்கு பொறுப்பாசிரியராக பணியாற்றியிருக்கிறேன். விளையாட்டுக்குழுவிலும் இருந்திருக்கிறேன். 'அருள் கல்வி வட்டம்' கல்லூரியில் பிள்ளையார் ஆலயத்தை அமைக்க முற்பட்ட பொழுது அதற்குப் பொறுப்பாக இருந்து ஆவன செய்திருக்கிறேன். என்னோடு இருந்த எனது சக ஆசிரியர்கள் எனது ஆத்மீக பணியினைக்கண்டு தங்கம்மா அப்பாக்குட்டி என்று செல்லமாக அழைப்பதையும் இவ்விடத்தில் நினைத்துப்பார்க்கிறேன். 1992ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளராக பணியாற்றிய வைரமுத்து சுந்தரேசன் அவர்களை மணந்து கொண்டேன். இதனால் மாற்றலாகி சொந்த இடத்திற்கு (யாழ்ப்பாணம்) வரவேண்டிய தேவை ஏற்பட்டது. 1993ம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி மாற்றலாகி யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயத்திற்கு ஆசிரியராக பணியாற்ற வந்தேன். அப்பொழுது அதிபராக இருந்தவர் திருவாளர் கட்டைடபறிச்சான் கனகசிங்கம். இவர் 1997 தை யாழ் இந்துக்கல்லூரிக்கு அதிபராகச் சென்றார். செல்வி அ.கந்தையா அவர்கள் கல்லூரியின் அதிபர் ஆனார். எனக்கு உபஅதிபராக பணியாற்றுகின்ற வாய்ப்புக்கிடைத்தது. யூன் 16 வரையும் உபஅதிபராக பணியாற்றினேன். பின்னர் இப்பாடசாலைக்கு அதிபராக வந்துவிட்டேன்.*

**கேள்வி :**

**06. உங்களுடைய முகாமைத்துவம் சற்று வித்தியாசமானது. மாணவர்களை நேசிக்கும் அதே நேரம் ஆசிரியர்களை நேசிக்கும் நல்ல ஒரு அதிபராகவும் இருக்கிறீர்கள். விட்டுக்கொடுக்கும் முகாமைத்துவத்தினூடாக நிர்வாகத்தில் வெற்றியையும் மாணவர்கள், ஆசிரியர்களின் உள்ளத்தில் அழியாத இடத்தையும் பெற்று இருக்கிறீர்கள். இத்தகைய உங்களுடைய முகாமைத்துவ திறன்களுக்கான அனுபவத்தை ஆசிரியத்தொழில் இருந்து பெற்றிருக்கிறீர்களா? அதுபற்றி கூறுங்கள்?**

**பதில் :**

*முழுக்க முழுக்க ஆசிரியத் தொழிலில் இருந்துதான் பெற்றிருக்கிறேன் எனக் கூற மாட்டேன். ஆசிரியத் தொழிலில் இருந்தும் பெற்றிருக்கிறேன். கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் முக்கியமானது. இதைவிட சாரணியத்தில் இருந்த காலத்தில் பெற்றுக்கொண்ட அனுபவங்களும், வெளிநாடுகளில் சென்று பெற்றுக்கொண்ட பயிற்சிகளும் எனது முகாமைத்துவத் திறனுக்கு வழிவகுத்தன. ஹாட்லிக்கல்லூரி என்றால் பூரணம்பிள்ளை என்று சொல்வார்கள். மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை என்றால்*

செல்வமலர் எனச் சொல்லவேண்டும் என்ற எண்ணம் எனது உள்ளத்தில் ஆழமாக பதிந்துள்ளது. இந்த எண்ணத்தின் உந்துதலும் எனது முகாமைத்துவத்தின் வெற்றிக்கான காரணியாக அமைந்தது.

**கேள்வி :**

**07. ஆசிரியப்பணியில் ஏதாவது மறக்கமுடியாத சம்பவங்கள் இருந்தால் அதுபற்றி கூறுங்கள்?**

**பதில் :**
கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் பிள்ளையார் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடத்தியமை, விவேகானந்த சிலை அமைத்தமை என்னால் மறக்கமுடியாத சம்பவங்கள். அங்கு என்னிடத்தில் கல்விபயின்ற பிள்ளைகள் “பரமலிங்கம் ரீச்சர் யாழ்ப்பாணப் பாஷையில் படிப்பிக்கிறா” என்று கூறி அன்பாகக் கற்றமையை என்னால் எப்போதும் மறக்கமுடியாது. இதைவிட ஆசிரியராக இருந்தபோது 1991 யூன் 1ம் திகதி அதிபர் பரீட்சையில் சித்தி அடைந்தமையையும் என்னால் இலகுவில் மறந்துவிடமுடியாது.

**கேள்வி :**

**08. இப் பாடசாலையில் 17 ஆண்டுகள் அதிபராக பணியாற்றியுள்ளீர்கள், உங்களது அதிபர் சேவையின் முதல் அனுபவம் பற்றி/ஆரம்ப காலங்களில் நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவம் பற்றிக்கூறுங்கள்?**

**பதில் :**
எனக்குக் கல்விகற்பித்த ஆசிரியர்கள், மூத்த ஆசிரியர்கள், ஆங்கிலத்தில் புலமை மிக்க ஆசிரியர்கள் இவர்களோடு இணைந்து அதிபராக பணியாற்றுவது என்பது ஒரு புறம் சங்கடத்தை ஏற்படுத்தியது. இன்னொருபுறம் பெருமித்தையும் உண்டுபண்ணியது. என்னைவிட 12 வயது மூத்த செல்வி தனலட்சுமி வேலுப்பிள்ளை அவர்கள் பிரதி அதிபராக இருந்தமை, செல்வி நல்லதம்பி, திருமதி ஜெபா தேவராஜா, திருமதி சரோஜினி கணபதிப்பிள்ளை, கணித விற்பன்னர் கணேசரட்ணம், கணக்கியல் விற்பன்னர் C.A தேவச்சந்திரன், திருமதி பரமகுரு இவர்களோடு இணைந்து பணியாற்றி பெற்றுக்கொண்ட அனுபவங்கள் என்னால் எப்போதும் மறக்கமுடியாது.

**கேள்வி :**

**09. உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இந்த பாடசாலை இயங்கியமை யாவரும் அறிந்த விடயம். உங்களது துணி திறனை எடுத்துச் செல்வதற்கு வார்த்தைகள் இல்லை என்று தான் நினைக்கின்றேன். அக்காலத்தில் எதிர்கொண்ட சவால்களை குறிப்பிடுங்கள்.**

**பதில் :**

மாணவர்களின் பாதுகாப்பு என்பது எனக்கு பெரும்பிரச்சினையாக இருந்தது. கற்றலுக்கான சூழலை உருவாக்கிக் கொடுப்பது என்பது பெரும்சவாலாக இருந்தது. சமூகத்திற்கும் எங்களுக்குமான இடைவினைத்தொடர்பு என்பது மிகமிக அரிதாகவே இருந்தது. பாடசாலைக்கு விருந்தினர்களை அழைப்பது, கல்வி அதிகாரிகள் கல்லூரிக்கு விஜயம் செய்வது என்பது கடினமான காரியமாக இருந்தது. அப்பொழுது எனக்கும் பெரிய வயதில்லை. அதுவும் ஒரு சவால்தான்.

**கேள்வி :**

**10. 2004ம் ஆண்டு மார்கழி மாதம் எமது பிரதேசம் ஆழிப்பேரலையால் சொல்ல முடியாத இன்னல்களையும் அழிவுகளையும் சந்தித்தது. உங்களுடைய பாடசாலையும் ஆழிப்பேரலைக்குள் அகப்பட்டுக் கொண்டது. ஆனால் இன்று எழில்மிகு தோற்றத்தோடு காட்சியளிக்கிறது. இந்நிலைக்கு இக்கல்லூரியை கொண்டு வர நீங்கள் எதிர்கொண்ட சவால்கள், முயற்சிகள் பற்றி கூறுங்கள்.**

**பதில் :**

*2009 வரை குறிப்பிட்டு சொல்லத்தக்க அளவிற்கு எந்த அபிவிருத்தியையும் மேற்கொள்ள முடியவில்லை. காரணம் எமது பாடசாலை உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்தமை ஆகும். பின்னர் படிப்படியாக பழைய மாணவர் சங்கங்கள் பொது அமைப்புக்கள். மெதடிஸ்த திருச்சபை, கல்வித்திணைக்களம், கல்வி அமைச்சு, தனிநபர் என பல தரப்பட்டவர்களினுடைய உதவியோடும் அபிவிருத்திகளினை மேற்கொண்டேன்.*

**கேள்வி :**

**11. உங்கள் பணிக்காலத்தில் கல்லூரியின் பௌதீக வள மேம்பாட்டிற்காக கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களம் என்பவற்றிற்கு அப்பால் துணை செய்த அமைப்புக்கள் நபர்கள் பற்றி குறிப்பிடுங்கள்.**

**பதில் :**

* *இக்கல்லூரியின் பழைய மாணவியும் பொறியியலாளருமான செல்வி.சாந்தா தர்மரட்ணம் அவர்களினால் UNOPS நிறுவன உதவியுடன் பாடசாலையின் கிழக்குப்பகுதியில் புதிய பாலமும், நுழைவாயிலும் அமைக்கப்பட்டமை.*

* *மெதடிஸ்த திருச்சபையின் உதவியுடன் சுற்றுமதிலும் பிரார்த்தனை மண்டபமும் அமைக்கப்பட்டமை*

* *ஜேர்மனியைச் சேர்ந்த செனற்றர் அயன் கிருகரன் அவர்கள் பஸ் வண்டி ஒன்றை அன்பளிப்பு செய்தமை.*

* *ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவரும் எமது பழைய மாணவியுமாகிய திருமதி தங்கமலர் ஜெகநாதன் அவர்களின் முயற்சியால் Bield Feld மக்கள் முச்சக்கரவண்டி ஒன்றை வழங்கியமை.*

* *கனடா பழைய மாணவர் சங்கம் கல்லூரி முகப்பினை அமைத்துத்தந்தது. இதைவிட கணினிகள், விளையாட்டு உபகரணங்கள் என்பவற்றையும் வழங்கியுள்ளது.*

* *அவுஸ்திரேலியா பழைய மாணவர் சங்கம் பஸ் தரிப்பிடம், கணனிகள் சுற்று மதில் பூசித்தந்தமை, புதிய அரங்கிற்கான திரைச்சீலை வழங்கியமை என பௌதீக வள மேம்பாட்டிற்கு உதவி செய்துள்ளது.*

* *லண்டன் பழைய மாணவர் சங்கம் நூலகத்திற்கு தேவையான பௌதீக வளங்கள், Photo copy machine என்பவற்றை வழங்கியுள்ளது.*

**கேள்வி :**

**12. உங்களுடைய அதிபர் சேவைக்காலத்திலே சாதனைகளினுடைய இமயமாக/ உச்சமாககருதுபவற்றை கூறுங்கள்.**

**பதில் :**

175ம் ஆண்டு நிறைவு மலரை எனது ஆசிரியரும் எனக்கு முந்திய அதிபருமாகிய திருவாட்டி பி.தவரட்ணம் அவர்களுடன் இணைந்து வெளியிட்டமை, ஆங்கில மொழி மூல கற்கை நெறியினை ஆரம்பித்தமை, 2011ல் க.பொ.த உயர்தர மாணவர்கள் ஆங்கில மொழியில் தோற்றினர், 100% சித்தி கிடைத்தது. ஒரு மாணவி மருத்துவ பீடத்திற்கு சென்றார். 2012ல் ஆங்கில மொழி மூலம் உயர்தரத்தில் தோற்றிய பிரியந்தி தர்மராஜா மூன்று அதிவிசேட சித்திகளைப் பெற்று மருத்துவ பீடத்திற்கு சென்றார். நாம் தேசிய ரீதியில் தமிழ்மொழித்தின விழா, ஆங்கில மொழித்தினவிழா, விளையாட்டுப் போட்டி என்பவற்றில் இடங்களைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். அதிலும் குறிப்பாக 2013 ஆம் ஆண்டு 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கபடிப்போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றிருந்தோம். இரசாயனவியல் சங்கத்தால் நடத்தப்பட்ட போட்டியில் தேசிய ரீதியில் தங்க, வெள்ளி பதக்கங்களை பெற்றிருக்கிறார்கள். 2001 ஆம் ஆண்டு என்னால் இப்பாடசாலைக்கென 8 பரப்பு காணி கொள்வனவு செய்யப்பட்டது. ஒரு பரப்பு ரூ.45000 வீதம் கொள்வனவு செய்தேன். தற்போது அந்தக் காணியின் பெறுமதி 2 கோடிக்கு மேலாகும். அந்தக் காணியில் மஹிந்தோதயா ஆய்வுகூடம் அமைக்கப்பட்டு வருகிறது. 2008ம் ஆண்டு 12 மாணவர்கள் க.பொ.த சாதாரண பரீட்சையில் 10A பெற்றனர். அதே ஆண்டில் 11 மாணவர்கள் க.பொ.த உயர்தர பரீட்சையில் 3A பெற்றனர். எமது கல்லூரியினுடைய தனித்துவத்தை விளம்பத்தக்க வகையிலே மாணவர்களுக்கான சீருடை, ஆசிரியர்களுக்கான சீருடை (பெண்ணாசிரியர்), புத்தகப்பை,தொப்பி, குடை என்பன கொண்டு வரப்பட்டமை என்னுடைய சாதனைகள் என்றே நினைக்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக கடந்த 17 ஆண்டுகளாக பிரதி அதிபர்கள், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சமூகம், கல்வி அதிகாரிகள் எனப்பலதரப்பட்டவர்களோடும் எந்தவித முரண்பாடுகளுமின்றி எனது முகாமைத்துவத்தை முன்னெடுத்துச் சென்றமை மிகச்சிறந்த சாதனையாக நம்புகிறேன்.

**கேள்வி :**

**13. உங்களுடைய அதிபர் சேவைக்காலத்தின் ஆரம்பத்திலே ஓரிரு ஆண் ஆசிரியர்களோடு பணியாற்றியிருக்கிறீர்கள். தற்போது ஏறத்தாழ பதினைந்து ஆணாசிரியர்களோடு பணியாற்றி ஓய்வுபெறும் நிலையில் உள்ளீர்கள். ஆணாசிரியர்களோடு பணியாற்றிய போது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை குறிப்பிடுங்கள்.**

**பதில் :**

என்னுடைய ஆண் ஆசிரிய அணியானது மிகவும் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் பெரிதும் துணை செய்கிறார்கள். கல்லூரி விழாக்களுக்கு அவர்கள் செய்கின்ற பணி குறிப்பிடத்தக்கது. குறிப்பாக நான் இருவரைப் பற்றிச் சொல்லித்தான் ஆகவேண்டும். ஒருவர் சிவஞானம். கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மிகச்சிறப்பாக முன்னெடுத்தவர். ஆங்கில மொழி மூல கற்கை நெறி மேம்பாட்டிற்கு வழிவகுத்தவர்களில் இவர் முக்கியமானவர். உயர் பாதுகாப்பு வலயத்தில்

நாம் இருந்த இக்கட்டான சூழ்நிலையிலே முச்சக்கரவண்டி செலுத்தி எம்மாணவர்களுக்கு பெரிதும் உதவி வழங்கியவர். இவரது பணிகளை நானும் என்னுடைய பாடசாலைச் சமூகமும் என்றுமே மறக்காது. மற்றவர் முகுந்தன். எமது கல்லூரியில் ஆங்கில மொழி மூல விஞ்ஞானத்தை கற்பித்தவர். உயர்தர மாணவர்களுக்கு ஆங்கில மொழி மூலமாக உயிரியல் கற்பித்தவர். தற்போது மாற்றலாகி ஹாட்லிக் கல்லூரிக்கு சென்றுள்ளார். நான் பணித்த ஒவ்வொரு விடயங்களையும் சிரம்மேற்கொண்டு செயற்பட்டவர்.

**கேள்வி :**

**14. நீங்கள் விருதுகள், பாராட்டுக்களை எதிர்பார்க்காது சேவையே கண் என செயற்படுகின்ற ஒருவர் என்பது எங்களுக்குத் தெரியும். எனினும் உங்களுக்கு பல விருதுகள், பாராட்டுக்கள் கிடைத்திருக்கின்றன என்பதை அறிவோம். அவை பற்றி கூறுங்கள்.**

**பதில் :**

*01.06.1996ல் தரம் 1 அதிபராக பதவி உயர்வு பெற்றமை*

*2007ஆம் ஆண்டு அதிபர் சேவையின் 10 ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு பாடசாலை சமூகம் கௌரவித்தமை. கௌரவித்தவர் அப்போது கரவெட்டி பிரதேச செயலர் ஆக இருந்த சிவலிங்கம் சத்தியசீலன் அவர்கள் (தற்போது வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்)*

*2008 ஆம் ஆண்டு வெளிவாரி மதிப்பீட்டின் பொழுது வடமராட்சி கல்வி வலயத்தில் முதலாம் இடம்பெற்றமைக்கான அப்போதைய வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா அவர்களால் கௌரவிக்கப்பட்டமை. (தற்போது வடமாகாண கல்விப்பணிப்பாளர்)*

*2009ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் 9 பெரு விளையாட்டுக்களில் மாணவர்கள் பங்குபற்றியமைக்கு ஆவன செய்தமைக்காக கௌரவிக்கப்பட்டமை*
*2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஜேர்மன் தூதரகம் அழைத்து அந்நாட்டின் தேசிய கீதத்தை பாடுகின்ற வாய்ப்பை எமக்களித்து எம்மைக் கௌரவித்தமை.*
*2011 இலங்கை அதிபர் சேவை தரம் 1 சேவை மூப்பு அடிப்படையில் S.L.E.A.S-III கிடைத்தமை.*
*2011 ஏப்ரல் 8, ஜேர்மன் தூதரகம் அழைத்து பங்களிப்பு பஸ்வண்டியை வழங்கியமை.*
*2012 டிசம்பர், லண்டன் பழைய மாணயவர் சங்கம் லண்டனுக்கு அழைத்து என்னை கௌரவித்தமை*
*2013 ஒக்டோபர் 05 சிறந்த அதிபருக்கான உயர் விருதாகிய "குரு பிரதீபா பிரபா" விருது கிடைத்தமை.*

**கேள்வி :**

**15. நீங்கள் வெளிநாடுகளுக்கு சென்று கூட முகாமைத்துவ பயிற்சிகளை பெற்றுள்ளீர்கள். அங்கு பெற்றுக்கொண்ட அனுபவங்கள் சில வேளைகளில் ஏனைய முகாமையாளர்களிடம் இருந்து உங்களை வேறுபடுத்தி இருக்கிறது. அப்பயிற்சிகள் பற்றி வாசகர்களுக்கு கூறுங்கள்.**

**பதில் :**

*2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 01 முதல் ஒக்ரோபர் 28 வரை இந்தியா புதுடில்லி தேசிய கல்வி முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தில் பயிற்சி பெற்றமை.*

*2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 முதல் மூன்று வாரங்கள் கனடா, ஒன்ராரியோ அதிபர் சங்கத்தில் பயிற்சி பெற்றமை. இப் பயிற்சிகள் எனது பாடசாலையில் நான் சாதனைகளைப் படைக்கும் திறனை வளர்த்தன.*

**கேள்வி :**

**16. உங்கள் முகாமைத்துவத்தின் கீழ் இப்பாடசாலை திறந்த பாடசாலையாக காணப்படுகிறது. நீங்கள் பழைய மாணவர் சங்கம், பெற்றோர், பழைய மாணவர், சமூகம், கல்வித்திணைக்களங்கள் என பலதரப்பட்டவர்களோடும் சிறந்த இடைவினைத் தொடர்பினை கொண்டிருக்கிறீர்கள். இவை பற்றி குறிப்பிடுங்கள்.**

**பதில் :**

*எமது பாடசாலை ஒரு நவோதயா பாடசாலை எனவே கல்வி அமைச்சோடும் எமக்கு நேரடித்தொடர்பு இருக்கிறது. கனடா, அவுஸ்திரேலியா, லண்டன், கொழும்பு பழையமாணவர் சங்க கிளைகளோடு சுமூகமான உறவுகளைப் பேணி காலத்திற்கு காலம் பௌதீக ஆளணி வளப்பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்து வந்திருக்கிறேன். எனது பணிக்காலத்தில் நான்கு வலயக்கல்விப்பணிப்பாளர்களை சந்தித்திருக்கிறேன். உயர்திரு.சி.சிவராஜா, வே.தி.செல்வரட்ணம், வை.செல்வராஜா, சி.நந்தகுமார் இவர்கள் எனக்கு வழங்கிய ஆதரவுகளையும் வழிகாட்டல்களையும் என்றுமே என்னால் மறக்க முடியாது.*

**கேள்வி :**

**17. ஆரம்பத்திலேயே நான் இந்தக்கேள்வியை கேட்டிருக்க வேண்டும். பரவாயில்லை உங்களுடைய வாழ்க்கைத்துணைவர் கலாநிதி.வைரமுத்து சுந்தரேசன் அவர்கள் நாடறிந்த ஆங்கில அறிஞர். யாழ்.பல்கலைக்கழகத்தினுடைய முதுநிலை விரிவுரையாளர். உங்கள் செயற்பாடுகளுக்கு அவர் எப்போதும் உறுதுணையாக இருந்திருப்பார் என நம்புகிறோம். உங்கள் செயற்பாடுகளுக்கு அவர் ஆவன செய்தவாற்றை கூறுங்கள்.**

**பதில் :**

*இவரை நான் 1992 ஆம் ஆண்டு மணந்து கொண்டேன். கல்லூரியிலே நான் முழுமையான அர்ப்பணிப்போடு செயற்பட்டிருக்கிறேன் என்றால் அதற்கு காரணம் இவர்தான். எனது ஆங்கில அறிவு மேம்பாட்டிற்கும் இவர்தான் மூலகாரணம். எனது வீட்டினைத் தேடி ஆசிரியர்கள், மாணவர்கள் வந்தால் அவர்களை அன்போடு வரவேற்று உரையாடுவார். இவரது பண்பு நலனை எனது ஆசிரியர்கள் மெய்ச்சி கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். இவரிடத்திலே வந்து ஆலோசனைகளை பெறுகின்ற எனது ஆசிரியர்களும் உளர். தந்தையாக போற்றுகின்ற ஆசிரியர்கள் கூட இருக்கிறார்கள். எமது கல்லூரிக்கு வருகை தந்து எமது ஆசிரியர்களின் ஆங்கில அறிவு மேம்பாட்டிற்கான செயல் அமர்வுகளில் பங்கெடுத்து கொண்டமையையும் இங்கு குறிப்பிட்டு தான் ஆக வேண்டும்.*

**கேள்வி :**

**18. பொதுவாக ஆசிரியர்களினுடைய அர்ப்பணிப்பு அருகிக்கொண்டு வருகிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. இதுபற்றி உங்களுடைய கருத்தென்ன?**

**பதில் :**

*இப்படி ஒரு குற்றச்சாட்டு இன்று பரவலாக பேசப்படுகிறது. ஆயினும் எமது பாடசாலை ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் இக்குற்றசாட்டினை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.*

மிக அர்ப்பணிப்போடு செயற்படுகின்ற ஒரு ஆசிரிய ஆளணி எனக்கு கிடைத்திருக்கிறது. எனது ஆசிரியர்கள் காலம் பாராது நேரம் பாராது செயற்படுகின்ற தியாகிகள் என்று தான் சொல்ல வேண்டும். தனியார் கல்வி நிலையங்களின் ஆதிக்கம் மேலோங்கி நிற்கின்ற இச் சூழ்நிலையிலே எமது கல்லூரி மாணவிகள் பலர் பாடசாலைக் கல்வியை அதிகம் நம்புவதை நான் அறிவேன். இதற்கு காரணம் எனது ஆசிரிய ஆளணியின் அறிவும், அர்ப்பணிப்பும் ஆகும். இதனால் தான் நான் முன்னே குறிப்பிட்ட சாதனைகளை எல்லாம் எட்டமுடிந்தது.

**கேள்வி :**

**19. மாணவர்கள் முன்னைய காலங்களைப் போல கல்வியில் ஈடுபாடில்லை. ஒழுக்க விழுமியங்களில் இருந்து விலகிச் செல்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் மாணவர் மீது செலுத்தப்படுகிறது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

**பதில் :**

உலகப்போக்குகள், போட்டித்தன்மை, நவீன சாதனங்களினுடைய செல்வாக்கு, நகரமயமாதல், கூட்டுக்குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட சிதைவு இவற்றினால் மாணவர்கள் இன்று ஒழுக்க விழுமியங்களிலிருந்து விலகித்தான் செல்கிறார்கள். எனது பணிக் காலத்திலே எனது மாணவிகளிலும் ஒரு சிலரை நான் சந்தித்துள்ளேன். ஆயினும் அவர்களுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி தகுந்த பாதைக்கு அவர்களை கொண்டு வந்து திருத்தியிருக்கிறேன். இன்று அவர்களில் சிலர் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள். பொதுவாக எங்களுடைய மாணவிகள் நல்லொழுக்கம் உடையவர்களாகவும் குருபக்தி கொண்டவர்களும், தலைமைத்துவ பண்புகளை தாங்கியவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

**கேள்வி :**

**20. ஆசிரியராக அதிபராக எம்மண்ணினுடைய கல்வி மேம்பாட்டிற்கு அரும்பணியாற்றி யுள்ளீர்கள். எமது கல்விப்புலத்திற்கு நீங்கள் கூற விரும்பும் உயர்ந்த கருத்து என்ன?**

**பதில் :**

அர்ப்பணிப்புடனும், விசுவாசத்துடனும், நேர்மையுடனும் செயற்படுங்கள் பகவான் கூறியதை போல பலனை எதிர்பாராது கடமையைச் செய்யுங்கள். கர்ம யோகத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**கேள்வி :**

**21. எதிர்காலத்தில் இக்கல்லூரி எத்தகைய பண்புநலன்களையும் செயற்பாடுகளையும் கொண்டிருக்க வேண்டும் என விரும்புகிறீர்கள்?**

**பதில் :**

191 ஆண்டுகள் நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டது இப் பாடசாலை. 1823ம் ஆண்டு வணக்கத்திற்குரிய தோமஸ் ஸ்வான்ஸ் அவர்கள் இந்தக் கல்லூரியை ஆரம்பித்தார். என்ன இலக்குகளோடு ஆரம்பித்தாரோ அந்த இலக்கோடு இந்த கல்லூரி இயங்க வேண்டும். எமது மாணவிகள் உயர்ந்த விழுமியத்தை கொண்டவர்களாக சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றி கொள்ளக்கூடிய ஆற்றலுடையவர்களாக, ஆங்கில மொழியுடன் கூடிய உயர் ஆற்றலுடையவர்களாக விளங்க வேண்டும். என்றும் அதிபரும், ஆசிரியரும், மாணவரும் ஒரு தாய் பிள்ளை போல ஒரு குடையின் கீழ் இயங்க வேண்டும். இவை தான் என்னுடைய உயர்ந்த எதிர்பார்ப்புக்கள்.

**கேள்வி :**

**22. உங்களுடைய பணிக்காலங்களில் பல வாரிசுகளை பெற்றிருக்கிறீர்கள் குறிப்பிட்டு கூறத்தக்க வாரிசுகளாக யாரையாவது கூற விரும்புகிறீர்களா? அப்படியாயின் கூறுங்கள்?**

**பதில் :**

என்னிடத்திலே கல்வி கற்று பின்னர் என்னோடு பணியாற்றிய இருவரை மறந்து விட முடியாது. ஒன்று திருமதி.ரோகினி சிவதாசன் மற்றவர் திருமதி.மீரா கிருஷ்ணகாந்தன். இவர்கள் இருவரும் பாடசாலைக் கருமங்களில் மட்டுமல்ல தனிப்பட்ட கருமங்களுக்கும் துணை செய்பவர்கள். பெற்ற தாயைப் போல என்னைப் பேணியவர்கள். இதைவிட சிவரூபினி சண்முகதாஸ் அவர்களையும் அவர்கள் கல்லூரிக்கு ஆற்றிய பணி, என்மீது கொண்ட அன்பு, மரியாதை என்பவற்றையும் இலகுவில் மறந்துவிட முடியாது. இவர்கள் மூவரையும் என் வாரிசுகள் என்று கூறுவதில் பெருமைப்படுகின்றேன். சமகாலத்தில் என்னோடு கல்வி பயின்று எனக்குக்கீழ் பணியாற்றிய திருவாட்டி இந்திராணி ஸ்ரீரங்கன், திருவாட்டி ராகினி ஆனந்தராஜா, திருவாட்டி லீலா கணேசலிங்கம், திருவாட்டி வசந்தாதேவி வேலும்மயிலும், திருவாட்டி சோதிமலர் தியாகலிங்கம், திருவாட்டி கௌரி சேதுராஜா இவர்கள் எனக்கு வழங்கிய ஒத்துழைப்பையும் ஆதரவையும் என்றுமே என்னால் மறக்க முடியாது.


**கேள்வி :**

**23. ஓய்வின் பின்னரான சமூக மேம்பாட்டிற்கான சில திட்டங்களை வகுத்திருந்தால் அதுபற்றி கூறுங்கள்.**

**பதில் :**

பொது அமைப்புக்களோடு இணைந்து எமது பிரதேசத்தினுடைய கல்வி, கலை மேம்பாட்டிற்கு உழைக்க வேண்டும் என்பது எனது பேரவா. பெண்கல்வி, பெண்கள் மேம்பாடு தொடர்பான திட்டங்களை முன்வைக்கக்கூடிய அனுபவம் தாராளமாக எனக்குக் கிடைத்துள்ளது. நாளடைவில் இதுசார்ந்த அமைப்புக்களுடன் இணைந்து செயற்படத் திட்டமிட்டுள்ளேன். உடனடியாக என் ஓய்வின் பின் அகில இலங்கை இளங்கோ கழகத்தினருடன் இணைந்து அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கி எமது பிரதேசத்தின் கல்வி, கலை, இலக்கிய மேம்பாட்டிற்கு உழைப்பதாக திட்டமிட்டுள்ளேன்.

**நன்றி.**





# அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் 1997-2014 வரை. எம் பாடசாலை

**திருமதி. இ. சிறீரங்கன்**
ஓய்வுநிலை பிரதிஅதிபர்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.
செயலாளர், மணிவிழாக்குழு.

முன்நோக்கி, மேல்நோக்கி, ஒளியைநோக்கி (onward upward to wards the light) என்ற மகுட வாசகத்திற்கு அமைவாக, பெண்களின் கல்வியில் இருள் அகற்றி ஞானக்கண்ணை ஒளிரச்செய்யும் கலங்கரை விளக்காக அமைந்துள்ள கலைக்கூடமே யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையாகும்.

ஏறத்தாழ 190 ஆண்டுகள் வரலாற்றுப்பெருமை உடைய இப்பாடசாலை அர்ப்பணிப்பும், துணிச்சலும், ஆளுமையும் கொண்ட பல அதிபர்களின் தன்னலமற்ற சேவையால் உலகெங்கும் புகழ் மணம் பரப்பி, உயர்ந்து நிற்கின்றது எனில் மிகையாகாது. அவ்வரிசையில் 1997ம் ஆண்டு, எம் பாடசாலை மாதா இளமைத்துடிப்பும், எறும்பு போன்ற சுறுசுறுப்பும், நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நடையும் என பாரதி கண்ட புதுமைப் பெண்ணை ஒத்த ஒரு மகவையும் தன்னுடன் அரவணைத்தாள். அவர் தான் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர்.திருமதி செல்வமலர் சுந்தரேசன்.

நாட்டில் அசாதாரண சூழ்நிலை காணப்பட்ட ஒரு காலப்பகுதியில் தான் அதிபர் கடமைப் பொறுப்பை ஏற்றார். பல சவால்களுக்கு மத்தியிலும் சாதனைகள் சாதித்து பாடசாலையை வளர்த்த மகிழ்வுடன் ஓய்வு பெறுகின்றார். சாதிக்க வேண்டும் என்ற மனத்திடமே அவரைச் சாதிக்க வைத்தது.

அவரது சாதனைகள் பாடசாலை வரலாற்றில் மைல் கல் என்பது வெள்ளிடை மலையாகும். அதிபர் அவர்களின் சாதனைகளை இரு வகையில் நோக்குதல் பொருத்தமுடையதாகும்.

1. பௌதீக வளங்களில் ஏற்படுத்திய சாதனை.
2. கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள்.

இவை இரண்டும் ஒரு பாடசாலை வளர்ச்சியின் இரு கண்களாகும்.

**பௌதீக வளங்கள்:-**

ஒரு பாடசாலையின் கவின்நிலை நிறைவாக அமையும் போது தான் அங்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் சுமூகமாக நடைபெறும் என்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். இதனை மனதில் கொண்ட அதிபர், போரினால் அழிந்து போன கட்டிடங்களை புனர்நிர்மாணம் செய்வதிலும், மாணவர்களின் கற்றலை மேம்படுத்தக்கூடிய கட்டிடங்கள் அமைப்பதற்கும் முனைந்தார். இவரது காலப்பகுதியில் தான் 1988ல் பிரதேச ரீதியான பாடசாலை அபிவிருத்தித்திட்டத்தில் எம் பாடசாலையும் நவோதயா பாடசாலையாக இணைக்கப்பட்டு பல நன்மைகளையும் அபிவிருத்திகளையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகவும், அதிபரின் ஆற்றலையும் ஆளுமையையும் வெளிப்படுத்தும் விடயங்களாகும்.

யுத்த அனர்த்தத்தினால் கடல் முன்பாக அழகுற அமைந்த அதிபர் காரியாலயம் சேதமாக்கப்பட்டு விளையாட்டு மைதானத்திற்கு முன்பாகவுள்ள சிறு அறையில் காரியாலயம் இயங்கி வந்தமை யாவரும் அறிந்ததாகும். ஆனால் 2004ல் புதிய அதிபர் அறை, கற்றல் வளநிலையம் ஆறு வகுப்பறைகளும் அத்திவாரமிடப்பட்டு 2006ல் கட்டிடம் முழுமையாக நிறைவு செய்யப்பட்டமை அதிபரின் ஆளுமையின் இன்னோர் தரிசனமாகும்.

பிரதான மண்டபத்திற்கு அருகிலுள்ள வகுப்பறைகள் யுத்தக் கோரப்பிடியில் அழிந்து உருத்தெரியா நிலையில், அப்பகுதிக்கு செல்வதற்கு அஞ்சிய நிலையில் GTZ நிறுவனத்தின் உதவியுடன் மாணவர்கள் அதனைப் பயன்படுத்தும் வகையில் அவற்றை புனர்நிர்மாணம் செய்த வல்லமை அவரின் மனத்திடத்தை வெளிப்படுத்தியதுடன் மாணவர்களின் நலனில் அவர் கொண்ட அக்கறையையும் தெட்டத்தெளிவாகியது.

யுத்தம், சுனாமி போன்ற அனர்த்தங்களால் மாணவர்களின் துவிச்சக்கரவண்டி தரிப்பிடங்கள் சேதமடைந்த நிலையில், கனடா பழைய மாணவர் சங்கத்தினதும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் நிதிப்பங்களிப்புடன் 2009ல் 50'x20' துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டமையும் UNOPS நிறுவன உதவியுடன் 2010ல் பாடசாலை கிழக்குப்புற வாயிலும், UMCOR நிறுவனத்தின் அனுசரணையுடன் பாடசாலைக்கான சுற்றுமதிலும், பாடசாலைக்கான கிறிஸ்தவ பிரார்த்தனை மண்டபம் ஒன்று மெதடிஸ்த திருச்சபை நிதிப்பங்களிப்புடன் கட்டி முடிக்கப்பட்டமை அதிபரின் நட்பு சிறந்த தொடர்பாடல் ஆளுமைத்திறன்களின் வெளிப்பாடாகக் கொள்ளலாம். இன்று பாடசாலையின் கனடா பழைய மாணவ சங்க அனுசரணையுடன் வடக்குப்புறமாக தலை நிமிர்ந்து நிற்கும் நுழைவாயிலும் அதிபர் அவர்களின் முன்னர் குறிப்பிட்ட ஆளுமை வெளிப்பாட்டின் இன்னோர் கூறுகளாகக் கொள்ளக்கூடியவையாகும்.

2000ல் அத்திவாரமிடப்பட்ட க.பொ.த உயர்தர உயிரியல், இரசாயன, பௌதீக விஞ்ஞான ஆய்வுக்கூடமும் கொண்ட கட்டிடத் தொகுதியானது 2010ல் வெற்றிகரமாக பூர்த்தியாக்கப்பட்டமை, மாணவர்களின் கல்வியின் மேற்கொண்ட அக்கறையும், அவரின் போதானதலைவர் என்ற ஆளுமையினை வெளிப்படுத்தும் சுட்டியாகவும் கொள்ளமுடியும்.

பாடசாலைக்கென ஓர் கேட்போர் கூடம் காணப்படாமை மிகப்பெரிய குறையாக அதிபர் மனத்தில் இருந்தமையை நன்கறிவோம். அதனை எப்படியாவது தன் பதவிக் காலத்தில் கட்டி முடிக்க வேண்டும் என்பது அவரது குறிக்கோளாகவும் இருந்தது. அக்குறிக்கோளினை 2012ல் அழகியதோர் கேட்போர் கூடத்தினை அமைத்ததன் மூலம் நிறைவேற்றினார். இவரது இச்சாதனை பாடசாலை வரலாற்றில் காத்திரமானதாகும்.

## II கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள்:-

இன்றைய அறிவு வெடிப்பு யுகத்தில் தகவல்கள் இற்றைப்படுத்த வேண்டியது அவசியமாகும். தகவல்களை இற்றைப்படுத்துவதில் கணனி அறிவு வலுவூட்ட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அதிபர் 1997ல் கணனிப்பயிற்சி நெறியை அறிமுகப்படுத்தியதுடன் 2007.06.29ல் முதலாவது வலைத்தளம் ( School website) உருவாக்கி வைத்த பெருமை திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களையே சாரும். 2009.04.24 இரண்டாவது வலைத்தளம் அமைக்கப்பட்டு வலைத்தள அமைப்பு வலுவூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சங்களில் அதிபர் தூரநோக்குடன் செயல்படும் திறனை இவை எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

சர்வதேச அரங்கில் ஆங்கில மொழிக்குள்ள காத்திரமான நிலையை உணர்ந்த அதிபர் அவர்கள் 2003ல் தரம் 6 க.பொ.த தரம் வரை ஆங்கிலமொழி மூலமான கற்கை நெறியினை பாடசாலையில் அறிமுகப்படுத்தியதுடன் ஆசிரிய ஆளணி பற்றாக்குறையாக இருந்த நிலையிலும் கூட க.பொ.த சா/த தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளை மாணவர்கள் பெற முடிந்தமை, அதிபரின் சாதுரியத்தை தெட்டத் தெளிவாக்கியது. வடமராட்சி கல்வி வலய க.பொ.த உ/த விஞ்ஞான வகுப்புக்களில் ஆங்கிலமொழி மூலமான கற்கைநெறி 2009.05.04 ஆரம்பிக்கப்பட்டு அதில் 100% மான சித்தி பெறப்பட்டமையும் அதிபரின் துணிச்சல் மிகு செயற்பாட்டை எடுத்துக்காட்டுவதுடன் காலத்தின் போக்கிற்கும் நாட்டின் தேவைக்கும் ஏற்ப மாற்றத்தை ஏற்படுத்தும் முகவர்தான் அதிபர் என்பதை எமக்கு துல்லியமாக்கியது.

மாணவர்களது கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக, அவுஸ்திரேலியா கிளை பழைய மாணவ சங்கத்தின் பங்களிப்புடன் பல்லூடகக் கருவி (Multimedia Project) ஒன்றும், லண்டன் கிளை பழைய மாணவச் சங்க அனுசரணையுடன் நிழற்பிரதி இயந்திரம் (Photo Copier) ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டு மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைக்காக பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

புதுமைகளை பாடசாலையில் புகுத்த வேண்டும் என்பதிலும் ஆர்வம் மிகுந்தவர் அதிபர் 2005ல் நாவல், மஞ்சள் வர்ண சீருடையை செவ்வாய், வியாழன் ஆகிய இரு நாட்கள் மாணவர்கள் அணியும் முறையை அறிமுகப்படுத்தியதுடன், ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டமை அவர் ஓர் புதுமை விரும்பி என்பதை எமக்கு எடுத்துக்காட்டுகிறது.

2008ல் 1 AB பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலயமட்ட வெளிவாரி மதிப்பீட்டில் 1வது இடம் எம் பாடசாலைக்கு கிடைக்கப்பெற்றமையும் கல்வி மற்றும் செயற்பாடுகளுக்கு கிடைத்த பெறுமதி மிக்க பாராட்டுகள் என்பது மறுப்பதற்கில்லை. அதிபர் சிறந்த நிர்வாகி என்பதற்கு கிடைத்த பரிசாகவும் இதனைக் கொள்ளலாம்.

### இணைப்பாடவிதான செயற்பாடுகள் விளையாட்டு:-

கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு ஆக்கங்கள், மொழித்திறன் விருத்தி போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் சிறந்து விளங்கும் போதுதான் பாடசாலை பூரண வளர்ச்சி காண்கின்றது எனலாம். 1997-2014 வரை மாகாண, தேசிய மட்டத்திலான பாடசாலையின், சாதனைகளை பின்வரும் அட்டவணைகள் எடுத்துக்காட்டுகின்றன.

அட்டவணை 1 விளையாட்டு

| ஆண்டு | நிகழ்ச்சி | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|
| 1997 | வலைப்பந்து - 17வயது உட்பட | சம்பியன் | |
| 2001 | வலைப்பந்து - 17 வயது | சம்பியன் | |
| 2010 | கரப்பந்து - 15வயது உட்பட | 1ம் இடம் | |
| | எல்லே - 19 வயது | 1ம் இடம் | |
| | சதுரங்கம் - 15வயது | 2ம் இடம் | |
| | கரப்பந்து - 19 வயது | 2ம் இடம் | |
| | கிரிக்கட் - 17வயது | 3ம் இடம் | |
| | பூப்பந்தாட்டம் | 3ம் இடம் | |
| | அஞ்சல் ஓட்டம் | 1ம் இடம் | |
| | ஈட்டி எறிதல் - 19வயது உட்பட | 1ம் இடம் | |
| | தட்டெறிதல் | 3ம் இடம் | |
| 2011 | வொலிபோல் - 15வயது | 1ம் இடம் | |
| | சதுரங்கம் - 15வயது | 1ம் இடம் | |
| | எல்லே - 19 வயது | 2ம் இடம் | |
| 2012 | பூப்பந்தாட்டம் - 15 வயது | சம்பியன் | |
| | வொலிவோல் - 17 வயது | 2ம் இடம் | |
| | சதுரங்கம் - 15 வயது | 1ம் இடம் | |
| | சதுரங்கம் - 19 வயது | 2ம் இடம் | |
| | எல்லே | 3ம் இடம் | |

அட்டவணை 2 தமிழ்மொழித்தினம்

| ஆண்டு | நிகழ்ச்சி | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|
| 1997 | சிறுகதை கீழ்ப்பிரிவு | 3ம் இடம் | -- |
| 1998 | சிறுகதை | -- | 1ம் இடம் |
| 2001 | கட்டுரை | 3ம் இடம் | -- |
| 2003 | வயலின் இசை | 3ம் இடம் | |
| 2010 | சிறுகதை | | 1ம் இடம் |
| 2013 | இலக்கிய திறனாய்வு | 3ம் இடம் | |

அட்டவணை 3 ஆங்கிலமொழித்தினம்


| Year | Events | province | National |
|---|---|---|---|
| 1997 | | | |
| 2001 | Copy writing | | 2nd |
| 2008 | Dictation | | 2nd |
| 2009 | Recitation Gr -7 | 2nd | |
| | Dictation Gr - 6 , 7 | 1st | |
| | Dictation Gr - 8 | 2nd | |
| | Copy writing Gr-10 | 1st | |
| | Creative (12) | 2nd | |
| 2010 | Dictation Gr-8 | -- | 2nd |
| | Dictation Gr-10 | -- | 3rd |
| 2011 | Copy writing Gr-12 | | |
| | Creative Gr-13 | 1st | |
| | Dictation Gr-10 | 2nd | |
| | Creative Gr-10 | 3rd | |
| | Recitation | 2nd | |
| | Story telling | 2nd | |
| 2012 | Copy writing Gr-13 | 3rd | |
| | Dictation Gr-8 | 2nd | |
| | Dictation Gr-9 | 1st | |
| | Creative | 2nd | |
| | Recitation | 2nd | |
| | story telling | 1st | |
| 2013 | Dictation Gr-6 | | 1st |

அட்டவணை 3 ஆங்கிலமொழித்தினம்

| ஆண்டு | நிகழ்ச்சி | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|
| *1997* | சைவபரிபாலனசபை தேர்வு | | 1st தங்கப்பதக்கம் |
| *1998* | சைவபரிபாலனசபை தேர்வு | | 1st தங்கப்பதக்கம் |
| *2011* | திருக்குறள் மனனம் | | 1st தங்கப்பதக்கம் |

## நிறைவுரை

அதிபர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் அவர்களின் பன்முக ஆளுமையின் வெளிப்பாடுகள் 1997-2014 ஆண்டு காலப்பகுதியில் பாடசாலை வரலாற்றில் பெறுமதியான வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பது மறுக்கமுடியாத பெருமைக்குரிய ஒன்றாகும். நீண்டகாலமாக ஒரே பாடசாலையில் அதிபராக கடமையாற்ற கிடைத்தமையும் பாடசாலையை வளர்ப்பதற்கு பலமாக அமைந்தது என்பதும் மறுப்பதற்கில்லை. இனிவரும் காலங்களிலும் பாடசாலையின் வளர்ச்சியானது மேன்மேலும் மேலோங்க வேண்டும். மகுட வாசகத்திற்கு ஏற்ப ஒளி காட்டும் கலங்கரை விளக்காக அமைய வேண்டும் என்பதே சமூகத்தின் எதிர்பார்ப்புமாகும். தொடர்ந்து பொறுப்பேற்கும் அதிபர்களும் எம் பாடசாலையை வளர்ப்பார்கள் , வலுவூட்டுவார்கள், வளம்படுத்துவார்கள் என்பதில் எவ்வித ஐயமில்லை.





# மணிவிழாக் காணும் மகத்தான சுந்தரமலருக்கு

திருமதி இந்திராணி பாஸ்கரன்

எப்படி எதை எதைக் கூறி வாழ்த்துவது என்று சிந்திக்கும்போது வார்த்தைகளைச் சுருக்க முடியவில்லை. சுருக்காவிட்டால் புத்தகத்தில் ஏனையோர்க்கு இடமிருக்காது. எனவே தத்தளித்து எழுதிப் புத்தகத்தில் இடம் கேட்கின்றேன் (பிடித்தேன்)

ஒரு தாய் தன் கருவறைக்குள் ஒரு பிள்ளை உருவான காலம் முதல் எந்தக் குறைகளும் இன்றி இமை காப்பது போல் காப்பாற்றி வளர்க்கின்றாள். தன் பிள்ளையின் எதிர்காலத்தை நோக்கியே பல கனவுகளுடனும் இருப்பார். அது போலவே தன் பாடசாலைக் கருவறைக்குள் நுழைந்துள்ள மாணவச் செல்வங்களின் முன்னேற்றத்திலேயே கண்ணும் கருத்துமாக எம் அதிபர் இருப்பதை எல்லோரும் அவதானித்திருப்பார்கள்.

அதிபர் அவர்களின் ஆளுமையின் திறமையால் எமது பாடசாலையின் மகுடவாசகத்தின் படி மாணவர்கள் முன்நோக்கி, மேல்நோக்கி ஒளியை நோக்கியே செல்கின்றனர். பிள்ளைகளின் வளர்ச்சியை ரசித்துக் கொண்டிருப்பார். பாடசாலையின் வளர்ச்சியை அவரது உயிர்நாடியாகவிருந்தது. எங்கே எங்கே செல்லவேண்டும் என்பதை நன்றாக அறிந்து செயல்பட்டு வெற்றி கொள்வதில் அவருக்கு நிகராகயாரையும் ஒப்பிடமுடியாது. போரினால் சிதறுண்டு அழிந்த நிலையில் இருந்த பாடசாலையை இன்றைய நிலைக்கு கொண்டு வந்தமைக்கு எப்படி எப்படியெல்லாம் அலைந்து திரிந்து வெற்றிகொண்டுள்ளார். வெற்றிகளைப் பெற்றுக்கொண்டும் தோல்விகளைக் கற்றுக்கொண்டும் மகத்தானசேவை செய்த எம் சீமாட்டிக்கு என்ன கைம்மாறு செய்ய முடியும். எனக்குப் பாதி வயதாயிருந்தால் பல்லக்கில் சுமந்து பார்த்திருப்பேன். வயதோ போய்விட்டது. என்செய்வோம்.

மேலிடத்தாலும், கீழிடத்தாலும் ஏற்படும் மனக்கஷ்டங்களையெல்லாம் மனத்துணிவுடன் செயற்பட்டு வெற்றி கொள்வார். உண்மை, அன்பு, பொறுமை, தர்மம் இவைகளே தெய்வம் என்று சரணடைந்து வெற்றி கொள்வார். கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும் அரவணைக்க வேண்டிய இடத்தில் அரவணைத்தும் அன்புசெலுத்தி மாணவர்களின் முன்னேற்றத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார்.

எப்பொழுதும் சுறுசுறுப்பாகவும் புன்னகையுடன் புதுயுகம் படைக்கும் செயற்றிறன் கொண்டவர். பாடசாலையுடன் இரண்டறக்கலந்து கொண்டவர். பருத்தித்துறையின் மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் கலங்கரை விளக்கு. துணிவுடன் செயல்பட்டு வெற்றி கொள்வார். ஏனைய பாடசாலைகளும் இவரின் வழிமுறைகளைப் பின்பற்றக்கூடிய நடைமுறைகளைத் துணிவுடன் செய்வார்.

கொழும்பு பழைய மாணவர் சங்கம் வடமராட்சி கிழக்கிலிருந்து வன்னிவரை உள்ள பாடசாலைகளில் வறுமையும் திறமையும் உள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மேற்கொண்டுள்ள செயற்பாட்டிற்கு தனது ஆதரவைத்தந்து, இச்செயற்பாடு எமது பாடசாலைக்கும் பெருமையாக உள்ளது என்று கூறினார்.

தன் மனதிலுள்ள நன்மை தீமைகளை மனந்திறந்து கூறி சரிபிழைகளைச் சீர்தூக்கிப் பார்த்து தன்னையே நொந்து, புன்சிரிப்புடன் வாழ்பவர்.

இலங்கையின் மூளையாகவுள்ள பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் அதிபராக 17 வருடங்கள் பணியாற்றி மூளையின் முழுவலிமையையும் உபயோகித்து திருமதி செல்வமலர் சுந்தரேசனுக்கு எங்கள் அன்பான வாழ்த்துக்களையும் கூறி சுற்றம் சூழத் தம்பதிகளாகப் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.



# வடமராட்சியின் கலங்கரை விளக்கு அதிபர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன்

**திருமதி ஜெயகுமாரி தயாநிதி**
பகுதித்தலைவர்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

ஈழத்தின் சிரசென விளங்கும் வடமராட்சியில் 1954ல் பிறந்தார். தனது உயர்தரக் கல்வியை யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் கற்றார். உயர்கல்வியைத் தொடர்ந்தாற்போல் பட்டப்படிப்பினை முடித்து அதிபர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தார். 1997ல் தான் கற்ற பாடசாலையின் அதிபர் பதவியை மிகவும் துணிச்சலுடன் ஏற்றார். கற்றோர் முதல் கல்வியறிவிலாப் பாமரரும் போற்றும் வண்ணம் தான் மேற்கொண்ட பதவியை இன்முகத்துடன் வண்ணமுற ஆற்றினார்.

தளரா மனவுறுதியும், செயற்றிறனும் நிர்வாகத்திறமையும் கொண்ட தன்னேரில்லாத் தலைவியாகத் திகழ்ந்தார். தனது பாடசாலை ஈழத்தில் முதன்மைநிலை வகிக்க வேண்டுமென்ற வேணவாவினால் கல்வியிலும், இணைபாடவிதான செயற்பாடுகளிலும் மாணவ ஆசிரியர்களை ஊக்குவிப்பதோடு அமையாது எங்கெங்கெல்லாம் உதவி பெற வேண்டுமோ மாணவ ஆசிரியர்களை உற்சாகப்படுத்த வேண்டுமோ அங்கே தானே சென்று தேவைகளைப் பூர்த்திசெய்யும் சிறப்பான அதிபர். மேலதிகாரிகளிடமும் தம் பாடசாலையின் தேவைகளை எடுத்துக்கூறித் குறைகளை நிவர்த்தி செய்வதிலும் வல்லவர். மாணவ ஆசிரியர்களுக்கு முன்மாதிரியான அதிபர். பாடசாலைச் சுத்தம் பேணுவதில் தானே வழிகாட்டியானவர்.

இவரது காலத்தில் பாடசாலை உயர் பாதுகாப்பு வலயத்தில் சிக்கியிருந்தது. தளர்ச்சியோ, தயக்கமோ இவர் காட்டவில்லை. பாடசாலையின் புகழை மங்காது காத்தார். பாடசாலையின் மகுடவாசகத்தின் குறிக்கோளுக்கிணங்க 'முன்னோக்கி, மேல்நோக்கி, ஒளியை நோக்கி" உயர்ச்சியின் உச்சத்துக்குக் கொண்டு சென்ற கலங்கரை விளக்கு.

இவர் 'ஆசிரியின் அணையா விளக்கு' என்ற கூற்றுக்கிணங்க எப்பொழுதும் கற்பதிலும் தமது வாண்மைவிருத்தியிலும் அக்கறையுள்ளவர். புதுடில்லியில் அதிபர்கள் கல்வி நிர்வாகிகளுக்காக நடைபெற்ற மூன்று வார காலப் பயிற்சியில் பங்குகொண்டார். கனடாவில் Principal Council நடாத்திய International School Leader ship Programme இல் மூன்று வார காலப் பயிற்சி பெற்றார். மீபேயில் PGDEM இல் ஆங்கிலமொழிமூல முகாமைத்துவப் பயிற்சி பெற்றார்.


பாடசாலையில் நாட்டின் அசம்பாவித்தினால் பௌதீக வளங்கள் குன்றிக் காணப்பட்டது. இவற்றைப் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், அரசாங்கம், அரசசார்பில்லா நிறுவனங்கள் என்ற பல்வகைப்பட்ட நிறுவனங்கள் மூலம் பூர்த்திசெய்தார். பாடசாலைக்கெனத் தனிப்பட்ட பேரூந்து வாகனம் இருக்கிறது. இவையாவும் அதிபரின் தனிப்பட்ட திறமைக்குச் சான்றாகும்.

இன்று வளம் கொழிக்கும் பாடசாலையாக இருப்பதுடன் தமிழ்மொழிமூல, ஆங்கிலமொழி மூலப்போதனையும் வகுப்பு 6-13 வரை கற்பிக்கப்பட்டு மாணவர்கள் சிறந்த பெறுபேறு பெற்றுப் பல்கலைக்கழகம் செல்வதையும் காணக்கூடியதாக இருக்கிறது. அத்துடன் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் வடமராட்சி வலயத்தின் புகழை மங்காது பேணும் பாடசாலையாகத் திகழ்கிறது.

இவ்வாறு சிறப்புமிக்க ஒரு பாடசாலையாக யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை திகழ எம் அதிபரின் தன்னலங்கருதாத சேவை மனப்பாங்கே காரணமெனின் மிகையாகாது.

'வயது தான் அறுபது தோற்றமோ இருபது' இளமைத் துடிப்புடனும் குழந்தை உள்ளத்துடனும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற வரம்புக்குள் நின்று தன்பணி செவ்வனே ஆற்றி பாடசாலை மாணவர்கள் கல்வியில் உன்னத பணியாற்றி என்றும் மாணவ ஆசிரியர் உள்ளங்களில் சிரித்த முகத்துடன் வீற்றிருக்கும் அதிபர் வாழ்க பல்லாண்டு! வளமுடன் வாழ்க பல்லாண்டு!

"நவில்தொறும் நூல்நயம்போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்"



# பண்பும் பாசமும் நிறைந்த ஆளுமை மிக்க சீமாட்டி

**தலைவர், அங்கத்தவர்கள்,**
பழைய மாணவர் சங்கம்,
கொழும்புக்கிளை.

*யாழ் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை கல்வியாளர்கள் நிறைந்த வடமராட்சியில் மட்டுமன்றி யாழ் மாவட்டத்தையும் தாண்டி அகில இலங்கையிலும் புகழ் பூத்த ஓர் உயரிய பாடசாலை. இத்தகு மாண்புறு பாடசாலையிலே ஆரம்பம் முதல் உயர்தரம் வரையான கல்வியைக் கற்று இன்று அதே பாடசாலையில் அதிபராகும் பாக்கியத்தைப் பெற்றவர் நம் எல்லோர் நெஞ்சங்களிலும் நிறைந்த திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்கள் படிக்கும் காலத்திலேயே செல்வமலர் என்றும் செல்வமலர் அக்கா என்றும் அன்பாக அழைக்கப்பட்டவர்.*

*அதிபரைப்பற்றி சொல்வதென்றால் அதற்கெல்லாம் இத்தாள் போதாது. இருப்பினும் ஒரு சில குறிப்புகளைப் பகிர்தல் நலம் எனக்கருதித் தொடர்கின்றோம். மிகுந்த ஆன்மீக ஈடுபாடும் கடவுள் பக்தியும் கெண்டவர். தனது பதவி குறித்த தற்பெருமையில்லாத எளிமையான சுபாவம் கொண்டவர். மனிதநேயமும் இரக்க சுபாவமும் இவரிடம் அளவுக்கு அதிகமாகவே நிரம்ப உண்டு. பாடசாலை சமூகத்தில் ஆசிரியர்களாயினும், மாணவர்களாயினும் கல்விசாரா ஊழியர்களாயினும் அவரது குடும்பங்களில் நிகழும் சுகதுக்கங்களில் தவறாது பங்குகொண்டு பாடசாலை சமூகத்தில் எல்லோரும் ஓர் அங்கம் என்பதை வெளிப்படுத்திய பெருந்தகை.*

*1997 முதல் 2014 வரை தொடர்ச்சியான அதிகூடிய 17வருட காலப்பகுதிக்கு அதிபராய் இருந்த பெருமைக்குரியவர். தான் படித்த பாடசாலையிலேயே தனக்குக் குருவாய் இருந்த ஆசிரியர்கள் கற்பிக்கும் வேளையிலேயே அதிபராய் அமர்வதென்பது ஒன்றும் அத்துணை சுலபமல்ல. நாட்டின் போர்சூழல் காரணமாக அசாதாரண சூழல் அதிகம் நிலவிய காலப்பகுதி இவரது பதவிக்காலம். அத்தகு இன்னல் மிகு இடர்ப்படு காலத்திலும்*

மாணவர்களின் கல்விக்கோ அல்லது அவர்களின் கற்றற் புறச்செயற்பாடுகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி அவர்களை ஊக்கப்படுத்தி அனைத்து நிகழ்ச்சிகளிலும் தவறாது பங்கெடுக்க வைத்த பெருமை அம்மையாரையே சாரும்.

2004 டிசம்பரில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாடசாலையின் முகப்புக் கட்டடங்கள் சுற்றுமதில் முற்றாக சேதமடைந்தன. அவரின் இடைவிடா முயற்சியின் பயனாய் இன்று சுற்றுமதிலும் வாயில் முகப்பும் கம்பீரமாய் நிமிர்ந்து பாடசாலையின் பெயர் கூறுகின்றது. இது மட்டுமல்லாது அலுவலகக் கட்டடம், நூல்நிலையம், தகவல் தொழில்நுட்ப நிலையம், பொது விஞ்ஞான ஆய்வு கூடம் உயர்தர விஞ்ஞான ஆய்வு கூடங்கள், கிறிஸ்தவ மாணவர்களுக்கான வழிபாட்டிடம், கேட்போர் கூடம், மாணவர் நலன்புரி நிலையக் கட்டடம் என நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு மற்றையோர் மலைக்கும் வண்ணம் பாடசாலையின் பௌதிக வளத்தினைப் பெருக்கித் தந்தவர். மேலும் அதிபராய் பதவியேற்று ஒருசில வருடங்களிலேயே பெற்றோர், ஆசிரியர், நலன்விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பாடசாலையின் மேற்குப்புறமாக 8 பரப்புக் காணியை கொள்வனவு செய்து முடித்தவர். இன்று இவ்வாதனத்திலேயே மொழியியல், தகவல் தொழில்நுட்ப நிலையம் அடங்கிய மகிந்தோதய ஆய்வுகூடம் அமைக்கப்பெற்றவருகின்றது. ஜேர்மனி பழைய மாணவரான செனட்டர் ஐங்கரன் அவர்களின் உதவி மூலம் மாணவர்கான Canteen அமைக்கப்படவுள்ளது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் பாடசாலைச்சூழல் இருந்த காலகட்டத்தில் வெளியார் வாகனங்கள் போக்குவரத்துக்காக பாடசாலை வளவினுள் அனுமதிக்கப்படுவதில்லை. அவ்வாறாயின் முற்கூட்டியே வாகனத்துக்கான அனுமதி பெறவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அத்தகு சந்தர்ப்பங்களில் பாடசாலை மாணவர்களின் சுகவீனம் வேறு ஏதேனும் அவசிய தேவை நிமித்தம் வெளியார் வாகனங்களை அவசர தேவைக்காக பாடசாலை வளவினுள் கொண்டுவருவதென்பது மிகவும் சிரமமான காரியமாகவே இருந்தது. காலத்தின் கட்டாயம் உணர்ந்து அவசர போக்குவரத்துக்கு ஒரு முச்சக்கரவண்டி அவசியம் என்பதை உணர்ந்து அதையும் தன் முயற்சியால் மாணவர் நலனுக்காகப் பெற்றுக்கொடுத்ததோடு மட்டுமல்லாது பாதுகாத்தும் கொடுத்த பெருந்தகை. வலய, மாவட்ட மட்டப் போட்டிகளுக்கு மாணவர்களுக்கான போக்குவரத்து பெரும் சிரமமாய் இருப்பதை அனுபவித்ததனால் விடாப்பிடியாய் நின்று சற்றேனும் பின்வாங்காது ஒரு பேரூந்தை பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்குப் பெற்றுக் கொடுத்தமை அவரின் எண்ணிய எண்ணியாங்கெய்தும் திண்ணிய நெஞ்சுக்குச் சான்று பகரும்.

என்னதான் இடர்வரினும் பாடசாலையில் நடக்க வேண்டிய எந்த நிகழ்வுகளையும் முடிந்தளவு பிற்போடமல் அவ்வவ் வேளைகளில் வருடாவருடம் பரிசளிப்புவிழா, இல்லமெய்வல்லுனர் போட்டி, உயர்தரமாணவர் ஒன்றுகூடல், வாணிவிழா, ஒளிவிழா என அனைத்தையும் மாணவர்களின் ஊக்கத்திற்காகவும் மகிழ்வுக்காகவும் அவர்களின் பல்வேறு திறமைகளையும் வெளிக்கொண்டுவரும் முகமாக நடாத்தி வருபவர். அதிலும் குறிப்பாக பரிசளிப்புவிழா, உயர்தரமாணவர் ஒன்றுகூடல் வைபவங்களுக்கு பாடசாலையின் பழைய மாணவிகளையே பிரதம விருந்தினராக அழைத்து அவர்களை கௌரவப்படுத்துவதும் அவர்களைத் தற்கால மாணவ சமுதாயத்துக்கு அறிமுகம் செய்து வைப்பதும் மிகவும் குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கொப்ப இவருக்கெல்லாம் வேலைக்கு எட்டு மணித்தியாலங்கள் கிடையாது. எல்லா நேரமும் இவருக்கு வேலை நேரம் தான். மிகவும் குறிப்பிடப்பட வேண்டிய கோடிட்டுக் காட்ட வேண்டிய முக்கிய விடயம் இவரை அணுகுதல் யார்க்கும் எளிதாம். மாணவர்களோ, பெற்றோரோ, ஆசிரியரோ பாடசாலை நேரமாயினும் சரி விடுமுறை நாளாயினும் சரி அவரைத் தொலைபேசியிலும் தொடர்புகொள்ளலாம் நேரில் சென்றும் உரிய அலுவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். வீட்டிலும் கூட அவரைச் சந்தித்து மாணவர்கள் தம் தேவையை நிறைவேற்றும் வசதியைப் பெற்றிருந்தனர். இது எத்தனை அதிபர்களிடம் சாத்தியமாகும்?

கலைகள் பல கனிந்து சொரியும் எம் கலாசாலையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையிலே குடும்பப் பின்னணியுடன் அறிந்து வைத்திருப்பது வியப்புக்குரிய ஒன்றுதான். அத்தனை பிள்ளைகளையும் அவர் தன் குடும்பமாக நேசித்ததால் தான் இது சாத்தியமானது.

இவரது காலத்திலேயே மாணவர்களுக்கான மேலதிக விளையாட்டுக்களான மட்டைப்பந்து, கபடி, கரப்பந்து, பூப்பந்து என்பன அறிமுகப்படுத்தப்பட்டதோடு மட்டுமல்லாது தொடர்ந்தும் அவ்விளையாட்டுக்களில் மாணவர்கள் பங்கெடுப்பதற்கு ஊக்கமளித்து வெற்றிபெறச்செய்து தேசிய மட்டப்போட்டிகளில் மாணவர்கள் பங்கெடுக்க உற்சாகமளித்தவர். வடமராட்சிப் பாடசாலைகளில் முதன் முதலில் பாடசாலை நிறத்திலே மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சீருடை அணிவித்து மகிழ்ந்து மாற்றத்தை ஏற்படுத்தியவர். இவரின் காலத்திலேயே முதலிலே மாணவர்களுக்கான புலமைப்பரிசில் நிதியம் எமது அபிமான உறுப்பினர் திருமதி இந்திராணி பாஸ்கரன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் பல்வேறு நம்பிக்கை நிதியங்கள் பாடசாலைக்கென வந்து குவிந்ததும் இவரது நிர்வாகத்திறமையால் தான்.

அதிபர் செல்வமலர் சுந்தரேசனுக்கு வாய்த்த வாழ்க்கைத்துணையான கலாநிதி வைரமுத்து சுந்தரேசன் அவர்களை (சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர்) இவ்விடத்தில் நினைந்து கொள்ளல் சாலப்பொருத்தம், அதிபர் தன் உழைப்பால் மட்டுமன்றி அவர் கணவரின் ஒத்துழைப்பாலுமே இன்று இவ்வளவு பெருமைக்கும் புகழுக்கும் உரியவரானார் என்பதை நாம் நினைவு கூறத்தான் வேண்டும். எம் அதிபருக்கு குழந்தையில்லை என்று யார் சொன்னார்? பாடசாலை தான் அவரின் பிள்ளை. அங்கு கற்கும் மாணவர்கள் எல்லோருமே அவரின் செல்வங்கள் தான். ஒரு தாய் தன் பிள்ளை வளர வளர அப்பிள்ளையின் தேவையறிந்து என்னென்னவெல்லாம் செய்வாளோ சேமிப்பாளோ அவ்வாறு தான் இந்தத் தாயும் தன் பாடசாலைக் குழந்தைக்குத் தேவையான எல்லா அணிகலன்களையும் தன் சொந்தப்பிள்ளைக்கு சேகரிப்பது போல் வெட்க துக்கம் பாராது பலரிடமும் உதவி பெற்று இன்று தன் குழந்தையை ஒரு யவ்வன நங்கையாக மற்றோர் கண் கவரும் வண்ணம் கண் ஊறு படும் வண்ணம் வளர்த்தெடுக்கிறார். இவ்வதிபரின் தன்னலம் கருதாப்பணியில் நம் பாடசாலை சீரிளமைத்திறனுடனும் புதுமைப் பொலிவுடனும் பூத்துக் குலுங்குகின்றது.

செல்வமலர் சுந்தரேசன் அவர்கள் நலமே நீள் ஆயுளுடனும் நிறை செல்வத்துடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

*****



# பழைய மாணவியாய் பார் போற்றும் அதிபராய் எம்மை வழிநடத்தியவருக்கான ஒரு வரலாற்றின் நினைவழியாப் பக்கங்கள்

**திருமதி. லீலா. கணேசலிங்கம்**
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்),
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

**தொ**ன்மைச் சிறப்புக் கொண்ட வடமராட்சிக் கல்விப் பாரம்பரியத்தின், பெண் கல்விப் பாரம்பரியத்தின் குறிகாட்டிகளில் ஒன்றாய் விளங்குகின்ற பல புகழ் பூத்த அதிபர்களின் அர்ப்பணிப்பு மிகு சேவையாலும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிகு பணிகளாலும் மாணவர்களது சாதனைகளாலும் பெருமை பெற்று விளங்கும் மெதடிஸ்த பெண்கள் பாடசாலையினுடைய நவீன கால அதிபராய் நீண்டகாலம் பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பணியாற்றி இன்று தனது மணிவிழா வயதுதனில் ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களது பணிநயப்பு மலரிலே பழைய மாணவர் சங்க தாய்ச்சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் சில வரிகள் அதிபரைப்பற்றி வரைகின்றேன்.

திருமதி செ.சுந்தரேசன் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை எமது மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையிலேயே கற்ற பெருமைக்குரியவர். பின்னர் க.பொ.த உயர்தர விஞ்ஞானப்பிரிவு வரை இக்கல்லூரியிலே கற்று, கல்வி மீது கொண்ட தீராத பற்றினாலும் விடாமுயற்சியினாலும் வெளிவாரியாக கலைப்பிரிவிலே பயின்று கலைப்பட்டதாரியாய் பின்னர் ஆசிரியராய் பின்னர் அதிபர் 1991ல் இருந்து தரம் II பரீட்சையிலே சித்தியடைந்து பின் 1996இல் இருந்து அதிபர் தரம் I ஆகி 1997ம் ஆண்டு முதல் இன்று வரை மிக நீண்டகாலமாக தான் கற்ற மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையிலேயே அதிபராய், ஒரு தாயாக நின்று வழி நடத்திய பெருமைக்குரியவர்.

படிக்கின்ற காலத்திலேயே சாரணர் குழுவில் பங்கெடுத்ததுடன், கல்வியிலும், இணைப்பாடவிதான, விளையாட்டுத்துறைச் செயற்பாடுகளிலும் இவர் காட்டிய ஈடுபாடே இவரது பிற்கால முகாமைத்துவ, தலைமைத்துவ ஆளுமை விருத்திக்கான அடித்தளமாய் அமைந்தது. இவரது பதவிக் காலத்தின் பெரும் பகுதி எமது பாடசாலையை பொறுத்தவரை, போர் காலமாகும். அத்துடன் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் எமது பாடசாலை இயங்கிய காலகட்டமும் ஆகும். இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தில் கூட தனது தலைமைத்துவ ஆளுமைத்துணிவாலும் பன்மொழிப்புலமையாலும் தனது சாதனைப் பயணத்திலிருந்து துளியும் வழுவாது வழிநடத்திய பெருமையும் இவரையே சாரும்.

இவர் கல்வி, நிர்வாக, முகாமைத்துவ ரீதியாக இக்கால கட்டத்தினுள் வடமராட்சியின் ஆற்றல் மிக்கதொரு நிர்வாகத்திறன் மிக்க பெண் தலைமைத்துவமாக தன்னை வளர்த்துக்கொள்ளவும் தவறவில்லை. இவ்வகையிலே இலங்கையிலே இரண்டு தமிழ் அதிபர்களுக்கு வழங்கப்பட்ட முகாமைத்துவப் பயிற்சிக்கு இவரும் ஒருவராக தெரிவுசெய்யப்பட்டு இந்தியாவில் 2001ல் சென்று கல்வி முகாமைத்துவ பயிற்சியைப் பெற்று வந்த சிறப்பும் இவரையே சாரும். இதேபோல சேவைமூப்பு அடிப்படையிலான கல்வி அதிபர் நிர்வாக சேவையினுள்ளும் உள்வாங்கப்பட்டமையும் சிறப்பாகும்

இவரது காலத்தினுள் எமது பாடசாலை கண்ட வளர்ச்சிகளும், புதுமைகளும், சாதனைகளும் பற்பல பழைய மாணவர் சங்கங்களினதும் பெற்றோர், ஆசிரியர்சங்கம் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் போன்றவற்றின் நல்லாதரவுடனும், ஒத்துழைப்புடனும் இவர்களது உதவிகளை பெற்றும் இவற்றுக்கு அப்பால் கல்வித்திணைக்கள மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் மற்றும் அரசியல் தலைவர்களின் பங்களிப்பினாலும் பாடசாலையின் பௌதீக வளத்தை மிகக்குறுகிய காலத்தில் ஒரு நவீன பாடசாலைக்குரிய கட்டமைப்பாக மாற்றிய பெருமையும் இவரையே சார்ந்ததாகும். அத்துடன் க.பொ.த சாதாரண தர, மற்றும் உயர்தரத்தில் யாழ் மாவட்டத்தில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்று வடமராட்சி மண்ணுக்கு பெருமை சேர்ந்ததும் இவர் செய்த அளப்பரிய சேவைக்குச் சான்றாகும்.

அத்துடன் வலைப்பந்து, எல்லே, சதுரங்கம், பூப்பந்து, கரப்பந்து, மேசைப்பந்து, கபடி போன்ற விளையாட்டுக்களில் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பங்குபற்றி சாதனை நிலைநாட்டப்பட்டதும், உதாரணமாக கடந்த ஆண்டு நடைபெற்ற தேசியமட்ட கபடிப்போட்டியில் எம் பாடசாலை அணியும் பங்குபற்றி தேசியமட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்றதை இங்கு நோக்குதற்குரியதாகும். மற்றும் தமிழ்தின, ஆங்கிலதின மற்றும் ஏனைய ஆக்கத்திறன் போட்டிகளிலும் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டதும் இவருடைய காலத்திலே என்பது பெருமைக்குரியதாகும். அத்துடன் பாடசாலை மட்ட விளையாட்டு போட்டிகள், ஆசிரியர்தின விழாக்கள் நவராத்திரி விழாக்கள், உயர்தர மாணவ ஒன்றுகூடல் "ஒளியைநோக்கி" சஞ்சிகை வெளியீடு போன்ற செயற்பாடுகளும் சிறப்பாக இடம்பெற்றன. இத்தகைய சிறப்புக்காகவே இவர் லண்டன் மற்றும் கனடா பழைய மாணவர் சங்கங்களினால் அங்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பிறருக்கு மதிப்பளித்தும் கொழும்பு, கனடா, லண்டன் மற்றும் தாய்ச்சங்கத்துடனும் ஏனைய பழைய மாணவர் சங்கங்களோடும் மற்றும் தனிப்பட்ட பழைய மாணவர்களோடும் நல்லுறவை பேணியும் பழைய மாணவர் சங்கங்களின் ஆலோசனைகளை பாடசாலை வளர்ச்சிக்காக பெற்றுக்கொடுப்பதில் முன்னின்று உழைத்தவர். இவரால் பாடசாலையில் பல புதுமைகள் கொண்டு வரப்பட்டு ஆரம்பத்தில் சிலர் அதனை விமர்சித்தாலும் இன்று அவர்களே எண்ணிப் பெருமைப்படும் வகையில் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை, ஆசிரியர்களுக்கான சீருடை போன்றன. பின்னர் இப் பிரதேச பாடசாலைகளும் அதனை பின்பற்றி நடப்பதற்கு வழிகாட்டியாக விளங்கியவரும் இவரே.

அத்துடன் ஆங்கில மொழி மூலக்கற்கைக் ஆங்கில மொழி மூல கணித, விஞ்ஞான உயர்தர பிரிவுகளை உருவாக்கி பிறவளவாளர்களையும் மாணவர்களின் கல்விக்காக பெற்றுக்கொடுத்து பெறுபேறுகளிலும் சிறந்த பெறுபேறுகளை ஏற்படுத்தியும் வெற்றி கண்டவர். இவ்வாறு கல்வி, பௌதீகம் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் எம் பாடசாலையின் நற்தாயாக வழிநடத்திய இவரின் சேவையை என்றும் மறவோம்.

# கட்டுரையியல்





# நிர்வாகிகளுக்கு தலைமைத்துவ திறன்களை விருத்தி செய்தல்
# (Developing Leadership Skills for Administrators)

**Prof.M.Nadarajasundaram**
*Former Dean Faculty of Management Studies & Commerce*
*University of Jaffna*

எவரும் ஒரு தலைவராக பிறப்பதில்லை - ஒவ்வொருவரும் தலைமைத்துவ திறன்களை விருத்தி செய்யலாம். அத்துடன் அதனை பயன்படுத்துவதன் மூலம் நன்மையடையலாம்.

முதலாவதாக, நேரத்தை செலவு செய்து நேர்மையாக உம்மை வெவ்வேறு பகுதிகளாக பிரித்து ஆய்வு செய்யவும். (First, take time to honestly analyze yourself) உம்மைப் பற்றி முதலில் அறிந்து கொள்ள தெரிந்து கொள்ளுங்கள். இதுவே நீர் ஏனையோரைப் பற்றி அறிந்து கொள்வதற்கு முதல்படியாக அமையும்.

**பின்வரும் முக்கிய வினாக்களை கவனத்திலெடுக்கவும்.**

1. நான் எந்தவகையான தலைமைத்துவத்தை கொண்டிருக்கின்றேன்? பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உதவி செய்பவனா? எல்லோருடனும் இணைந்து செல்வதற்கான தலைமைத்துவம் உண்டா? ஏனையோர் என்னை எப்படி ஒரு தலைவராக பார்க்கின்றார்கள்?
2. நான் குறிப்பிட்ட குழுவுடன் வேலை செய்யும் பொழுது எனது நோக்கங்கள், எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள் யாவை?

**செம்மையாக்க வேண்டிய பகுதிகளை இனம் காணவும்**
**(Identify areas for Improvement)**
**பின்வரும் வினாக்களை நீங்களே கேட்கவும்.**

1. ஏனையோர் என்னைப் பற்றி என்ன உணர்வைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை நான் தெரிந்து அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்?
2. ஏனையோர் தம்முடைய ஆற்றலை திறமையாக நிறைவேற்றுவதற்கு நான் எந்தளவுக்கு செயல்படுகின்றேன்?

3. நான் பொறுப்பினை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கின்றேனோ?
4. நான் தொழில்படும் பொழுது புதிய எண்ணங்களையும், புதிய மார்க்கங்களையும் பயன்படுத்துவதற்கு விருப்பம் கொண்டுள்ளேனா?
5. ஏனையோருடன் விளைதிறன்மிக்க நிலையில் தொடர்பாடல் செய்யமுடியுமா?
6. ஏற்படும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நான் திறமையுள்ளவனா?
7. ஏனையோருடைய நிலைப்பாடுகளையும் கருத்துக்களையும் நியாயமாக மதிப்பிட்டு அதனை ஏற்றுக்கொள்ளும் தன்மை என்னிடமுண்டா?
8. எமது சமுதாயத்தில் காணப்படுகின்ற நடைமுறை பிரச்சனைகளையும் கவனத்திலெடுக்கப்பட வேண்டியமை பற்றியும் தெரிந்து அறிந்துள்ளீரா?

**பின்பு உம்முடைய பலம், பலவீனங்களை நன்கு ஆராய்ந்த பின்னர் நடவடிக்கையில் இறங்கவும். (Then ..... after analyzing your strengths and weakness...... tkae action.)**

உம்முடைய திறன்களை உயர்த்துவதற்கு தந்திரோபாய திட்டத்தை வடிவமைக்கவும். பின்வரும் ஒரு சில தந்திரோபாய திட்டங்களைக் கவனத்தில் கொள்ளவும்.

1. **வினைதிறண்மிக்க தொடர்பாடல் (communicatie effectively)**
   வினைதிறன்மிக்க தொடர்பாடல் என்பது ஒருவகை கலந்துரையாடலாகும். பெரும்பாலும் கீழ்மட்டத்தில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு தாமாகவே வரையறைகள் (barriers) விதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களிடம் ஏற்படும் தொடர்பாடல் வாய்வழியாக வாங்குவதாக (elicit) ஆம் அல்லது இல்லை என்ற விடைகளே கிடைக்கப்பெறும். மேலதிகமான அதிகாரத்தைப் (excessive authority) பயன்படுத்தி அதனூடாக செயற்கை முறையில் அவர்களுடன் தொடர்பு கொள்ளுதல் தரமான ஒரு தொடர்பாடல் முறையைக் கொண்டிருக்கவில்லை. நீர் உம்முடைய நியாயவாதம் (argument) வெல்ல வேண்டும் என்ற அடிப்படையில் நோக்கும் பொழுதும் அல்லது ஒருவர் முரண்பட்ட கருத்துக்களைக் (criticism) கூறும்பொழுது அதற்கு எதிர் இடையாகச் செயற்பட்டால், (react defensively) நீர் திறந்த மனதுடன் வெளிப்படையாகச் செயற்படாத் தன்மையினை (create fear of openness) உருவாக்குவதால் நிறுவனத்தின் வளர்ச்சியில் தடங்கலை (hinder) உருவாக்குவீர்.

**பயனுறுதியுடைய தொடர்பாடலுக்கு பின்வரும் படிமுறைகளை பயன்படுத்தவும். (Try these steps to effective communication)**

❖ ஆவர்வத்துடன் உற்றுக்கேட்கவும் - (listen actively) வெளிப்படையாகக் கேள்விகள் கேட்கவும் ஏனையோர் கூறுவதனை போலியில்லாது விருப்பத்துடன் செவிசாய்க்கவும்.

❖ வெளிப்படையாக அவர்கள் கருத்துக்கு நன்றி கூறவும் - (thank people for their openness) எந்தளவுக்கு அதனைக் கருத்திற் கொள்கின்றேன் என்பதனை உணர்த்தவும், உமக்கு குறிப்பாக கூறப்பட்ட சில விடயங்களில் விருப்பமின்மை காணப்பட்டாலும்.

❖ இசைவு ஏற்படாத அம்சங்களில் உடனடியாக கவனம் செலுத்தாமல் , (point to areas of agreement) இசைவு ஏற்பட்ட அம்சங்களில் கவனம் செலுத்தவும் - இதன் மூலம் தற்பாதுகாப்பு நிலையைக் குறைத்துக் கொள்ளலாம். அங்கத்தவர்கள் தாம் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சத்திலிருந்து விடுபடுவர்.

❖ உம்முடைய அதிகாரத்தை (set aside your authority) ஒரு புறம் தள்ளிவைத்துவிட்டு குழு அங்கத்தவர்களின் பயத்தினை குறைவடையச் செய்து எல்லோரும் பங்குபற்றுமளவுக்கு ஒரு நல்ல சூழலை உருவாக்க வேண்டும்.

❖ உருப்படியான மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான ஒரு நற்பண்புகளை மேம்படுத்த வேண்டும் - (Promote to culture of constructive dissent) எதுவும் ஸ்தம்பிக்காத நிலையில் அமைய வேண்டும்.

❖ இசைவு ஏற்படாத இடத்து அவற்றை விபரித்து தெளிவான அபிப்பிராய வேறுபாடு எனக் கொள்ளவும். நான் கூறுவது சரி, நீர் செய்வது பிழை என்ற மனோபாவத்திலிருந்து விலகிக் கொள்ளவும். (portray disagreement as simply a difference of opinion)

**2. ஊக்கத்தோடு கூடிய ஆர்வத்தினை உற்சாகப்படுத்தி மற்றும் அவர்களுடன் இணைந்திருத்தல் (Encourage enthusiasm and a sense of belonging Show)**

❖ சினேகபூர்வமாக இருத்தல் : ( Friendliness) நீங்கள் எல்லோருடனும் விருப்பம் வைத்திருந்தால் தங்களுடைய எண்ணங்களை சிந்தனைகளை பகிர்ந்து கொள்ள விரும்புவர்.

❖ புரிந்து கொள்ளல் : (Understanding) ஒவ்வொருவரும் தவறு செய்வார்கள் உம்மால் விமர்சனம் செய்யும்போது உருப்படியான, சகிப்புத்தன்மையுள்ள, மற்றும் சாமர்த்தியமான முறையில் அமைய வேண்டும்.

❖ பாரபட்சமின்மை : ( Fairness) எல்லா குழு அங்கத்தவர்களுக்கு சமசந்தர்ப்பம் வழங்கி, சமமாக நடத்த முயலும் பொழுது, அங்கத்தவர்களின் முழுமையான முயற்சியினை நீர் பெற்றுக் கொள்ளலாம்.

❖ நேர்மைத்தன்மை : (Integrity) உமது சொந்த முன்னேற்றத்துக்கு அல்லாது குழுக்களினது இலட்சியங்களுக்கு அதிகளவு விருப்பம் கொண்டிருந்தால் அங்கத்தவர்கள் தமக்கு கொடுக்கப்பட்ட வேலைகளை மிக அவதானமாக செய்வர்.

**3. ஏற்றுக் கொள்ளப்பட்ட நோக்கங்களை நோக்கி ஒவ்வொருவரும் தொழில்படுவதனை நிறைவேற்றவும் (Keep every one working toward agreed upon goals)**

❖ காலத்துக்குக் காலம் குழுவின் உத்தேதச எண்ணங்கள்/நோக்கங்களை ஒவ்வொருவருக்கும் ஞாபகப்படுத்த வேண்டும் (remind everyone). மிகவும் குறுகிய நிலையில் தொழிற்படுவது இலகுவாக இருக்கும் பொழுது முக்கியமான பெரியளவான நோக்கங்களில் கவனத்தை இழந்து விடுவர்.

❖ சிறந்த கருத்துக்களுக்கும் மேலதிக முயற்சிகளுக்கும் உம்மால் நன்கு மதிப்பு கொடுப்பதன் மூலம் எல்லோருக்கும் தூண்டல் சக்தியையும் (provide encouragement and motivation) தைரியத்தையும் வழங்க முடியும்.

❖ குழு அங்கத்தவர்களிடம் வேறுபாடும் இசைவின்மையும் தோன்றும் பொழுது அவற்றை பொருந்தும்படி இணைத்து ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து ஒத்துழைப்பை (harmonize differences) மேம்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும்.

❖ ஒவ்வொருவருடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் நீண்டநேர விவாதத்துக்கு எடுத்துக் கொண்டாலும், ஒவ்வொருவரையும் தீர்மானம் எடுப்பதிலும் விவாதம் செய்வதிலும் சம்பந்தப்படுத்தவும் (involve everyone)

4. **உம்மைச் சூழ்ந்து இருப்பவர்களை முழுமையாக அறிந்து கொள்ளுங்கள்.**
**(Get to know the people around you)**

ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு வகையான ஆற்றல்கள், தேவைகள், விருப்பங்கள், வாழ்க்கையின் நோக்கங்கள் காணப்படலாம். ஏனையோருடன் இணைந்து செல்வதற்கும், அவர்களிடம் சிறந்த பலன்களை பெறுவதற்கும் நீர் அவர்களை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

- குழு அங்கத்தவர்களுடன் ஏலுமான அளவுக்கு (interact with group members) தொடர்ச்சியாக கருத்து பரிமாற்றம் செய்தல் வேண்டும். ஒருவரை நன்கு அறிய வேண்டுமாயின் நேரடியான தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.
- குழுவில் உள்ள ஒவ்வொருவருடனும் நெருக்கமான உறவைப் பேண வேண்டும். ஒவ்வொருவருடைய பிரத்தியேக பண்புகளையும், தரத்தையும் கவனத்தில்க் கொள்ள வேண்டும். (become familiar with every member)

5. **ஏனையோர் எல்லோரையும் தனிப்பட்டவர்களாகக் கொள்ளவும்.**
**(Treat others as individuals)**

உம்முடைய அறிவையும், விளக்கும் தன்மையையும் ஒவ்வொரு குழு அங்கத்தவருக்கும் வழங்கி செயல்ப்பட வைக்கவும். (put your knowledge and understanding of each group member to work)

- எதிர்பார்க்கையில் அவதானமாக இருக்கவும் :- (be aware of expectations) ஒவ்வொருவரும் வித்தியாசமான எதிர்பார்ப்புக்களை கொண்டிருப்பர் - அடையாளம் காணல், கற்றுக்கொள்ள விரும்புவர், ஏனையோருடன் இணைந்து செயல்ப்பட விரும்புவர் போன்றன.
- திறமையுள்ளவராக இருத்தல் :- (be creative) மீண்டும் மீண்டும் ஒரே வகையாகத் தொழில்படும் பொழுது வேலையில் ஆர்வத்தைக் குறைக்கும். பழைய முறைகளுக்கு பதிலாக புதிய புதிய அணுகுமுறைகள் ஒரு சிறந்த தலைமைத்துவத்திற்கு ஏற்றதாக அமையும்.
- வெகுமதிகளை வழங்கவும் :- (provide rewards) ஒரு தொழிலை நன்றாகச் செய்து அதிக பலத்தை பெறும்பொழுது, சுயமான திருப்தியை அடைவதுடன் குழுவின் அங்கீகாரமும் கிடைக்கும்.
- பொறுப்புக்களை கையளிக்கவும் :- (delegate responsibilities) ஒவ்வொருவரும் ஒரு தொழிலில் சிறு பங்கினை வகிக்கும் பொழுது குழுவின் தொழில்சார் சாதனையில் ஒவ்வொருவரும் பெருமை அளிக்கும் மனிதர்களாக இருப்பார். ஒவ்வொருவருக்கும் எதனை எதிர்பார்க்கின்றார்கள், கிடைக்கப்பெறும் மூலவளங்கள் காலவரை என்பனவற்றை அறிந்து கொள்ளலாம்.

6. **செய்யும் தொழில் முழுவதற்கும் பொறுப்பை ஏற்க வேண்டும்.**
**(Accept responsibility for getting things done)**

- தைரியமாக ஆரம்பிக்கவும் :- (take the initiative) இன்னொருவர் வேலையை ஆரம்பிப்பதற்கு பார்த்துக் கொண்டிராது நீரே உதாரண புருசராக அமைந்து வேலையை ஆரம்பிக்க வேண்டும்.

- ❖ உதவியுடன் தகவல்களையும் வழங்கவும் :- (offrer help and information) உம்முடைய சிறப்பான அறிவும் திறமையும் அவர்களுக்குத் தேவைப்படும்.
- ❖ உதவியுடன் தகவல்களையும் கேட்கவும் :- (seek help and information) தேவை ஏற்படின் குழுவிடம் ஆலோசனைகளைக் கேட்கவும் இது பெறும் அளவுக்கு குழுவின் ஈடுபாட்டையும், குழுவின் நோக்கங்களை அடையவும் உதவும்.
- ❖ செயல்பாடுகள் நடைபெறுவதை உறுதிப்படுத்தவும் : (make thing happen) எல்லா செயல்பாடுகளையும் சரிவர செய்வதற்கு முடிவானதாயும் சக்தியுடையவராயும், உற்சாகமுடையவராயும் இருத்தல் வேண்டும்.
- ❖ எங்கு எப்பொழுது இல்லை என்று சொல்வதற்கு தெரிய வேண்டும். (know when and how to say "No") உம்முடைய நேரமும் மூலவளங்கள் ஏற்கனவே ஈடுபடுத்தப்பட்டிருந்தால், மேலதிக வேலைகளை ஏற்க வேண்டாம். உள்ளதை வடிவாக செய்யவும்.

7. **பிரச்சனைகளை ஒவ்வொரு படியாக ஆராய்ந்து செய்யவும் (Problem solve in a step-by-step-way)**

நீர் ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு வேண்டிய நிலை உருவானால் அல்லது ஒரு முரண்பாட்டில் இணக்கம் காணவேண்டிவரின் ஒரு வகையான தர்க்கரீதியான அணுகுமுறை உதவியாக அமையும்.

- ❖ பிரச்சினையை (problem) விளக்கவும் தெளிவானதாகவும் இலகுத் தன்மை கொண்டதாகவும் அமைதல் வேண்டும்.
- ❖ எல்லா வகையான சிந்தனைகளையும் முடிவுகளையும் (choose the best one) இயலுமான அளவுக்கு புத்தி நுட்பம் உள்ள முறையில் தீர்வுகாணல்.
- ❖ இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு திட்டத்தை உருவாக்கவும் (plan) இதில் ஒவ்வொருவருடைய பங்கும் கிடைக்கும் மூலவளங்களும் (resources) காலநேர அட்டவணையும் (time frame) இருக்க வேண்டும்.

**உசாத்துணை நூல்கள் (references) :-**


1. Ralph M.Stoghill :- Personal factors associated with leadership : Asurvey of the literature, journal of psycolgy, January 1988p. 45-71.
2. Joe Keely, organizational behavior, home wood, 111 Richard D.Irwin 1974p.363.
3. J.M.Kouzes and B.Z.ponser - Credibility, how leaders gain owd loose it, why people demand it. (San Francisco Jossey - bass 1993)
4. D.Goleman, 'what makes a leader?" Harward Business review 76 November December 1998 pp 92-102.



# பெண்களும் சட்டமும்

"தேசமானிய" சபா ரவீந்திரன் ஜே.பி.யு.எம்
*"Deshamanya 'Saba Raveeindiran J.P.U.M*
*Attorney-At-Law, Notary Public*
*Chairman, Urban Council. Point Pedro.*

சட்டங்கள் உருவாக்கப்படுவது சமுதாயத்தை நல்வழியில் ஒழுங்கமைப்பதற்கேயாகும். ஒழுக்கம் மிக்க சமுதாயம் சட்டத்தின் சிறப்பான செயற்பாட்டிலேயே பெரிதும் தங்கியுள்ளது. வெளிப்பபடை சமுதாயத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் உரிய சட்ட விதிகள் வழிகாட்டிகளாக விளங்குகின்றது. சட்ட மீறல்கள், சமுதாய ஒழுக்கப் பிறழ்வாகக் கணிப்பிடப்படுகின்றது.

இதேவேளை பலவீனமானவர்களைப் பாதுகாப்பதும் சட்டமேயாகும். இங்கே பலவீனமென்பது, பலாத்காரத்துக்கு அல்லது பயமுறுத்தல்களுக்கு ஆளாகுவதையே குறிக்கின்றது. பெண்கள் தொடர்பிலே எமது நாட்டிலே பல சட்ட ஏற்பாடுகள் காணப்படுகின்றன. "பராமரிப்புச்சட்டம்", "விவாகரத்துச்சட்டம்" , "குடும்ப வன்முறைத் தடுப்புச்சட்டம்" போன்றவை பெண்கள் விடயத்திலே அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

தேசவழமைச் சட்டத்திலே, பெண்களின் அசையாச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கென்றே விரிவானதும் சிறப்பானதுமான பல சட்ட ஏற்பாடுகள் உள்ளன. இதிலே திருமணத்தின் போது பெண்களால் கொண்டுவரப்படும் சீதன ஆதனம், அப்பெண்ணுக்கு மட்டுமே உரிய தனிச் சொத்தாகும். கணவனுக்கு அதில் ஒரு குளி நிலம் கூடச் சொந்தமாகாது.

தேசவழமைச்சட்டத்தின்படி மனைவி தனது ஆதனத்தைக் கைமாற்றஞ் செய்வதற்காக எழுதும் எந்த உறுதியிலும் கணவனும் கையொப்பமிடல் வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக கையொப்பம் இடப்படுகிறதே தவிரக் கணவனுக்கு சீதன ஆதனத்தில் எதுவித ஆதனம் கணவனுக்கோ, கணவனைச் சார்ந்தவர்களுக்கோ (கணவன் வழி உறவினர்களுக்கோ) சேரமாட்டாது.

1911ம் ஆண்டின் 1ஆம் இலக்க யாழ்ப்பாணத் திருமண உரிமைகளும் வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தின்படி, கணவனின் கடன்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக மனைவியின் சீதன ஆதனத்தைக் கைப்பற்ற முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமணத்தின் பின்னர், திருமணம் நிலைத்திருக்கும் காலத்தில் கணவனோ அல்லது மனைவியோ ஒரு அசையா ஆதனத்தை விலை கொடுத்துக் கொள்வனவு செய்தால் அது இருவரில் ஒருவர் பெயரில் வாங்கியிருந்தாலும் கூட வாங்கிய அன்றே அது "தேடிய தேட்டமாக" "கணவனுக்கும் மனைவிக்கும்" சமபங்காக அதாவது தலா அரைவாசி சொந்தமாகிவிடும்.

பெண்கள் இலகுவில் ஏமாற்றப்பட்டு விடுவார்கள், தங்கள் பெறுமதியான சொத்துக்களை ஏமாறி யாருக்கும் கைமாற்றிவிடுவார்கள் என்ற நிலை காணப்பட்டமையாலேயே, பெண் ஒருத்தி எழுதுகின்ற உறுதிகள்யாவிலும், அவளது கணவனும் சேர்ந்து ஒப்பமிடல் வேண்டும் என்ற ஏற்பாடும், சிவில் வழக்கொன்றில் கணவனையும் ஒரு கட்சிக்காரனாகச் சேர்க்காமல் பெண் ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்ற ஏற்பாடும் யாழ்ப்பாண பெண்களின் பாதுகாப்புக் கருதியே "தேசவழமைச் சட்டத்தில்" உள்ளடக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஏற்பாடுகள் எதுவும் வேறு எந்தச் சட்டங்களிலும் காணப்படவில்லை.

பராமரிப்புச் சட்டத்தைப் பொறுத்தவரை - அது இன்று பல விடயங்களுக்கு விஸ்தரிக்கப்பட்ட போதும் கணவரிடமிருந்து - மனைவி பராமரிப்புக்கோருவதே முக்கியமாக உள்ளது. போதிய வருமானமுடைய கணவன், நியாயமான காரணமின்றி தனது மனைவியைப் பராமரிக்கத் தவறினால் அவள் நீதிமன்றம் சென்று, தனது கணவனிடமிருந்து தனக்கும், தனது பிள்ளைக்கும் மாதாந்த பராமரிப்புப் பணம் பெற்றுக்கொள்ள முடியும். நடைமுறையில் இது பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதமான சட்ட ஏற்பாடாகவே அமைந்துள்ளது.

ஒரு ஆண், தனது மனைவியைக் கைவிட்டுவிட்டு, வேறொரு பெண்ணுடன் வாழும்போது, சட்டப்படியான மனைவி - தனது கணவரிடமிருந்து விவாகரத்தும், பிரிமனைப்பணமும், இழப்பீடும் பெற விவாகரத்துச் சட்டம் ஏற்பாடு செய்கின்றது. விவாகரத்து மூலம் பெண், தனது சுய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடிகின்றது.

"குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம்" மிக அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது 2005ம் ஆண்டின் 34ம் இலக்க "குடும்ப வன்முறைச்செயல் தடுப்புச் சட்டம்" குடும்ப உறுப்பினர்களுக்கிடையேயான பிணக்குகளைத் தீர்ப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கும், பாதிப்பிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்குமாக கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆனால் குடும்ப வன்முறை தொடர்பான வழக்குகள், முற்றிலும் மாறுபட்டதாக, வேறுபட்ட நோக்கங்களுக்காக ஏற்பட்டுள்ளன. 2005ம் ஆண்டின் 34ம் இலக்க, குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச்சட்டம் என்ற சட்டத்திற்கமைய இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. எவையேனும் குடும்ப வன்முறைச்செயல்களை தடுப்பதற்கும், அவற்றோடு தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர் விளைவான விடயங்களுக்கு

ஏற்பாடு செய்வதற்காகவே இச்சட்டம் இலங்கை பாராளுமன்றத்தினால் உருவாக்கப்பட்டது.

ஒருவர் தொடர்பில் குடும்ப வன்முறைச் செயல் ஒன்று புரியப்பட்டிருப்பின் அல்லது புரியப்படின் அல்லது புரியப்படும் எதிர்பார்ப்பு காணப்படின் அவர் (பாதிக்கப்பட்டவர்) அத்தகைய குடும்ப வன்முறைச் செயலைத் தடுப்பதற்காகப் பாதுகாப்புக் கட்டளை ஒன்றுக்காக நீதவான் நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றைச் செய்து கொள்ள இச்சட்டம் ஏற்பாடு செய்கின்றது.

ஒரு குடும்பத்துக்குள் உள்ள உறுப்பினர்களிடையே ஒரே வீட்டில் இடம்பெறும் தொடர்ச்சியான துன்புறுத்தல்கள், தாக்குதல்கள், பயமுறுத்தல்கள், இம்சைகள் போன்றவற்றைத் தடுத்து நிறுத்திப் போதிய பாதுகாப்பு வழங்குவதே இச் சட்டத்தின் அடிப்படை நோக்காகும். குடும்ப உறுப்பினரல்லாத வெளியார் ஒருவர் மூலம் இத்தகைய செயல்கள் புரியப்படின் அது குற்றவியல் வழக்குகளாகவே கணிக்கப்படும்.

ஒருவருடைய நிம்மதியான, நித்திய குடும்ப வாழ்வுக்கு அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரால் (அதாவது அவர் மீது செல்வாக்குப் பிரயோகிக்கக் கூடிய உறவினரால்) அச்சுறுத்தல், ஆபத்து, நிம்மதிக்குறைவு, அவமதிப்பு ஏற்படும் போது குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டம் பயன்படுத்தப்படலாம். அயல் வீட்டவர் அடிபடுவது, வாய்த்தர்க்கம் புரிவது குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வராது.

அதில் கூட குறித்த செயல்கள் யாவும் கட்டாயமாக குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச்சட்டத்தின் கீழ் வரவேண்டுமென்ற கட்டாயம் எதுவும் இல்லை. அவை குற்றவியல் வழக்குகளாகவும் தாக்கல் செய்யப்படலாம் அல்லது இரு வழக்குகளையுமே தாக்கல் செய்ய முடியும். ஒரு வழக்கு இன்னொரு வழக்கைப் பாதிக்கமாட்டாது.

குற்றவியல் வழக்குகளிலே, வழக்கு எண்பிக்கப்பட்டால் எதிரி தண்டனைக்கு உள்ளாவார். குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்கில் பிரதிவாதி (எதிரி) குறித்த செயல்களைப் புரிய முடியாதவாறு தடுத்து நிறுத்திப் பாதிக்கப்பட்டவர் பாதுகாக்கப்படுவார். இதுவே இந்த இரு வழக்குகளுக்கும் இடையேயான முக்கிய வேறுபாடாகும்.

குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழான எவையேனும் நடவடிக்கைகள் ஒரு வாழ்க்கைத்துணை தனது வாழ்க்கைத்துணைக்கு எதிராக சாட்சியமளிக்க சட்டப்படி உரித்துடையவராவார். நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளைக்கு எதிராக அக்கட்டளையில் திருப்திப்படாத ஆளெவரும் மேல் நீதிமன்றதுக்கு மேல் முறையீடு செய்யலாம். அத்துடன் இச்சட்டத்தில் உள்ளது எதுவும் தனியான குடியியல் அல்லது குற்றவியல் வழக்கை தாக்கல் செய்வதற்கு எவரையும் தடை செய்யாது.



# பாடசாலைச் சுகாதாரம்

**டாக்டர் க.செந்தூரன்**
சுகாதார வைத்திய அதிகாரி,
பருத்தித்துறை.

**பா**டசாலை மாணவர்களுக்கு கல்வி எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு பாடசாலைகளினதும் அங்கு கல்வி கற்கும் மாணவர்களினதும் சுகாதாரமும் முக்கியமானதாகும். சுகாதாரமற்ற நிலமைகளில் மாணவர்களின் கல்வி நடவடிக்கையானது நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்படுகின்றது.

### சுற்றுச் சூழல்

ஒவ்வொரு பாடசாலைகளினதும் சுற்றுச் சூழலானது மிகவும் சுத்தமானதாகப் பேணப்பட வேண்டியது பாடசாலையில் உள்ள அனைவரினதும் கடமையாகும். சுற்றுச் சூழலில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களும் ஏது நிலைகளும் காணப்படின் அவை உடனடியாகவே அப்புறப்படுத்தப்பட வேண்டியது முக்கியமானதாகும். டெங்கு நோயினைப் பரப்பும் நுளம்புகள் பெரும்பாலும் பகல் வேளைகளிலேயே கடிப்பதால் பெருமளவிலான பாடசாலை மாணவர்கள் நோய்த்தாக்கத்திற்கு உள்ளாவதுடன் இலங்கையின் பல பகுதிகளிலும் பல இறப்புகளும் நடைபெற்றுள்ளன.

இது தவிர பாடசாலையின் சுற்றுப் புறமானது தினமும் சுத்தம் செய்யப்படுதல் அவசியமானதாகும். பாடசாலைக்கு அண்மையிலுள்ள பற்றைக் காணிகளும் புற்றரைகளும் கிரமமான முறையில் சிரமதான அடிப்படையில் சுத்தம் செய்யப்படுவது எம் அனைவரினதும் கடமையாகும்.

### தனிநபர் சுகாதாரம்

பாடசாலையில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களினதும் தனி நபர் சுகாதாரமானது உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். மாணவர்கள் தினமும் காலையில் பல் துலக்கி, குளித்து

சுத்தமான ஆடைகள் அணிந்து வருவதை ஒவ்வொரு வகுப்பாசிரியர்களும் அறிவுறுத்தி அவற்றை உறுதிப்படுத்துவதும் விரும்பத்தக்கது. மாணவர் ஒவ்வொருவரும் பாதணிகள் அணிவதுடன் பாதணிகளின்றி நடமாடுவதைத் தடுப்பதனால் நோய்த்தொற்றில் இருந்து பாதுகாக்க முடியும்.

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மலசல கூடங்கள் இருப்பது அவசியமானதாகும். மலசல கூடங்கள் அனைத்தும் தினமும் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். உணவு உண்ணும் முன்னரும் மலசல கூடத்தினைப் பாவித்த பின்னரும் சவர்க்காரம் போட்டு கைகளை முறையாகக் கழுவுதல் வேண்டும். இதற்காகச் சவர்க்காரங்கள் வழங்கப்படுவதுடன் முறையாகக் கைகழுவும் முறையானது காட்சிப்படுத்தப்பட்டிருப்பது விரும்பத்தக்கது.

**நீரும் உணவும்**

மாணவர்கள் அருந்தும் நீரானது கொதித்து ஆறிய வடிகட்டிய நீராயின் விரும்பத்தக்கது. பாடசாலைக் கிணறானது கிரமமான முறையில் சுத்தப்படுத்தப்பட்டு குளோரின் இடப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட கால இடைவெளியில் கிணற்று நீரானது நீர்ப்பரிசோதனைக்கு உட்படுத்தப்படுதல் விரும்பத்தக்கது.

பாடசாலை உணவு சமைக்கும் இடமானது முறையான வகையில் அமைக்கப்படுதல் வேண்டும். திறந்த இடத்தில் உணவுகளைச் சமைத்தலோ பறவைகள் விலங்குகள் அருகில் வருவதற்கு இடமளித்தலோ உணவில் நோய்த் தொற்றினை ஏற்படுத்தும். உணவு சமைப்பவர்கள் அனைவரும் மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாகி இருப்பதுடன் ஏப்ரன், தொப்பி என்பன அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்.

**பாடசாலை மருத்துவப் பரிசோதனை (SMI)**

பாடசாலை மாணவர்களுக்கு வருடந்தோறும் தரம் 1, 4, 7 மற்றும் 10ம் வகுப்புகளில் வைத்தியர்களினால் பாடசாலை மருத்துவப் பரிசோதனை நடாத்தப்படுவது வழமை. இதன் போது பல்வேறு பரிசோதனைகள் மாணவர்களில் நடாத்தப்படுவதுடன் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்படின் மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்கு மாணவர்கள் அனுப்பிவைக்கப்படுவது வழமை. பாடசாலை மருத்துவப் பரிசோதனையின் போது உயரம், நிறை, கண்பார்வை, குருதிச்சோகை, பேன், இருதயம், சுவாசப்பை, தோல் நோய்கள் என்பன பரிசோதிக்கப்படுவது வழமை. மாணவர்கள் அனைவரும் பாடசாலை மருத்துவப் பரிசோதனை நடைபெறும் நாட்களில் தவறாது வருகை தருவது பல்வேறு வகைகளில் அவர்களுக்கு நன்மையானதாக அமையும். குறிபாடுகள் கண்டுபிடிக்கப்படும் மாணவர்கள் மேலதிக சிகிச்சைக்காகச் சென்றார்களா என்பதனை பாடசாலை ஆசிரியர்கள் உறுதிப்படுத்துவது நல்லது.

**சுகாதாரக் கழகங்கள்**

பாடசாலைகள் தோறும் சுகாதாரக் கழகங்கள் பேணப்படுவது தற்போது நடைமுறையில் உள்ளது. இதற்காகத் தனியான அறை ஒன்று ஒதுக்கப்பட்டு சுகாதாரக் கழகத்திற்கான ஆசிரியர்கள், மாணவ அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். இவர்களுக்கான உபகரணங்கள் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும். பாடசாலை சார்ந்த அனைத்து சுகாதாரம் சார்ந்த விடயங்களும் இவர்களினூடாக ஒழுங்கு


படுத்தப்படுவது அவசியமானதாகும். வைத்தியர்களினால் வருடம் ஒரு முறை மட்டும், குறிப்பிட்ட மாணவர்களுக்கு நடாத்தப்படும் பாடசாலை மருத்துவப் பரிசோதனை தவிர அனைத்து மாணவர்களுக்கும் சுகாதாரக் கழகங்களினால் உயரம், நிறை, உடற்திணிவுச் சுட்டெண், கண்பார்வை போன்ற முக்கிய விடயங்கள் பரிசோதிக்கப்பட வேண்டும். இவை தவிர டெங்குக் கட்டுப்பாடு, போதைப்பொருள் தவிர்த்தல் மற்றும் இதர சுகாதார விளிப்புணர்வு நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுவது வழமை.

**உணவுச்சாலை**

பாடசாலை உணவுச்சாலையானது சுகாதாரத் திணைக்களத்தின் விதிமுறைகளுக்கு அமைவாகவும் கல்வித் திணைக்களத்தின் விதிமுறைகளுக்கு அமைவாகவும் நடாத்தப்படுவது முக்கியமானதாகும். உணவுச் சாலையில் கடமையாற்றும் அனைவரும் மருத்துவப் பரிசோதனை செய்திருப்பதுடன் இங்கு விற்கப்படும் உணவுகள் சுத்தமான முறையில் தயாரிக்கப்படுவது அவசியமானதாகும்.

தற்போது மாணவர்களிடையே உடற் பருமன் அதிகரித்தல் ஒரு முக்கிய பிரச்சினையாக வளர்ந்து வருகின்றது. இதற்கான முக்கிய காரணம் அதிகளவிலான கொழுப்பு மற்றும் சீனி கலந்த உணவு வகைகளை உண்பதே எனக் கூறப்படுகின்றது. எனவே பாடசாலை உணவகங்களில் இவ்வகையான உணவுகள் விற்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். மேலும் மாணவர்கள் சத்துள்ள உணவு வகைகள் உண்பதை ஊக்குவிக்க வேண்டும்.

ஒரு பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் சுகாதாரம் மேற்கூறிய விடயங்களை பாடசாலை நிர்வாகத்தினர், மாணவர்கள், வைத்தியத் துறையினர் மற்றும் பாடசாலையின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ள அனைவரும் கடைப்பிடிப்பார்களேயானால் எமது சமுதாயத்தின் எதிர்காலச் சந்ததியினராகிய பாடசாலை மாணவர்கள் தேக ஆரோக்கியமுள்ள சுகதேகிகளாக வளர்ந்து வருவார்கள் என்பது உறுதி.





# The Value of Scouting

Mr.T.SRIRAGHAVAN
*Teacher of English*

No other movement has acquired and sustained such world-wide popularity as the Scout movement. From the time of its inception during the Boer war in South Africa, the movement has gone from strength to strength winning fresh supporters all over the world. It has even penetrated the jungles of dark Africa and the mountains of switzerland, because every country has come to regard that a scout will turn out to be a good citizen And above all it is meant to promote brotherhood and peace in a war-weary world.

The Principal tenet of the scout movement is service. A Scout has to promise to render whatever service he is capable of rendering to anyone in need, he has to do at least one good turn every day. He is taught to be patriotic, to obey his leader and others in authority, to honour his promises and to submit himself to discipline. These are the Qualities that make good citizens.

Apart from these that go to develop his character, he is given practical training in all those crafts and exercises that would be useful to him in life. He is encouraged to become efficient as a swimmer, a cook, a carpenter, a male nurse and so on. Motto is Be prepared. Make him useful in any emergency whether it be to carry something, or to save a person from drawning or to render first aid to a wounded or sick person.

Apart from all these, he is taught self-reliance, modesty and cheerfulness. With such broad training and discipline, a scout is sure to become a useful and examplary citizen. That is why scouting is regarded as a movement of great value.



# குறுகிய காலத்தில் வணிக நிறுவனங்கள் சந்தையில் தோல்வியடைதல்
# -Marketing myopia-

**திரு. ஸ்ரீ. ஸ்ரீவிமலகாந்தன்**
ஆசிரியர்.

## அறிமுகம் : (Introduction)

மனித நாகரிக வளர்ச்சியினைத் தொடர்ந்து தமது தேவைகளைத் தாமே பூர்த்தி செய்ய முடியாத நிலையில் அதேவேளையில் தமது தேவைக்கு மிஞ்சிய பொருட்களை பிற சமூக குழுமங்களுக்கு வழங்கவேண்டிய நிலையில் மனிதன் காணப்பட்டான். இவ்வாறான சந்தர்ப்பத்தில் பரிமாற்றம் சந்தை என்ற எண்ணக்கருக்கள் தோற்றம் பெற்றன. கடந்த பல தசாப்தகாலமாக முக்கியத்துவம் பெற்று விளங்கிய நிறுவனங்கள் அல்லது சந்தைத்தலைமைத்துவ நிறுவனங்கள் உயர்ந்த நிலையிலிருந்து விலகி வீழ்ச்சி நிலைக்கு சென்று கொண்டிருக்கின்றன. உண்மையில் அவை வளர்ச்சியுறுவதை நிறுத்திவிட்டன. குறுகியகாலத்தில் சந்தையில் தோல்வி என்ற பிரச்சினை இன்று தனிப்பட்ட பிரதேசத்திற்கு என்றில்லாமல் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் காணப்படுகின்றது. இலங்கையினை எடுத்து நோக்கினால் தேசியரீதியாக செல்வாக்கு பெற்ற உற்பத்திகளாக கொள்ளப்படும் “இரட்டையானைமார் தீப்பெட்டி” “யானை மார்க்சோடா, SR பற்பசை, தேசிய காப்புறுதிக் கூட்டுதாபனம் ஆகிய நிறுவனங்கள் சந்தைப்பரப்பில் கணிசமானஅளவு ஆதிக்கம் செலுத்தின ஆனால் அவை இன்று எவ்வளவு தூரம் சந்தையில் நிலைத்து நிற்கின்றன என்றால் அவற்றின் பங்கு குறிப்பிடும் படியாக எதுவும் இல்லை எனக்கூறமுடியும். இதேபோல சர்வதேச ரீதியாக சிறப்புபெற்ற உற்பத்திகளாக நோக்கப்பட்ட பிரித்தானியா, அமெரிக்கா, யப்பான் உற்பத்தி நிறுவனங்கள் இன்று தமது சந்தைப் பங்கை சீனா மற்றும் இந்தியாவிடம் இழந்ததனைன் காண முடிகிறது குறிப்பாக யாழ்ப்பாணத்திலும், பருத்தித்துறையிலும் ‘கொடிகட்டிப்பறந்த’ நிறுவனங்கள் இன்று இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. குறிப்பிட்ட உற்பத்தி சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் தமது நிறுவன நடவடிக்கையினை தெரிந்தோ அல்லது தெரியாமலோ தவறினை அழைத்துள்ளன எனக்கருதலாம் இவ்வாறு இழைக்கப்பட்ட தவறின் மொத்த வடிவமே நிறுவனங்கள் எதிர்நோக்கும் இன்றைய நிலையாகும்.

நிறுவனங்கள் குறுகியகாலத்தில் தோல்வியடைவதற்கு காரணம் நிறுவனத்தின் வளர்ச்சியில் நுகர்வேரே முக்கியமான பங்காளர் என கருத மறப்பதாகும். நிறுவனங்கள் நுகர்வோரைத் திருப்திப்படுத்தும் திசையில் செல்லாது உற்பத்திப் பொருள் சாத்தியத்தினை மட்டும் அடிப்படையாக கொண்டு செயற்படுவதனால் நிறுவனங்கள் தோல்வியடைகின்றன என்பதனை வரலாற்று ரீதியாக அறிந்துகொள்ள முடிகின்றது. இந்நிலைமையினை பின்வருமாறு வரையறுக்கலாம். "நுகர்வோரின் எதிர்கால பிரதிபலிப்புக்கு ஏற்ப தமது செயற்பாட்டினை வகுக்காது போட்டி நிறுவனங்களின் நவீன தந்திரோபாயங்களை கவனத்தில் கொள்ளாது புதிய ஆராய்ச்சி அபிவிருத்தி வடிவமைப்பில் அதிகளவு நாட்டம் செலுத்தாது உற்பத்தி சாத்தியப்பாடுகளுக்கு ஏற்ப தமது நோக்கங்களை வரையறுத்து உற்பத்தி செய்துவழங்கல் தொலைநோக்கற்ற சந்தைப்படுத்தல் அணுகுமுறையாகும். நிறுவனங்கள் குறுகிய காலத்தில் தோல்வியடைகின்றமைக்கு குறுங்கால விடயங்களுக்கு அல்லது தற்கால நன்மைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனரே தவிர சந்தைப்படுத்தல் செய்முறைக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனரே தவிர சந்தைப்படுத்தல் செய்முறைக்கு முக்கியத்துவம் அளிப்பது இல்லை. அதாவது யாதெனில் பொருள் விற்பனை செய்யப்பட்டதுடன் அல்லது காசினைப்பெற்றவுடன் சந்தைப் படுத்வோர் தமது பணிமுடிந்து விட்டதாக கருதுகின்றனர். இந்தநோக்கில் தமது செயற்பாடுகளை செய்தார். இதனால் சந்தையில் தோல்வியடைவதற்கு காரணமாக அமைகின்றன.

## 1.1 சந்தையில் தோல்வியடைவதற்கான காரணங்கள் :-

***1)*** **மாற்றீடு இல்லை என்ற தலைக்கனம் / அலட்சியப்போக்கு**

குறிப்பிட்ட உற்பத்தி பொருள் வாழ்க்கை வட்டத்தில் அதிகளவு போட்டியாளர் பூச்சியமாக உள்ளது. ஆனால் அந்த நிலைதான் தொடர்ந்து இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. இவ்வாறான அலட்சியப் போக்கில் செயற்பாட்டால் சந்தையில் தோல்வி எதிர்கொள்ளும்.

***2)*** **பழமையின் நிழலில் செயற்படல்**

குறிப்பிட்ட தொழில் குறிப்பிட்ட காலத்தில் சிறப்புபெறுவதற்குப் பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட காலம் தலைமைத்துவத்தினை பெற்றிருக்கும் ஆனால் அந்நிலைமை தொடர்ந்து இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஆனால் சில நிறுவனங்கள் பழைமையின் நிழலில் செயற்படுதல் தொடர்ந்து அதேநிலை தொடர முடியாத நிலை ஏற்படும்.
உ+ம் அரச வங்கிகள்

***3)*** **சிறந்த நிதிசார் கட்டமைப்பினை கடைப்பிடிக்காமை**

வணிக நிறுவனங்கள் கட்டிடங்கள், வணிகப்பொருட்கள், இயந்திரங்களுக்கு முதலீட்டில் கணிசமான அளவு செலவழிக்கின்றன. ஆனால் அந்நிறுவனங்கள் சரியான நிதிசார் கட்டமைப்பினை பேணுவதற்கு கணக்கியல் உத்தியோகத்தர்கள், கணக்காளர்களை நியமிக்காமல் தணித்து உடமையாளர்களினால் கணக்கு வைப்புகள் பேணப்படுகின்றன. இதனால் வணிகநிறுவனங்கள் பாரிய நிதிநெருக்கடியினை எதிர்கொண்டு இறுதியில் தோல்வியடைகின்றன.

4) **சுய ஏமாற்றுத்திட்டம்**
உற்பத்தி நிறுவனங்கள் எண்ணப்பாடுகள் நிறுவனங்களின் ஆக்கத்திற்கு வழிவகுக்கும். அதேநேரம் தவறான எண்ணப்பாடுகள் நிறுவன வீழ்ச்சிக்கு அடிப்படையாக காணப்படுகின்றன.

5) **பகுப்பாய்வுத்தவறு**
குறிப்பிட்ட சந்தை தொடர்பான தெளிவான சிந்தனை காணப்படாது விட்டால் தொடர்ந்து காலங்களில் நட்டங்களை எதிர்கொள்ளல்.

6) **வரையறுக்கப்பட்ட நோக்கம்**
ஒவ்வொரு வணிக நிறுவனங்கள் பல்வேறுபட்ட நோக்கங்களை கொண்டு செயற்பட்டபோதும் அந்நிறுவனங்கள் நோக்கத்தின் எல்லை வரையறுக்கப்படுமாயின் நிறுவனம் நீண்டகாலம் நிலைத்து நிற்க முடியாமல் தோல்வியடையும்.

## 1.2 நிறுவனங்கள் தோல்வியடைதலை தடுத்தல்.

வணிக நிறுவனம் குறுகியகாலத்தில் தோல்வியினை சந்திப்பதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டுள்ளன. அவ்வாறான நிலையிலிருந்து விடுபடுவதற்கு வழிமுறைகள்.

1) நிறுவனங்கள் நுகர்வோர் பிரதிபலிப்பை அறிந்து கொள்வதற்கு சந்தை ஆய்வினை மேற்கொண்டு அதற்கு உற்பத்தி செய்து வழங்கல்.
2) புதிய பயன்பாடுகளை அறிமுகப்படுத்தல் - வணிக நிறுவனங்கள் நவீன ஆராய்ச்சியினை காலத்துக்காலம் மேற்கொண்டு புதிய புதிய பயன்பாடுகளை அறிமுகப்படுத்தல்.
3) நிறுவனத்தின் நோக்கத்தின் முன்னுர்ந்து அந்த நோக்கத்தினை அடையக்கூடிய சிறந்த தலைமைத்துவத்தினை வளர்த்தல்.
4) தமது போட்டியாளரை விட மேம்பட தந்திரோபாயங்களை நிறுவனங்கள் கடைப்பிடித்தல்.
5) நிறுவனம் தாக்கமான விளம்பரங்களை கண்டுபிடித்து விளம்பரம் செய்வதன் மூலம் குறிப்பிட்ட நிறுவனத்தின் வினைத்திறன் அதிகரிக்கும்.
உ+ம் Cargills நிறுவனத்தின் விளம்பரமானது. "வீடு செல்லும்போது" என்றும் விளம்பரத்தினை பயன்படுத்துகின்றது.

## முடிவுரை (Conclusion)

ஒரு நிறுவனம் அதிர்ஷ்டம் வாய்ந்தாக இருப்பதற்கான சிறந்த வழி. தன்னைத்தானே அதிர்ஷ்டசாலியாக ஆக்கிக்கொள்வதுமாகும். எந்தவொரு நிறுவனமும் இலாபக்கவர்ச்சிக்கு முக்கிய இடமளிப்பது வழமையாகும். அதற்காக நுகர்வோர் பிரச்சினைகளைக் கருத்திற்கொள்ளாது நுகர்வோருக்கு சுமையாக உள்ளவொரு நிறுவனமும் நீண்டகாலம் நிலைப்பதில்லை. வணிக நிறுவனங்கள் வளர்ச்சி வாய்ப்புகளைத் தாமே சாதமாக பயன்படுத்துகின்ற வகையில் ஒருமைப்பட்டு செயற்படும். நிறுவனம் வெற்றிப்படியில் வீறு நடைபோடும். நிறுவனம் நுகர்வோர் தேவைகளை கவனத்தில் கொண்டு தனது தொழிலை உண்மையாக தொலைநோக்கு சிந்தனை செயற்பாடுமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் வளர்ச்சியினை யாரும் தடுக்கமுடியாது.

உசாத்துணை நூல்கள்

1. Principles of marketing page 6-8 philipkotler
2. Marketing myopia - Theodore Levitt



# இரு வாழ்த்து

பரா.ரதீஸ்
ஆசிரியர்,
தமிழ்ப்புலம்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

திருமண நாளன்று மணமக்களை வாயார வாழ்த்துகின்றோம். உறவுகளும் சுற்றமும் ஒன்று கூடிப்பாடி வாழ்த்துகின்ற மரபொன்று எம்மிடம் இருந்தது. இன்றும் கூடச் சில இடங்களில், சில சமூகங்களில் திருமணச் சடங்கு முடிந்ததும் மணமக்களை ஊஞ்சலில் இருத்தி மங்கல வாத்தியங்கள் முழங்க வாழ்த்திப்பாடுவதைக் காண்கின்றோம். இதைவிட மனத்தால் வாழ்த்துகின்றோம். மணமகன், மணமகளின் கழுத்தில் திருமாங்கல்யத்தைச் சூட்டும் போது மலர்தூவி மனத்தால் வாழ்த்துவதை இன்றும் காண்கின்றோம். இன்னும் வாழ்த்துப்பா யாத்து வாசித்து வாழ்த்துகின்ற மரபும் உண்டு. முன்பு இது அரிதாகக் காணப்பட்டது. இன்று கணினி யுகம் ஆதலால் தாராளமாக மணமக்களுக்கு வழங்குகின்றார்கள். ஒரு திருமண வைபவத்திலே பத்துக்கு மேற்பட்ட வாழ்த்துப்பாக்கள் கொடுக்கப்படுவதை அவதானிக்கின்றோம். முன்பு பெரியவர் ஒருவர் வாழ்த்துப்பாவினை வாசித்து வாழ்த்தி வழங்குவார். இன்று வாசித்துக் கொடுக்கின்ற மரபு அரிதாக உள்ளது.

திருமண வாழ்த்துக்களை தம் இலக்கியங்களிலும் காணலாம். மணமக்களை மட்டுமா வாழ்த்தினர் தமிழ்ப்புலவோர். கிடையாது, தமிழைத், தமிழ்த்தாயை, நாட்டை என எம் புலவர்களின் வாழ்த்துப்பட்டியல் நீண்டுகொண்டு செல்கின்றது. தெய்வத்தை வாழ்த்தியவர்களும் எம்முள் உளர். இறைவன் குறையேதும் இன்றி இருந்தாற்தான் நமக்குச் சிறப்பு என்று நினைத்து இறைவனை வாழ்த்தியவர் நம் பெரியாழ்வார்.

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு"

பல்லாண்டு காலம் வாழவேண்டுமென்று இறைவனை ஆசிர்வதிக்கிறார் பெரியாழ்வார். எல்லோரும் இறைவனிடத்தே வாழ்த்தை எதிர்பார்த்திருக்க இவரோ இறைவனை வாழ்த்தியிருக்கின்றார். இறைவனையே வாழ்த்தியவராச்சே ; எனவே இறைவனை விட இவர் தானே பெரியவர்; இதனால் தான் விட்டுணு சித்தனுக்குப் பெரியாழ்வார் என்ற பெயருண்டாயிற்று என்று கூறுவர்.

நம் கவிஞர்கள் தாம் படைத்த இலக்கியங்களில் திருமணக்காட்சிகளைப் பாடியிருக்கின்றனர். மணமக்களை வாழ்த்தியுள்ளனர். இளங்கோ, கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நடத்துகின்றார். சேக்கிழார், சுந்தரருக்கும் பரவையாருக்கும் திருமணம் நடத்துகின்றார். கம்பர், இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் நடத்துகின்றார். உமறுப்புலவர், அலி (றழி)க்கும் பாத்திமா நாயகிக்கும் திருமணம் நடத்துகின்றார். இப்படி எம் இலக்கியங்களில் பல திருமணங்கள். திருமண வாழ்த்துக்களும் இடம் பிடித்துக்கொள்கின்றன.

இராமனுக்கும் சீதைக்கும் திருமணம். ஜனகனை வாழ்த்துப்பாட வைக்கின்றான் கம்பன். சீதாப்பிராட்டியை, இராமன் கையில் கொடுக்கின்றான் ஜனகன். அப்போது வாழ்த்திக் கொடுக்கின்றான். பரம் பொருளாகிய திருமாலும் தாமரை மலரிலே வீற்றிருக்கின்ற திருமகளும் இனிது வாழ்வதைப் போன்று எனது மகளுடன் நீ இனிது வாழ்க என்று வாழ்த்துகின்றான் மிதிலையின் மன்னன்.

"கோ மகன் சனகன் குளிர் நன்னீர்  
பூ மகளும் பொருளும் என நீ என்  
மா மகள் தன்னொடு மன்னுதி என்னாத்  
தாமரை அன்ன தடக்கையில் ஈந்தான்"

அந்தணர்களும் பெண்களும் முடி மன்னர்களும் அறிஞர்களும் இராமனையும் சீதையையும் வாழ்த்துகின்றனர். அடுத்த பாடலில் சொல்கிறான் கவிச்சக்கரவர்த்தி. அந்தப் பாடலையும் பார்த்து விடுவோம்.

"அந்தணர் ஆசி அருங்கலம் அன்னார்  
தந்த பல்லாண்டு இசைத்தார் முடி மன்னர்  
வந்தனை நாவலர் வாழ்த்தொலி போல  
முந்திய சங்கம் முழங்கின மாதோ"

இராமனையும் சீதையையும் "பூமகளும் பொருளும் என நீ என் மாமகள் தன்னொடு மன்னுதி" என்று வாழ்த்துகின்றான் ஜனகன். இதே போல நம்மவர்கள், மன்மதனும் ரதியும் போல, இராமனும் சீதையும் போல, சத்தியவானும் சாவித்திரியும் போல, நகமும் சதையும் போல, பூவும் மணமும் போல, ஒருயிரும் ஈருடலும் போல என்றெல்லாம் மணமக்களை வாழ்த்துகின்றனர். இதைவிடப், பல்லாண்டு வாழ்க, பதினாறும் பெற்று வாழ்க, இல்லறம் சிறக்க வாழ்க, பல்லவரும் போற்ற வாழ்க, பண்பும் அறிவும் நிறைந்த பிள்ளைகளைப் பெற்று வாழ்க, ஊர் போற்ற வாழ்க, தெய்வக் குழந்தைகளைப் பெற்று வாழ்க, இன்பமுடன் வாழ்க என்றெல்லாம் வாழ்த்துகின்றோம். "வாழ்த்துதல்" சக்தி மிக்கது, பயன் விளைக்கும், பலிக்கும் என நம்புகின்றார்கள் நம்மவர்கள்.

கணவனும் மனைவியும் பிரியாது என்றும் ஒற்றுமையாக வாழ்க, குழந்தைப் பேறு அற்றுப் போகாது குழந்தை பெற்று வாழ்க, பிறந்த குழந்தைகள் அறிவிலிகளாக அமையாது

புத்திஜீவிகளைப் பெற்று வாழ்க, உங்கள் குடும்பத்தில் துன்பம் பெருகாது இன்பமுடன் வாழ்க, இல்லற வாழ்க்கை சிறிது காலமாக அமையாது நீண்ட காலம் வாழ்க இப்படியெல்லாம் வாழ்த்துவது கிடையாது. வாழ்த்தும் மரபு எம்மிடம் இல்லை. ஆனால் ஒரு சிலர் இப்படி வாழ்த்தியிருக்கிறார்கள். நம்மைப் போல சாதாரணமானவர்கள் என்றால் சரி போகட்டும் என்று விட்டுவிடலாம். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தைத் தந்த இளங்கோவும் மனோன்மணீயம் என்ற நாடக நூலைத் தந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளையும் (1855-1897) அல்லவா, எனவே அவர்களின் வாழ்த்துக்களைப் படித்துக் கவிநயம் காண்போம்.

## II

கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம். பதினாறு வயது நிரம்பிய மாசாத்துவான் மகன் கோவலனுக்கும் பன்னிரண்டு வயது நிரம்பிய மாநாய்கன் மகள் கண்ணகிக்கும் சோழநாட்டில் பூம்புகாரில் திருமணம். மாமுது பார்ப்பான் மறை வழிகாட்டக் கண்ணகியை மணக்கிறான் கோவலன். மணமக்களை வாழ்த்துகின்றனர்.

*"காதலர் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்*
*தீது அறுக"*

என்று வாழ்த்துகின்றனர். அன்பானவர்களாகிய நீங்கள் பிரிந்து வாழாது, பற்றிய கை ஞெகிழ்ந்து போகாது, தீமைகள் எல்லாம் ஒழிந்து இன்பமாக வாழ்க என்று வாழ்த்துகின்றனர். மணமக்களை இப்படி வாழ்த்தலாமா? இது முறையா? இப்படி வாழ்த்துப் பாடக்கூடாது என்று அப்பெரும் புலவருக்குத் தெரியாதா? அப்படி என்றால் ஏன் இப்படி வாழ்த்தினார். கேள்விகள் எழுகின்றன.

*"காதலர் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்*
*தீது அறுக"*

என்று வாழ்த்தியதனால் தான் அந்தக் குடும்பம் பிரிந்தது, பற்றிய கை ஞெகிழ்ந்தது, தீமைகள் பெருகின என்று கூறுகின்றனர் ஒரு சிலர். வாழ்த்தியவர்களில் மட்டுமன்றி வாழ்த்துப் பாடிய இளங்கோவிலும் குறை காணுகின்றனர். இப்படியா வாழ்த்துப்பாடுவது சற்று ஆவேசத்துடன் கேட்கின்றனர். இன்னும் ஒரு படி மேற்சென்று இப்படியான உண்மையை அறிஞர்கள், கண்டு சொல்லத் தவறிவிட்டனர். இளங்கோவில் மட்டுமல்ல, அவர் தம் சிலம்பை கண்டு சொன்னவர்களிலும் குறை காணுகின்றனர். "அவர் தம் அளவு அவ்வளவு" தான் மன்னிப்போம்.

*"காதலர் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்*
*தீது அறுக"*

என்று வாழ்த்தியதால், அந்தக் குடும்பம் பிரிந்தது, பற்றிய கை ஞெகிழ்ந்தது, தீமைகள் பெருகின. எனவே வாழ்த்தும் போது கவனமாக இருக்க வேண்டும். வார்த்தைகளை ஒன்றுக்கு நூறுதரம் சிந்தித்துச் சொல்ல வேண்டும். இந்த உயரிய சிந்தனையை இளங்கோ தனது வாழ்த்தினூடாக வெளிப்படுத்தியுள்ளார் என்று வாழ்த்தினூடாகப் படிப்பினையைக் கண்டு சொல்கின்றார்கள். சிலம்பு உயரிய சிந்தனைகளை எம் மனங்களில் நிலை நிறுத்திய உயரிய காப்பியம். இதனால் தான் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னும் எம் மத்தியில் நிலைத்திருக்கிறது சிலப்பதிகாரம். ஆனால், இந்த வாழ்த்தினூடாகப் படிப்பினையை மட்டும் கண்டு சொல்வதோடு மனநிறைவு அடைவோமேயானால் அது இளங்கோவின் தகுதிப்பாட்டிற்குப் பொருத்தமற்ற விடயமாகும்.

பின்னே நடக்கப் போகின்ற விடயத்தை முன்னேரேயே வெளிப்படுத்துதல் என்பது சிறந்த கவித்துவமாகக் கொள்ளப்படுகின்றது. இக் கவித்துவத்தினை இளங்கோ, சேக்கிழார், கம்பர் போன்ற பெரும் புலவர்களின் படைப்புக்களில் சிறப்பாகக் கண்டு இன்புறுகின்றோம். இதனைச் சேக்கிழாரிடத்தே சென்று ஓர் எடுத்துக்காட்டினூடாக விளங்கிக் கொள்வோம். பரமதத்தனுக்கும் புனிதவதியாருக்கும் (காரைக்கால் அம்மையார்) திருமணம் நடைபெறுகின்றது. புனிதவதியாரின் தந்தையாகிய தனதத்தனுக்கு வேறு பிள்ளைகள் கிடையாது. எனவே மகளைப் பரமதத்தனின் பட்டினமாகிய நாகபட்டினத்திற்கு அனுப்பாது, அருகிலேயே வீடு ஒன்றை அமைத்து மகளையும் மருமகனையும் இருத்துகிறான். பரமதத்தனும் வாணிபத்தினூடகச் செல்வதைப் பெருக்கி வாழ்கின்றான். இதனைத் “தங்குமனை வளம் பெருக்கி மிகப்புரியும் கொள்கையினில் மேம்படுதல் மேயினான்” என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

பரமதத்தனும் புனிதவதியாரும் இணைந்து இல்லறம் நடத்திய மனையைத் ‘தங்குமனை’ என்று பாடுகின்றார் சேக்கிழார். தங்குமனை என்றால் தற்காலிகமாக வாழ்கின்ற இடம் என்று பொருளுரைப்பர். கணவனும் மனைவியும் இணைந்து வாழுகின்ற இடத்தை ‘தற்காலிகமாக வாழுகின்ற இடம்’ என்று பாடலாமா? இது நியாயமா? அதுவும் அன்புக்காப்பியம் தந்த தெய்வச் சேக்கிழாரா இப்படிப்பாடுவது, கேள்விகள் எழுகின்றன. பரமதத்தனைப் பொறுத்த வரை புனிதவதியாரோடு வாழ்ந்த மனை ‘தங்குமனை’ தான். ஏனென்றால் அவன் அந்த வீட்டிலே நெடுநாட்கள் வாழவில்லை. புனிதவதியாரைப் பிரிந்து சென்றுவிட்டான். சரி ‘தங்குமனை’ என்ற தொடரைப் பயன்படுத்தியது நியாயம் தான். பிரிந்த பின்னே சொல்லியிருக்கலாம். திருமணம் நடந்த தொடக்கத்திலே ஏன் சொல்ல வேண்டும். பின்னே நடக்கப் போகின்ற விடயத்தை முன்னேரேயே வெளிப்படுத்தல் என்பது கவித்துவமாச்சே. இதனால் தான் பரமதத்தனும், புனிதவதியாரும் மணம் செய்த ஆரம்பத்திலேயே ‘தங்குமனை’ என்ற தொடரைப் பயன்படுத்தி இவர்கள் இருவரும் நிரந்தரமாக வாழப்போவதில்லை. பிரிந்து போகப்போகிறார்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

“பின்னே நடக்கப் போகின்ற விடயத்தை முன்னேரேயே வெளிப்படுத்தல்” என்ற கவித்துவத்தை இளங்கோவும் இந்த வாழ்த்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் என்று துணியலாம்.

“காதலர் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீது அறுக.

என்ற வாழ்த்தின் மூலம், கோவலனும் கண்ணகியும் பிரியப்போகின்றார்கள், பற்றிய கை ஞெகிழப்போகின்றது, துயரங்கள் பெருகப் போகின்றன என்பதை மங்கல வாழ்த்துப்பாடலின் ஊடாக வெளிப்படுத்தியிருக்கக் காண்கிறோம். எனவே இளங்கோவின் வாழ்த்திலே அவரது கவித்துவம் பொதிந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

## III

தமிழ் நாடக வரலாற்றில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மனோன்மணீயம் என்ற கவிதை நாடக நூல். தமிழ் நாடக இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படும் இவர் கேரளாவில் உள்ள ஆலப்புழையில் பிறந்தவர். திருவிதாங்கூர் மகாராஜாக் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகக் கடமையாற்றியவர். வார்ட் லிட்டன் ஆங்கிலத்தில் எழுதிய மறைவழி அல்லது இரகசிய வழி (The Secret way) என்ற நூலைத் தழுவி இந்த நாடக நூலை எமக்களித்தார். தமிழ் நாடகவரலாற்றில் சிலப்பதிகாரத்தின் பின் பெரும் புகழ் பெற்ற நாடகமாக இது

விளங்குகின்றது. இந் நாடகத்தில் "நீராரும் கடல் உடுத்த" எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துக் காணப்படுகின்றது. இந்த வாழ்த்து தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் அலுவலகங்களிலும் அரச நிகழ்ச்சிகளிலும் பொதுவிழாக்களிலும் பாடப்படுகின்றது. ஈழத்திலும் இந்த வாழ்த்துப் பாடப்படுகின்றது.

"நீராரும் கடல் உடுத்த" எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்தில்

"ஆரியம் போல் உலகவழக்கழிந்து ஒழிந்து சிதையாது
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்ற அடிகள் இடம்பெறுகின்றன. வடமொழி போல் அழிந்து ஒழிந்து சிதையாது என்றும் சீரிளமையுடன் இருக்கும் எம் தமிழே உன்னை வாழ்த்துகிறேன் என்கிறார் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை. வடமொழியை அந்த மொழி சந்தித்த இன்னல்களை எடுத்துக்கூறி இந்த அவல நிலையில் இருந்து தப்பித்து நிற்கும் தமிழின் நிலைபேற்றைக் கூறி வாழ்த்துகின்றார்.

"காதலர் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீது அறுக"

என்று அடிகளார் வாழ்த்தியதைப் போன்று, அழிந்து ஒழிந்து சிதையாது சீரிளமையோடு இருக்கின்ற தமிழ் என்று வாழ்த்துகின்றார். வாழ்த்துப்பாடவந்த இப்புலவர் "ஆரியம் போல் அழிந்து, ஒழிந்து, சிதையாது.." என்று ஏன் வாழ்த்தினார். சிந்திக்க வேண்டிய விடயம். இன்னொரு மொழியைத் தாழ்த்தி, தமிழுக்கு வாழ்த்துத் தேவையா? அப்படிப் பாடிய வாழ்த்தை நாம் பாடவேண்டுமா? இப்படி ஒரு சிலர் கேட்கின்றனர். பேச்சையே வருவாயின் மூச்சாகக் கொண்ட ஒரு சிலர் இப்படியான கேள்விகளைச் சற்று ஆவேசமாகக் கேட்கின்றனர். இவர்களின் கேள்விகளில் நியாயம் இருக்கின்றதா? வடமொழியைத் தாழ்த்தி, தமிழின் சிறப்பை இயம்பி வாழ்த்துவது மட்டும்தானா சுந்தரம்பிள்ளையின் நோக்கம். "ஆரியம் போல் அழிந்து ஒழிந்து சிதையாது" என்ற தொடர் இவர்கள் கூறுவது போன்று சிந்திப்பதற்கு இடம்கொடுக்கின்றதா? இவர்களின் சிந்தனை நியாயமானதா? சிந்திப்போம்.

வடமொழியைக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் தேவபாடை - தேவபாஷை தெய்வமொழி என்று பாடினான். வளமான இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட மொழி இம்மொழி. திருத்தக்கதேவர், கம்பன், கச்சியப்பர், புகழேந்தி, அரசகேசரி போன்ற நம் புலவர்களுக்கு கருக்கொடுத்ததே இந்த வடமொழிதான். இன்னொரு புறத்திலே வடமொழியால் தமிழ் இன்னல்களைச் சந்தித்ததையும் தனித்துவத்தை இழக்கும் நிலை ஏற்பட்டதையும் நாம் மறக்க முடியாது. இதனால் தான் புரட்சிக்கவிஞன் பாரதிதாசன் (**1891-1965**).

"பிந்தி வடக்கினிலே - மக்கள்
பேசிடும் பேச்சினில் பாட்டு நடத்தினாள்
எந்த விதம் சகிப்பேன்? கண்ட
இன்பம் அனைத்திலும் துன்பங்கள் சேர்ந்தன"

"வடநாடு தென்னாட்டை வீழ்த்தச் - செய்த
வஞ்சங்கள் சிறிதல்ல தம்பி"

என்று முழங்கினான். தமிழ்ப் புலவர்களே "தெய்வ மொழி" என்று போற்றிய மொழி, பெரும்புலவர்கள் பலருக்குக் கருக்கொடுத்த மொழி. தமிழின் வளர்ச்சிக்கு, நிலை பேற்றிற்கு பெரும் சவாலாக அமைந்த மொழி, அந்த மொழிக்கு என்ன நடந்தது? அழிவை, ஒழிவை, சிதைவை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் தமிழோ பல்வேறு சவால்களையும்

உடைத்தெறிந்து நிலைத்து நிற்கின்றது. என்று தமிழின் சிறப்பை, நிலைபேற்றை ஒரு புலவன் பாடுவது தவறல்ல.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடை கடைப் பகுதிகளில் வாழ்ந்தவர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை (1855-1897). பத்தொன்பதாம் நூற்றாண்டின் நிறைவிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வாழ்ந்தவர் பாரதி (1882-1921). பத்தொன்பதாம் நூற்றாண்டின் நிறைவுப் பகுதியிலே பிறந்து, இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு மேலாக வாழ்ந்தவர் பாரதிதாசன் (1891-1965). இவர்கள் மூவரும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழ்மொழி கண்ட இன்னல்களை, இக்கட்டுக்களை, சுதேசிகளுக்கு பிறமொழிகள் மீது ஏற்பட்ட மோகத்தை அறிந்தவர்கள், நேரில் கண்டவர்கள் இதனால் தான் பாரதி "தமிழின் நிலைபேறு" பற்றி அஞ்சினான். மொழிப்பற்றைத் தீவிரமாக வலியுறுத்தினான். மொழிப்பெருமையை அற்புதமாகப் பாடினான். பாரதிதாசனோ ஒருபடி மேற்சென்று பிறமொழிகள் தமிழரிடத்து தாக்கம் செலுத்துவதைத் தீவிரமாகக் கண்டித்து தமிழ்ப்பற்றை வலியுறுத்துகின்றான். இதே போல

"ஆரியம் போல் உலக வழக்கழிந்து ஒழிந்து சிதையாது
சீரிளமைத் திறம் வாய்ந்து செயல் மறந்து வாழ்த்துதுமே"

என்று சுந்தரம்பிள்ளை வாழ்த்துவதனூடாகத் தமிழ்ப்பற்றை வலியுறுத்துகின்றார் மொழியை பேண வேண்டியதன் அவசியத்தைச் சொல்கின்றார் என்று துணியலாம். அற்புதமான இலக்கியங்களையும் இலக்கணங்களையும் தன்னகத்தே கொண்ட வடமொழி அழிவை - ஒழிவை - சிதைவை சந்தித்திருக்கின்றதென்றால் நாம் கவனமாக இருக்கவேண்டும். பழம் பெருமை பேசுவதில் காலத்தைக் கழிக்கக் கூடாது. நாம் எல்லோரும் சேர்ந்து தமிழை வளர்க்க வேண்டும். என்கின்ற விழிப்புணர்வை, மொழிப்பற்றை இத் தொடர்வாயிலாக வெளிப்படுத்துகின்றார் பேராசிரியர் என்று சிந்திப்பதற்கு வாய்ப்புண்டு.

"ஆரியம் போல் உலக வழக்கழிந்து ஒழிந்து சிதையாது
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்ற அடிகளின் மூலம் தமிழின் நிலைபேற்றைத், தமிழ்ப்பற்றை, வலியுறுத்தியுள்ளார் சுந்தரம்பிள்ளை. 'அழிந்து, ஒழிந்து, சிதையாது' என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தாது, வேறு விதமாகக் கூறியிருக்கலாமே, தமிழிலா வார்த்தைகளுக்குப் பஞ்சம், சுந்தரம்பிள்ளையாலா முடியாது, வாய்ப்புக்கள் பல இருக்க ஏன் இப்படிப் பாடினார் சிந்தனைகள் பிறக்கின்றன.

வடமொழியின் அழிவையும் ஒழிவையும் சிதைவையும் மட்டும் இங்கு இவர் பேசவில்லை. "அழிந்து ஒழிந்து சிதையாது சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" தமிழ்மொழி அழிவை - ஒழிவை - சிதைவைச் சந்தித்தது என்பதை வெளிப்படுத்துகின்றார். இப்படிப் பார்க்கும் போதுதான் வாழ்த்தின் பெறுமானமும் ஆக்கியவனின் உள்ளமும் வாழ்த்துப் பிறந்த பின்புலமும் நன்கு புலனாகும்.

காலந்தோறும் நம் தமிழ் பல இன்னல்களைச் சந்தித்தது என்பது வரலாற்று உண்மை. அன்னியப் படையெடுப்புக்களாலும் அன்னிய மொழிகளின் ஆக்கிரமிப்புக்களாலும் அன்னிய மொழிகள் மீது நம்மவர்களுக்கு ஏற்பட்ட அதீத மோகத்தினாலும் படையெடுத்து வந்து எம் தேசங்களை ஆண்டவர்களின் திட்டமிட்ட சில நடவடிக்கைகளாலும் நம் தமிழ் காலந்தோறும் பல இன்னல்களைச் சந்தித்தது. தமிழ் அழிந்துவிடுமோ? செல்வாக்கை இழந்துவிடுமோ? என்ற ஐயப்பாடு தமிழ்த்தாயின்

தவப்புலவர்கள் பலரது உள்ளங்களில் பிறந்தது உண்மையே. எனவே பல அழிவுகளையும் சிதைவுகளையும் சந்தித்த போதும் அவற்றை எல்லாம் உடைத்தெறிந்து தமிழ்வாழ்கிறது என்ற உண்மை இத் தொடர்களினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது என்று சிந்திப்பதற்கு நிறையச் சாத்தியப்பாடுகள் உண்டு.

எனவே, இன்னொரு மொழியைத் தாழ்த்தி, தமிழுக்கு வாழ்த்துத் தேவையா? அப்படிப் பாடிய வாழ்த்தை நாம் பாடவேண்டுமா? என்று கேள்வி கேட்டு அறியாமையை வெளிப்படுத்துவதைவிட, இந்த அடிகளின் ஊடாக வெளிப்படுகின்ற தமிழின் நிலைபேற்றை, தமிழ்ப்பற்றை, தமிழ் பல இன்னல்களை உடைத்து அமரத்தன்மை அடைந்த சிறப்பைக் கண்டு இன்புறுவதே அறிவின்பாற்பட்ட விடயமாகும்.

“காதலர் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீது அறுக”

என்று வாழ்த்தி, பின்னே நடக்கப் போவதை முன்னே வெளிப்படுத்துகின்ற இளங்கோவின் கவித்துவம் கண்டு மகிழ்கிறோம்.

“ஆரியம் போல் உலகவழக்கறிந்து ஒழிந்து சிதையாது
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே” என்ற அடிகளின் மூலம் தமிழின் நிலைபேற்றை, தமிழ்ப்பற்றை எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ்கண்ட இன்னல்களை குறிப்பாகக்கூறி, அதன் அமரத்தன்மையை வெளிப்படுத்தியுள்ள மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் ஆளுமையினைக் கண்டு வியக்கிறோம்.



# காலநிலை மாற்றம் பயிர்ச்செய்கையில் ஏற்படுத்தும் தாக்கம்

DR.Pon.Alvappillai,M.Sc. PhD
Head/Senior Lecturer Grade 1
Dept. of Agricultural Engineering
Faculty of Agriculture
University of Jaffna Sri Lanka

இலங்கையின் வடமாகாணம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கி இருக்கின்றது. அவைகளாவன யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார். இலங்கையின் 13.54 % நிலப்பரப்பை அதாவது 8,884 சதுர கி.மீ இட விஸ்தீரணம் கொண்டது. அத்துடன் இலங்கையின் சனத்தொகை 10,587,620 மக்கள், இதில் 5.2 % தை வடமாகாணம் கொண்டுள்ளது. இது 45% வேலை வழங்கும் சக்தியைக் கொண்டுள்ளதுடன் 12% உணவுற்பத்தியையும் வழங்குகின்றது. பிரதான பயிர்களாக வெங்காயம் (75%), மிளகாய் (30%), பயற்றைத் தாவரங்கள் (30%), நெல் (15%) என்பன பயிரிடப்படுகின்றன. இங்கு ஏற்று நீர்ப்பாசன முறையும், நேரடி மழைநீர் பாசன முறையும் பயன்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. பாசன கால்வாய்கள் 40,000 கெக்டர் நிலத்தை உள்ளடக்கி இருக்கிறது. வட மாகாணம் விவசாய அடிப்படையில் நன்கு விருத்தி செய்யக்கூடிய நிலைப்பாட்டில் காணப்படுவது சிறப்பானது.

யாழ்ப்பாண மாவட்டம் 1025 சதுர கி.மீ. பரப்பளவையும்இ 7 குடியிருப்பு தீவுகளையும்இ 631 சிறு நீர்ப்பாசன குளங்களையும், 2433 துரவுகளையும்இ 4 உப நிலப்பிரிவுகளையும் (தீவகம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி) உள்ளடக்கி கொழும்பிலிருந்து 410 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. சீராக அமைந்த குடிப்பரம்பல் கொண்ட இந் நிலத்தின் சனத்தொகை 642,000 ஆகவும், விவசாயக் குடும்பங்கள் 62,209 ஆகவும், 30,000 கூலித்தொழிலாளராகவும் 53 % மான மக்கள் விவசாயத்தில் ஈடுபடுபவர்களாகவும், விவசாய விருத்தியில் ஆர்வம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். நிலம் சுண்ணாம்புத் தரையாகவும் அதில் செம்மண் லற்றசோல் 60,000 கெக்டராகவும், கார றிகசோல் 26,000 கெக்டராகவும், வழுக்கை ஆறு பகுதியில் அலுவியல் மண் 10,000 கெக்டராகவும், சராசரி மண் ஆழம் 90 – 100 செ.மீ. ஆகவும் காணப்படுகின்றது. மேலும்

55% ஆன நிலப்பரப்பு பெருந்தோட்ட பயிர்கள் வளர்க்கக் கூடிய வாய்ப்பையும் கொண்டுள்ளது.

**காலநிலை மாற்றம் என்றால் என்ன?**

எமது மக்கள் பெரும்போக பயிர்ச் செய்கைக்கு மழையை நம்பியும்இ சிறுபோக பயிர்ச் செய்கைக்கு நிலத்தடி நீரை (ground water) நம்பியும் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். நீர் வளம் பெறுவதற்கு குறிப்பாக மழைநீர் மட்டுமே யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு பிரதான மூலமாகும். நீரின் முக்கியத்தவம் பல நூற்றாண்டுகளுக்கு முன் உணரப்பட்டதாகும். "ஏரின் உழார் உழவர் புயலென்னும் வாரி வளம் குன்றின் கால்" என்பது குறள் வாக்கு. மழை பொய்ப்பதனால் நீண்ட கால கோடைகாலம் உருவாகி நிலம் விரைவாக சூடேறி காற்றின் வெப்பநிலையை உயர்த்தி பயிர்ச் சூழலை கிடைக்கமுடியாது செய்துவிடுகின்றது. எனவே காலநிலை மாற்றம் என்பது இயல்புநிலை மாறி கிடைக்கும் நீரளவு குறைதலும் மண் வெப்பநிலை உயர்தலும் என வரைவிலக்கணப்படுத்தலாம். இதனைத் தொடர்ந்து நிலத்தடி நீர்ச் சேமிப்பும் அருகிவிடும்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு சராசரியாக வருடமொன்றிற்கு 1200 மி.மீ. மழை வீழ்ச்சி கிடைக்கின்றது. இம் மழைவீழ்ச்சி செப்ரெம்பர் 14 இலிருந்து ஜனவரி 14 வரை அதாவது 4 மாத கால இடைவெளியில் பெறப்படும். கடந்த காலம் இம் மழை 50% வரை பொய்த்துவிட்டது. மிகுதியான மழை பொதுவாக அழி மழையாகவே கிடைக்கலாம். யாழ்ப்பாண மாவட்டத்திற்கு சராசரியாக வெப்பநிலை $27.6^{0}$C ஆக இருப்பதோடு உயர் வெப்பநிலை $33^{0}$C ஆகவே இருந்தது. சூழல் காற்றின் உயர் வெப்பநிலையாக $37^{0}$C வரை உயரமுடியும். இது எதிர்வரும் 3 வருட காலத்தில் $37.7^{0}$C ஆக வருவதற்கு வாய்ப்புண்டு. இவ்வாறு குறுகிய காலத்துள் விரைவான மாற்றங்கள் உணரப்படும் பொழுது காலநிலை மாற்றம் எனலாம்.

**காலநிலைத் தாக்கம் என்றால் என்ன?**

எமது பிரதேச விவசாயத்தில் காலநிலைத் தாக்கம் என்பது போதியளவு நீருடனும் குறைந்த வெப்பநிலையுடனும் எல்லா வகையான வயற் தொழிற்பாடுகளையும் பயிரின் வயதுக்கேற்ப இலகுவாகவும் விரைவாகவும் செய்தல் எனப் பொருள்படும். நிலம் பண்படுத்துவதற்கு தேவையான மண் ஈரப்பதன் பொருத்தமாக அமையவேண்டும். அவ்வாறு இல்லையேல் நிலம் பண்படுத்தல் பிந்திப்போடப்படும். சரியான நேரத்திற்கு பசளை இட முடியாது. பசளை இட்டாலும் தாவரம் உறிஞ்சுவதில் தடங்கல் ஏற்படும். களைகளின் பரம்பலில் கட்டுப்பாடற்ற நிலை காணப்படும். இதனால் பூச்சிநாசினீ பீடைநாசினி உபயோகத்தில் நேர மாற்றம், செறிவு மாற்றம் செய்யப்படுவதுடன்இ சிலவேளைகளில் இவைகளின் உபயோகம் அறவே நீக்கவேண்டிவரும். குறிப்பாக நெல் உற்பத்தியில் மட்டம் வெடிக்கும் காலத்தில் போதிய நீர் இருத்தல் அவசியம். காலநிலைத் தாக்கம் மட்டங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதுடன் தாய்த்தாவரத்தையும் வாடவைக்கும் (wilt) நிலமையையும் தோற்றுவிக்கும். காலநிலைத் தாக்கங்களை அறிவதற்கு பல பயிர்களின் தன்மைகள் கொடுக்கப்பட்டுள்ளது. அவையாவன: நெற்பயிர், மிளகாய், வெங்காயம், உருளைக் கிழங்கு, புகையிலைப் பயிர், மரக்கறிவகை, பழச்செய்கை.

**நெற்பயிர்:** *தற்பொழுது 11,900 கெக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட நெற்பயிரானது கடந்த காலங்களைவிட சற்று குறைவாகவே காணப்படுகிறது. பொதுவாக எமது நெல்மணி உற்பத்தி 4 மாதங்கள் வரை மக்களுக்கு உணவளிக்க போதுமானதாக இருந்தது. இவ் வருடம் காலநிலை சீர் இன்மை காரணமாக 3,000 ஹெக்டர் வரை பயிர்ச் செய் நிலப்பரப்பு குறைவாக இருப்பதுடன் உற்பத்தி வீழ்ச்சியும் நன்கு குறைவாக எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் நெல் உற்பத்தி 3 மாதங்கள் மட்டுமே யாழ்ப்பாண மாவட்டத்திற்கு போதுமானதாக அமையலாம். மேலும், யாழ்ப்பாண மாவட்டத்தின் நெல் உற்பத்தி சராசரியாக 3500 கி.கிஃகெக்டர். தற்பொழுது 1500 கி.கிஃகெக்டராக காணப்படுகின்றது. அதாவது 30 புசல்/ஏக்கர். மக்கள் புதிய நாடு, வெள்ளைப்பச்சை அரிசி, சிவப்புப்பச்சை அரிசி ஆகியவற்றை விரும்புகின்றனர். நெற்பயிர் இரண்டு இலை மட்டத்தில் விரைவான வளர்ச்சியைக் காட்டும். இக் காலகட்டத்தில் வயலில் நீர் தேவையான அளவு இருக்கவேண்டும். இதனால் களைகட்டுப்பாடு, பூச்சி நாசினி தெளிப்பு என்ற இரு முக்கிய வயற் செய்முறைகளும் ஒழுங்காகப் பேணப்பட்டு தரமான பயிரை செழிப்பாக வளர்க்கமுடியும். வயலில் நீர் பற்றாக் குறைவால் நெல் அறுவடையைத் தொடர்ந்து செய்யப்படும் பயிர்களான பயறு, கௌபி, உழுந்து, எள்ளு, என்பன பயிரிடப்படமுடியவில்லை. அதாவது தாய் ஈரம் அற்ற மண் நிலைமையே இதற்குக் காரணம். உயர் வெப்பநிலை, சீரற்ற நீர் வழங்கல் போன்ற காலநிலை மாற்றத்தால் ஈடுசெய்யமுடியாத இழப்பாகக் காணப்படும், விளைச்சல் குறைவு விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கிறது.*

**மிளகாய்:** *மிளகாய்ப் பயிரின் நாற்றுமேடையில் கூட இலைச்சுருளல்* (leaf curl) *நோய் தாக்கியுள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இது வைரசு நோய்த் தொற்றலாக இருப்பினும் காற்றின் உயர் வெப்பநிலையே காரணமாகும். வெப்பநிலை உயர்வால் நீர் பற்றாமை, வரட்சி தோன்றல், தொடர்ச்சியான வாடல், போசணைகளின் பற்றாமை, இலைகளின் பச்சையம் இழப்பு, வளர்ச்சி குன்றல், தாவர நுண் சூழல் இழப்பு, இவைக் கணுவிடை குறைந்து முதிர் பருவதோற்றம் பெறல் போன்ற விரும்பத்தகாத நிலைமைகளைத் தோற்றுவிக்கும். இப் பயிர் 650 கெக்டர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்படுகின்றது. இதன் சராசரி விளைச்சல் 2500 கி.கி ஆகும். புது இன வர்க்கங்கள் ஆறு மாதம் வரை பயன்தரக்கூடியதாக இருப்பது காணப்பட்டுள்ளது. சுதேச பழைய மிளகாய் வர்க்கங்கள் ஒரு வருடம் வரை நின்று பயன்தரக்கூடியதாக உள்ளது. புதிய வர்க்கங்கள் சூழலைத் தாங்கும் வல்லமை அற்று காணப்படுவதனால் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதுடன் சுதேச வர்க்கங்களும் பேணப்படவேண்டும். சுதேச வர்க்கங்கள் உயர் வெப்பநிலையைத் தாங்க வல்லதாக அமைந்துள்ளது. நல்லின வர்க்கங்களின் விளைச்சல் குறைவிற்கு சூழல் உயர் வெப்பநிலையே பிரதான காரணமாகும். இதனால் நீர் பற்றாமை ஏற்பட்டு அது தொடர்பான உற்பத்தியைப் பாதிக்கும் நிலைமை உண்டாகும்.*

**வெங்காயம்:** *யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயிகள் வெங்காய உற்பத்தியில் துறைசார்ந்தவர் களாக இருப்பது உண்மையாகும். இவர்கள் வருடம் பூராகவும் வெங்காயச் செய்கையில் ஈடுபடுகின்றனர். இதனால் தொடர்ந்து பூச்சிகள் பல்கிப் பெருக வாய்ப்பளிப்பதோடு அவற்றைக் கட்டுப்படுத்துவதிலும் விவசாயிகள் பெரும் சிரமப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. வெங்காயம் 1900 ஹெக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்படுவதோடு ஒரு கெக்டருக்கு 15,000 தொடக்கம் 17,000 கி.கி. விளைச்சல் கொடுக்கிறது. பாசன வசதிகள் இருப்பதாலும், இப் பயிர் பற்றிய விவசாயிகளின்*

ஆர்வம் உயர்வாக உள்ளதனாலும் விளைச்சல் கூடுதலாக பேணப்படுகின்றது. கொத்து கொத்தான பயிர் வாடல் நிலை காணப்படுகிறது. இது நடுகை வெங்காயம் தெரிவதில் (mother bulb selection) உள்ள குறைபாடாகும். வேகமாக பறக்கும் பறவைகள் முதிர்பயிர்களின் ஊடு பறந்து விழுவதனாலும் தாள் முறிவதனாலும் இழப்புக்கள் ஏற்படுகின்றது. இப் பயிரில் காலநிலை மாற்றத்தினாலான தாக்கம் குறைவாகவே காணப்படுகின்றது.

**உருளைக் கிழங்கு:** அண்மையில் உருளைக்கிழங்கு உற்பத்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றது. இங்கு 80 கெக்டர் நிலப்பரப்பில் சராசரி விளைச்சலாக 15,000 கி.கி. வரை கிடைக்கின்றது. இருந்தும் சென்ற வருடம் உருளைக்கிழங்கு உற்பத்தி வீழ்ச்சி கண்டது. இப் பயிரின் நடுகைக் காலம் வருடத்தின் நவம்பர் 4 இல் இருந்து டிசம்பர் 4 வரை ஆக காணப்படுகின்றது. இப் பயிரின் வளர்ச்சிக்கு நல்ல பனியுடன் இரவு வெப்பநிலை $22^0$C ஆகவும் பகல் வெப்பநிலை $27^0$C இற்கு உட்பட்டும் இருக்கவேண்டும். குறைந்த மழை வீழ்ச்சியும், சீரற்ற மழை பரம்பலும், நீண்ட உலர் நாட்களும், உயர் வெப்பநிலையும் இப் பயிரின் வளர்ச்சியைப் பாதிக்கும். வெப்பநிலை 22 – $27^0$C வரும்வரை பொறுத்திருந்த விவசாயிகள் நடுகைக் காலத்தைப் பிந்தவிட்டு உற்பத்தி இழப்பை எதிர் நோக்கினர். நடுகைக் காலம் பிந்துவதனால் பங்கசுத் தாக்கம் விரைவுபடுத்தப்படும். காலநிலை மாற்றம் இப் பயிரின் உற்பத்தியைப் பெரிதும் பாதிக்கும்.

**புகையிலைப் பயிர்:** புகையிலைப் பயிர் பல வகைப்பட்ட நோய்களுக்கு மருந்தாக அமைவதோடு 22 நோய்களுக்கு நோய் நிவாரணியாகக் காணப்படுகின்றது. ஆண்டிற்கு 1909 முன்பாக அதாவது ஆங்கில வைத்திய முறைகள் கையாள முன் இற்றைக்கு பல நுற்றாண்டு காலமாக கை வந்த வைத்தியமே கண்கண்ட தெய்வம். 1602 இல் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட இச் செடி எம் முன்னோரை நன்கு வாழவைத்தது. கரும் தங்கம் (black gold) என அழைக்கப்பட்ட புகையிலைச் செடி பாவனைக்கு உகந்த தல்ல என அரசாங்கம் தடைசெய்துள்ளது. இத் தனிச்செடி யாழ்ப்பாண விவசாயமக்களுக்கு தனியாக நின்று 20% வருமானத்தைக் கொடுக்கின்றது. இப் பயிர் 460 கெக்டர் நிலப்பரப்பில் நடப்பட்டு கெக்டருக்கு 5000 கி.கி. பச்சை இலையை அறுவடையாகக் கொடுக்கும். யாழ் மாவட்டத்தில் காணப்படும் 30,000 கூலித்தொழிலாளர்களின் வாழ்வை நலமாக்குகின்றது. புகையிலை உண்பதனால் புற்றுநோய் வரலாம் என்பதில் எவ்வித உண்மையும் இல்லை. மக்களின் வறுமையும், அவர்களின் அறியாமையும்தான் இக் கருத்தை உண்மைப் படுத்துகின்றது. அதிக நேரம் மெல்லப்படும் புகையிலையுடன் சேர்ந்த சுண்ணாம்பு வாய்க்குள் கீறல்களை உருவாக்குவதனால் நாளடைவில் நோய் தோன்ற வாய்ப்புண்டு. புகையிலை தொடர்பான அறுவடைக்குப் பின்னாலான தொழில் நுட்பம் எமது முன்னோர்களால் சுய ஆய்வின் மூலம் (trail and error method) கண்டு பிடிக்கப்பட்டது. வரும் கால சந்ததிகள் புகையிலை உற்பத்தியில் நாட்டம் குறைவாக இருப்பதனால் எமது தொழில் நுட்பம் எம்மை விட்டு அகன்றுவிடும். விவசாயம் தெரியாதவர்கள் விவசாயிகட்கு அறிவுரை சொல்வதைக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

புகையிலைப் பயிர் நன்கு வளரும் பொழுது 100 நாட்களில் 100 செ.மீ உயரம் காட்டும். இதில் தளம்பல் காணப்படும் பொழுது அதாவது உயரம் குறைவாகக் காணப்படின் மண், நீர், பராமரிப்பு, சூழல், காலநிலைக் காரணிகள் என்பவற்றில் ஒன்று அல்லது பல காரணமாகலாம். குறிப்பாக இலைச்சுருளல் நோய், காட்டெரிவு, இலை ஓடல் போன்ற

நோய்கள் தோன்றுவதற்கு காலநிலைக் காரணியான உயர் வெப்பநிலையே முதன்மைக் காரணியாக அமைந்துள்ளது.

**மரக்கறிவகை:** மரக்கறிவகை யாழ்ப்பாண மாவட்டத்தில் 1800 கெக்டர் நிலப்பரப்பில் ஏற்ற நீர்ப்பாசனத்தின் கீழ் முறையாக பயிர் செய்யப்படுகின்றது. விரைவான மண் உலர்ச்சி தாவரங்களில் போசணைப் பற்றாக் குறையைக் (lack of nutrition) காட்டுகின்றது. இருந்தும் தற்பொழுது தக்காளி, கத்தரி போன்ற பயிர்கள் உயர் உற்பத்தியையும், மிகக் குறைந்த வருமானத்தையும் காட்டுவது, விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தியில் பெரு நாட்டத்தைக் காட்டவில்லை. மரக்கறிவகை உற்பத்தி காலபோக பயிர்ச்செய்கையாக இருப்பதனால் சூழல்இ காலநிலை என்பன இதன் உற்பத்தியைப் பெரிதும் பாதிக்கும்.


**பழச்செய்கை:** தென்னை, மாமரம், பலா போன்ற பெரு மரங்கள் அங்கும் இங்குமாக பல இடங்களிலும் உயிரற்று காணப்படுகின்றது. இதற்கு சீரற்ற காலநிலையே காரணம். மேலும் பப்பாசி, ( 40 கெக்டர்) வாழைமரம், (960 கெக்டர்) முந்திரிகை, (104 கெக்டர்) பூச்செடிகளான செவ்வரத்தை, குரோட்டன், நித்திய கல்யாணி போன்ற தாவரங்கள் பால்பூச்சியின் தாக்கத்தக்கு உட்பட்டுள்ளது. சூழல் தரக்குறைவால் (environmental degradation) பாதுகாப்புத்தேடி அத்துடன் உணவுக்காகவும் பால்பூச்சிகள் மரஞ்செடிகளைத் தாக்குகின்றன. காலநிலை மாற்றத்தினாலான நீர் பற்றாமை, வெப்பநிலை உயர்வு என்பன பூச்சிகள் தாவரங்களைத் தாக்க காரணமாகின்றது.


தென்னைமரம் நீர் பற்றாமை, உயர் வெப்பநிலை போன்ற புறக் காரணிகளால் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு தென்னை மரத்தில் அதன் பூந்துணர் உற்பத்தியாகி இரண்டு வருடங்களின் பின்பே தேங்காய் பிடுங்கப்படுகின்றது. அதாவது ஒரு தேங்காயின் வயது இரண்டு வருடங்கள். தென்னம்பூ மலர்ந்ததும் உருவாகும் தேங்காய் இளநீராகி முற்றிப் பழுக்க ஒரு வருடகாலம் செல்லும். சாதாரண மரத்தில் தென்னம் குலை ஆகக் குறைந்தது 5 காயாவது இருக்கவேண்டும். சில குலைகளில் 22 இளநீர் கூட காணப்படுகின்றது. தற்பொழுது தென்னை மரங்கள் குறைந்த எண்ணிக்கையான இளநீருடன் காணப்படுவது நீண்டகால வரட்சியையும் உயர் சூழல் வெப்பநிலையையும் காட்டுகின்றது. இத் தோற்றப்பாடு காலநிலை மாற்றத்தை இலகுவாக விளங்குவதோடு வரும் காலத்திலும் இத் தோற்றப்பாடு நிலவ முடியும் என்பதையும் விளக்கி நிற்கின்றது.

ஒட்டுமொத்த தோற்றப்பாடுகளை அவதானிக்கும் பொழுது மழைவீழ்ச்சிக் குறைவால் நிலத்தடி நீர் வற்றி வருவதுடன் மண்ணின் உயர் வெப்பநிலை 53$^{0}$C இற்கு மேலாகவும்இ சூழல் காற்றின் வெப்பநிலை 34$^{0}$C இற்கு மேலாகவும் வரும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றது. விவசாயப் பயிர் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்வதோடு விவசாயிகள் இச் சூழலை தாங்கி எவ்வாறு வாழமுடியும் என்ற ஆய்வுதான் முன் நிற்கின்றது. அவர்கள் தொழில் புரிவது எப்படி? அவர்களின் உடன் தேவை என்ன? அவர்கள் விவசாயத்தை விட்டு விலகுவது ஏன்? இளம் சந்ததிகள் விவசாய நாட்டம் அற்றவர்களாக வந்து கொண்டிருப்பதன் காரணம் என்ன? அவர்களின் எதிர்பார்ப்புக்கள் என்ன? விவசாய உபகரணங்கள் பற்றாமை ஒரு காரணமாகுமா? விவசாய விற்பன்னர்கள் பற்றாமையா? அறிவுறுத்துவோர் அறிவு ...?? தாங்கு விவசாயம் (sustainable agriculture) விவசாய அபிவிருத்தியைக் கொடுக்கமாட்டாது. பூரணமான விவசாய அறிவாற்றல் உள்ளவர்கள் விவசாயிகட்கு அறிவுரை வழங்கும் பொழுது விவசாயிகள் என்ன செய்யலாம் என்பதை அனுபவ அறிவாற்றல் மூலமாக மட்டுமே தெளிவுபடுத்துகின்றனர் யாரும் விவசாயம் செய்யலாம் என்று பலரும் அறிவுரை வழங்கும் தன்மை நிறுத்தப்படவேண்டும். தம்பி ஏறிய

குதிரையில் சக்கடத்தாரும் ஏறி சறுக்கி விழுந்த கதையை பல இடங்களில் பார்த்து வைக்கோல் பட்டடை. மிருகமாகாது சமூகத்திற்கு பிழையானவற்றை கூறாது விடுவதே விவசாயிகட்கும் எமது பிற்சந்ததிகட்கும் நல்லது.

விவசாயிகள் காலநிலை மாற்றத்தை எவ்வாறு எதிர்கொள்ள முடியும்? விவசாயிகளின் ஆற்றல், சிந்தனை, இளம் விவசாயிகளின் சிந்தனை தொழிற்திறன் போக்கு, விரிவாக்க உத்தியோகத்தர்களின் பங்களிப்பு தொழில்நுட்ப உயர்திறன் போதனாசிரியர்களின் தொழில் சார்திறன், விவசாயக் கல்விசார் வல்லுனர்களின் எதிர்வுகூறல், கலாசாலை உத்தியோகத்தர்கள் பங்களிப்பு, தொழில்நுட்ப பிரிவு கற்கைநெறி மாணவர்களின் அறிவூட்டல் பங்களிப்பு என்பவற்றின் கூட்டு முயற்சியே இன்றைய தேவையாக இருக்கின்றது. மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திக்கும், கைத்தொழில் வளர்ச்சிக்கும் சூழல் தாக்கமின்மைக்கும் விவசாயிகட்கு நிரந்தர வருமானம் கிடைக்கக்கூடியதாகவும், தொடர்ந்து பல சந்ததிகள் பயன்பெறக்கூடியதாகவும், உகந்த பெரும்தோட்ட தாவரமாகவும் அமையக்கூடிய வகையில் விவசாயம் அமையவேண்டும். இதற்கான சிறந்த தாவரம் பேரீச்சம் பழ மரமாகும். இம் மரத்திற்கான பொருத்தமான சூழல் காரணிகள் இருப்பதாலும், இழைய விருத்தி (tissue culture) செய்யக்கூடிய தொழில் நுட்பம் இருப்பதாலும் எமது மக்கள் இம் முயற்சியில் ஈடுபடுவது பாராட்டுதற்குரியது. இழைய விருத்தி மூலம் 4 வருடத்தில் ஒரு மரத்திலிருந்து ஒரு போகத்தில் 8 கி.கி. பேரீச்சம் பழம் பெறமுடியும். இதனைப் பதனிடுவதனால் ரூபா 10,000/- வரை பெறமுடியும். வடக்கு மாகாணத்தின் வலுவுடன் பல பெருந்தோட்டங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைக்கப்பட்டு ஆய்வு நிலையங்கள் போடப்பட்டு மக்களை ஊக்குவித்தால் ஒரு சந்ததி இடைவெளியில் 20 பேரீச்சம் பழ பெருந்தோட்டங்களை உருவாக்கிவிடலாம் என்பது எனது அனுபவ அறிவின் வெளிப்பாடு. இதற்கான உந்து சக்தியை எமது அரசாங்கமும் வடக்கு மாகாணசபையும் முன் எடுத்துச் செலலும் என்றும் விவசாய மக்கள் செழிப்பாக வளர்ந்து உயர்ந்து நெருக்கடிகள் அற்று வாழ விவசாய பெருமக்கள் சார்பாக வாழ்த்துகின்றேன்.





# பாரதி - ஒரு பன்முக ஆளுமை

**கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன்**
முதுநிலை விரிவுரையாளர்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

தமிழிலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பெருங் கவிஞராகக் கருதப்படுகிறவர், பாரதியார். கவிச்சக்கரவர்த்தி என்ற விருதுப்பெயருக்குரியவராகக் கம்பர் கருதப்படுவது போல, மகாகவி என்ற விருதுப்பெயருக்குரியவராக பாரதியாரே தமிழ்நாட்டிற் கொள்ளப்படுகிறார். எனினும், இத் தகுதிப்பாட்டைப் பாரதியாருக்குத் தமிழ்நாட்டுக் கல்வியுலகு மிக இலகுவாக வழங்கிவிடவில்லை. பாரதியாரின் மறைவைத் தொடர்ந்து, அவர் மகாகவியா? இல்லையா? என்பது குறித்த நீண்ட சர்ச்சை நடைபெற்றது. தமிழ்நாட்டில் அப்போது புகழ்பெற்றிருந்த கல்விமான்கள், இலக்கியவாதிகள் உள்ளிட்ட பலரும் இவ்விவாதத்திற் கலந்து கொண்டனர்.

ஆரம்பத்திலே பாரதியாரை ஒரு தேசபக்திக் கவிஞராகக் கொள்ளுகின்ற மனப்பாங்கு மட்டுமே காணப்பெற்றது. "பாரதியார் நல்ல கவிஞர்தாம். ஆனால் ஷேக்ஸ்பியர், தாகூர் ஆகியோர் வரிசையில் வைக்கத்தக்க மகாகவிஞர் அல்லர்" எனக் 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட சிலர் கருத்துத் தெரிவித்தனர். இல்லை அவர்களோடு ஒப்பிடத்தக்க - ஏன்? சில போக்குகளில் அவர்களை விடவும் முதன்மை பெறத்தக்க மகாகவிஞரே பாரதியார்" என்று வ.ரா.உள்ளிட்ட சிலர் கருத்துத் தெரிவித்தனர். இந்நிலையில், கு.ப.ராஜகோபாலன், 'சிட்டி' பெ.கோ.சுந்தரராஜன் ஆகிய இருவரும் இணைந்து பாரதியாரின் கவித்துவ முக்கியத்துவத்தை நிலைநிறுத்தவென 'கண்ணன் என்கவி' என்னும் நூலை வெளியிட்டனர். இந்நூலின் மூலம்,

> "நசித்துப்போய் விடும்போலிருந்த ஒரு பாஷைக்குப் புத்துயிரளித்து
> பட்டுப்போன கவிதாமரம் மீண்டும் தளிர்த்துப் பச்சைப் பசேலென்ற
> இலைகளுடன் பல நிறப் புஷ்பங்களோடு இலக்கியச் சோலையில்
> ஓங்கி வளரும்படிச்செய்த பாரதிதான் நமது பெரிய கவி."

என அவர்கள் நிறுவினர்.

இதன் பின்பு பாரதியின் இலக்கியப் பணிகள் குறித்தும் அவரது கவித்துவ ஆளுமை குறித்தும் பல விமர்சனநூல்கள் தொடர்ச்சியாக வெளிவந்தன. பாரதியாரின் படைப்புக் குறித்த பணிகளை மட்டுமே பிரதான வாழ்க்கை நோக்காகக் கொண்ட பாரதியியல் அறிஞர்கள் பலர் தோற்றம் பெற்றனர். வெளிவராத பாரதி படைப்புகள் பலவும் நூலுருப் பெற்றன. இத்தகைய காரணங்களால் இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் சந்தேகத்திற்கிடமின்றிப் பாரதியார் மகாகவிதாம் என ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம், பாரதியின் சமகாலத்தில் அவருடைய முக்கியத்துவம் உணரப்படவில்லை என்பது கருத்தாகாது. சிலர் அவர் சமகாலத்திலேயே கவிஞருடைய உன்னதத் திறமையை உணர்ந்து கொண்டிருந்துள்ளனர். "எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின் இவர் பாடல்களைத் தமிழ்நாட்டு மாதர்களும், புருஷர்களும் மிகுந்த இன்பத்துடன் படித்துக் களிப்படையும் காட்சியை யான் இப்பொழுதே காண்கிறேன்" எனப் பாரதியின் சம காலத்தவரான பரலி நெல்லையப்பபிள்ளை மிகுந்த நம்பிக்கையுணர்ச்சியோடு பாரதியின் நூல் ஒன்றின் முன்னுரையிற் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு வ.வே.சு.ஐயர் முதலிய பலரும் பாரதியின் கவிதா ஆற்றலை உள்ளவாறு உணர்ந்திருந்தனரெனினும், அனைத்துப் பொதுமக்களும் அறியும்படியாகப் பாரதியின் புகழ் பரவலடைந்தது கடந்த நூற்றாண்டின் பின் அரைப்பகுதியிலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதியாராற் பெரிதும் போற்றப்பெற்ற கம்பர், வள்ளுவர், இளங்கோ ஆகிய முப்பெருந் தமிழ்க் கவிஞர்கள் வரிசையில் அடுத்து பாரதியாருக்கு இடம் வழங்க இன்று எவருந் தயங்குவதில்லை. தமிழ்நாட்டின் எல்லை கடந்து பாரததேசம் என்னும் பெரியபரப்புள் சிறந்த மகாகவிகளாகக் கொள்ளப்படுகின்ற வான்மீகி, காளிதாசர் ஆகிய இருவருடனும் ஒருங்கு வைத்து எண்ணப்படுகின்ற உயர்நிலை கூடப் பின்பு பாரதிக்கு வாய்த்திருக்கிறது. பாரதி மகாகவியா என்பது குறித்த வாதம் தமிழ்நாட்டில் இடம்பெறுவதற்கு முன்பாகவே பாரதி ஒரு மகாகவிதான் என உறுதிபடத் தெரிவித்து வந்த விபுலானந்தர், சிறந்த கவிவாணராகவும் உத்தமதேசாபிமானியாகவும் கவிஞரை அடையாளங்கண்டு குறித்திருந்தார். அந்தளவுக்குத் தமிழ்க்கவிதை வரலாற்றில் பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறையே தோற்றங்கொள்கின்ற மாபெரும் கவிதா ஆளுமைகளுள் ஒருவராகப் பாரதி இனங்காணப்பட்டு பின்பு போற்றப்படலானார்.

இவ்வாறு மகாகவியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பாரதியார் தமிழிலக்கிய வரலாற்றில் எவ்வகையில் முக்கியத்துவமுடையவராகிறார் என்பது ஆராயப்பட வேண்டிய அவசியமான வினாவாகும். இதற்கு விடைகாண முற்படும்போது, பாரதியார் பெற்றுள்ள முக்கியத்துவத்திற்கான பிரதான காரணங்களை இனங் கண்டுகொள்ள முடியும். இவ்விடயம் குறித்து ஆராய்ந்த பாரதியின் கவிதைகளில் ஈடுபாடு கொண்டுள்ள அறிஞர்கள் பலரும் பல்வேறு காரணங்களைச் சுட்டியுள்ளனர். அவற்றுள் முக்கியமான சிலவற்றைத் தொடர்ச்சியாக எடுத்துநோக்குவதனூடு, பாரதியுடைய இலக்கிய முக்கியத்துவத்தை இலகுவாக அறிந்து கொள்ள முடியும்.

முதலில், பாரதியாருடைய சமகாலத்தவரும் நெருங்கிய நண்பரும் தமிழின் முதலாவது திறனாய்வாளரெனக் கொள்ளப்படுபவருமான வ.வே.சு.ஐயர் இது குறித்துத் தெரிவித்துள்ள காரணங்களை நோக்கலாம். பாரதியிடம் புதியவழி தோன்றுவதற்கான காரணங்களை ஆராய்ந்தஐயர், அவரிடம் இயற்கையாகவே நிரம்பியிருந்த கவித்துவம்,

பழைய காவியங்களில் அவருக்கிருந்த பரிச்சயம், புதிய கல்வியின் வேகம், அவர் காலத்தில் பாரததேசத்தில் புதிதாகத் தோன்றியிருந்த ஜீவோதயம் ஆகியனவே பாரதியிடம் தமிழ்க்கவிதையின் புதியவழி தொடங்குவதற்குக் காரணங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

பாரதியாரை மகாகவிதாம் என நிறுவ ஆரம்ப முயற்சிகள் எடுத்துக்கொண்ட வ.ரா., தாம் அவ்வாறு நிறுவுவதற்காக எடுத்துக் கூறியுள்ள காரணங்களை அடுத்து நோக்குவது பயனுடைத்தாகும். கல்கியுடனான இலக்கியச் சர்ச்சையில் வ.ரா எடுத்துத் தெரிவித்துள்ள காரணங்களுள் பிரதானமான நான்கை வ.ரா.வின் சமகால இலக்கியத் தோழரான சி.சு.செல்லப்பா தமது கட்டுரையொன்றில் எடுத்துக் காட்டியுள்ளார். விரிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள அக்காரணங்களைப் பின்வருமாறு சுருக்கமாகக் காணலாம்.

1. பண்டிதர்களால் இறக்குந் தறுவாயில் இருந்த தமிழ்மொழியைக் காப்பாற்றி மக்களை மயக்கத்திலிருந்து எழுப்பியமை.

2. மறைந்து கிடக்கும் உயிர்வாழ்வின் தோற்றங்களை மனக்கண்ணாற் கண் படைப்புகளூடு வெளிப்படுத்தியமை.

3. படைப்பின் பேருண்மையைச் சொற்களில் சித்தரித்துக் காட்டியமை.
(உ-ம் : "ஊழிக்கூத்து", : கண்ணம்மா என் காதலி", "யோகம்)

4. நவரசங்களையும் தக்க விகிதத்தில் கலந்து படைப்பியற்றியமை.

பாரதி குறித்த முதலாவது திறனாய்வு நூலின் ஆசிரியர்களுள் ஒருவரான சிட்டி பெ.கோ.சுந்தரராஜன் தமது கட்டுரையில் பாரதியின் முக்கியத்துவத்திற்குப் பல காரணங்களைத் தெரிவித்துள்ளாரெனினும் அவற்றுள், அசரீரமான மானஸீக உணர்ச்சியைச் சித்திரித்தமை, உணர்ச்சிச் சித்திரிப்பை நவரஸ வெளிப்பாடுகளால் சிறப்புச் செய்தமை, வாழ்க்கைக் கஷ்டங்களால் தாம் துன்பப்பட்டபோதும் பொதுமக்களிடையே உணர்ச்சியைப் பரப்பியமை, தமிழ் இன்பத்தைப் பண்டிதர் மாத்திரமல்லாமல் பாமரரும் ரஸிக்கும் வண்ணம் கவியியற்றியமை ஆகிய நான்கையும் பிரதானமானவையாகக் கொள்ளலாம்.

பாரதியியல் ஆய்வுகளைப் பொதுவுடைமைக் கண்ணோட்டத்தில் நோக்கிய விமர்சகர் க.கைலாசபதி பாரதியை மகாகவியாகவும் மாபெரும் புரட்சியாளனாகவும் கொள்வதற்கு இலக்கியத்தின் இயக்கவியலை உள்ளுணர்வாகத் தெரிந்துகொண்டவராகப் பாரதி விளங்கியமை, சமுதாயப் பிரச்சினைகளையும், கலை இலக்கியத் தத்துவப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குக் காலவுணர்வோடு உதவியமை, சமகால விஷயங்களை எளிமையாக வெளிப்படுத்தியமை முதலிய சில காரணங்களைச் சுட்டிக்காட்டுகிறார்.


இவ்வாறு, விமர்சகர்களும் கல்வியாளர்களும் சுட்டுகின்ற காரணங்கள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க முன்மொழிவுகளே. இவர்கள், தமிழிலக்கிய வரலாற்றில் கவிஞர் பெற்றுவிட்டிருக்கின்ற மிக முக்கியமான இலக்கிய ஸ்தானத்திற்கான காரணங்களை ஏதோவொரு வகையில் தாம் தாம் பிரதானமாகக் கொண்டுள்ள கருத்தியல் அடிப்படையில் வரையறுக்க முயற்சித்துள்ளார்.

இக்கருத்துக்களை அவதானிப்பதன் மூலம் ஒரு தனிப்பட்ட வரையறைக்குள் அடக்கப்பட்டுவிட முடியாத பன்முகத்தன்மை கொண்ட பாரதியாருடைய கவிதா ஆளுமை தமிழ்க்கவிதைப் போக்கைப் புதிய திசையில் செலுத்தியது என்பதை அறிந்துகொள்ள

முடியும். தாம் எடுத்துக்கொண்ட ஒற்றைக் கொள்கையை மட்டுமே முன்னிறுத்திக் கண்மூடித்தனமாக ஒரே தடத்தில் இயங்கிவந்த கவிஞர் பாதையிலிருந்து பாரதியார் வேறுபட்டு, ஆரோக்கியமான பல கருததியல்களின் வெற்றிகரமான இணைவாக விளங்கினர். பல திசைப்பட்ட பன்முகப்பட்ட பேராற்றல்களதும் பார்வைகளதும் சங்கமமாக விளங்கியமையே பாரதியின் முக்கியத்துவத்திற்குப் பிரதானகாரணமென்பதை அறிந்து கொள்ளலாம்.

**அடிக்குறிப்புக்கள் :**

1. செல்லப்பா, சி.சு.,(1981) "பின்னணி", கண்ணன் என் கவி, சென்னை: பூங்கொடி பதிப்பகம். பக் 160-163
2. மேலது. பக் 160-163
3. சுந்தரராஜன், பெ.கோ., (1981), "பாரதியின் இலக்கியபீடம்", கண்ணன் என் கவி, சென்னை : பூங்கொடி பதிப்பகம். ப.155
4. பார்க்க : குருசாமி. ம.ரா.போ.(ப.ஆ.). (2001), பாரதி பாடல்கள் - ஆய்வுப்பதிப்பு, தஞ்சாவூர் : தமிழ்ப்பல்கலைக்கழகம். ப.1049.
5. சுந்தரராஜன், பெ.கோ., மு.கு.நூ. ப.79
6. சிவசுப்பிரமணியம், வ., (1993), "பாரதி புகழ் பரப்பிய முன்னோடி", விபுலானந்த தரிசனம், மட்டக்களப்பு : மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை, பக். 45, 48
7. பார்க்க : மணி, பெ.சு., (1995), "பாரதியார் படைத்த புதிய மரபு," தமிழ்ப்புலவர் மரபும் பாரதிமரபும், சென்னை : பூங்கொடி பதிப்பகம். ப.65
8. செல்லப்பா, சி.சு., மு.கு.நூ. பக். 164, 165
9. சுந்தரராஜன், பெ.கோ., மு.கு.நூ. பக். 87, 141, 151
10. கைலாசபதி, க., (2002), பாரதி ஆய்வுகள், சென்னை : குமரன் பப்ளிசர்ஸ். பக்.55, 236, 241



# தமிழ்மொழி கற்பித்தலும் - மொழித்திறன் விருத்தியும் சமகால நெருக்கடிகள் குறித்த ஓர் உசாவல்

**வேல் நந்தகுமார்**
தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர்,
துணுக்காய்வலயம், ஒட்டிசுட்டான் கோட்டம்.

ஒரு இனத்தினது பண்பாட்டு அடையாளங்களில் மிக முக்கியமானது மொழியாகும். மொழியைச் சமூக நிறுவனம் என்ற முறையில் நோக்கும் போது முழுச்சமூகத்தினதும் தொடர்பு வாயிலாக அமைகிறது எனப் பேராசிரியர் கா.சிவத்தம்பியவர்கள் குறிப்பிட்டுள்ளார். மொழி என்பது அகத்தூண்டலுக்கும், புறத்தூண்டலுக்கும் அப்பாற்பட்டு மனித மனத்திலேயே வளர்கிறது என்கிறார் டெகார்த்தா. ஒரு தனிப்பட்ட மனிதனையும் சமுதாயத்தையும் இணைக்கின்ற பாலமாக இருப்பது மொழியாகும். அத்துடன் இது மனிதர்களின் தனி அடையாளங்கள். கலாசாரம், விழுமியங்கள், வாழ்வு முறை என்பவற்றின் அடையாளமாகவும் குறியீடாகவும் அமைந்துள்ளது. இந்த வகையில் இலக்கண, இலக்கிய ரீதியான மிகத் தொன்மைச் சிறப்புக்கொண்ட செம்மொழியாகிய தமிழ்மொழியை நாம் எம் தாய்மொழியாகக் கொண்டுள்ளோம் எனப் பழம் பெருமைவேரில் நின்று நாம் பெருமைப்பட்டுக் கொண்டாலும் நடைமுறையதார்த்தத்தில், அதன் பிரயோக நிலையில், திறன் நிலையில், சந்ததி தாண்டிக் கடதப்படும் நிலையில் தமிழ்ப்பாட கற்றல் - கற்பித்தல் நிலையில் இன்று எமது தமிழ்மொழி மிகப் பெரிய சவால்களைச் சந்திக்கின்றதோ என எண்ணும் படியான காட்சிகளையே எமது மொழிச் சூழலில் நாம் தரிசிக்க முடிகின்றது.

தமிழ்மொழியின் சமகாலப் பிரயோகத்திறனை நோக்கும் போது பிரயோக நிலையில் தமிழ் தன்திறனை தலைமுறை தாண்டி இழந்து வருகிறதோ என எண்ணத் தோன்றுகிறது. எமது தமிழ் மொழியை எதிர்மறைச் சிந்தனைக்கு உட்படுத்துவதாக எண்ணக்கூடாது. பல ஆரோக்கியமான விடயங்களும் எமது மொழிச்சூழலில் நிகழ்ந்த வண்ணம் தான் இருக்கின்றன. கல்வித்திணைக்கள ரீதியாக மாகாணக் கல்வித் திணைக்களம் தனித்தும் தேசிய கல்வி நிறுவனத்துடன் இணைந்தும் துறைசார் பல்கலைக்கழக வளவாளர்களையும் ஒன்றிணைத்து பல்வேறுபட்ட செயற்பாடுகளை, ஆசிரியர்களுக்கு

செய்கின்ற போதும் கூட மாணவ மையமாகச் சிந்திக்கின்ற பொழுது இவ்வாறாக எண்ண வைக்கக்கூடிய விளைவுகளையே எம்மால் சம காலத்தில் தரிசிக்க முடிகிறது. இன்றைய நிலையில் நாம் எமது தாய்மொழியை அதன் இருப்பை ஒரு மும்மொழிச் சூழலுக்குள் தக்கவைக்க வேண்டியிருப்பதுடன் உலகமயமாக்கம், ஆங்கிலமயமாக்கம், பிறமொழிக்கலப்பு, கருவிமயமாக்கம் என்ற சர்வதேச நிலைகளில் இருந்து எமது தாய்மொழியை காக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

எமது தமிழ்மொழியானது பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என்ற இருவழக்குப் பண்புகளைக் கொண்டதாக விளங்குவதுடன் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து எனப் பல்வேறுபட்ட திறன்களை தேர்ச்சிகளைக் கொண்டதாகவும் விளங்குகிறது. இவை அடிப்படையில் எமது மொழியின் பிரயோகத்திறன் சார்ந்தவையாகவே அமைகின்றன. இத் திறன் விருத்தியினூடாக எமது தாய்மொழி ஆற்றலை மேம்படுத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் தமிழ்ப்பாட ஆசிரியர்களுக்கு உரியதாகின்றது. ஆனால் இத்தகைய மொழித்திறன்களை தலைமுறை தாண்டித் தொற்ற வைப்பதில் இன்றைய தமிழ்ப்பாட ஆசிரியம் தடுமாறுவதாகவே தெரிகின்றது. இதற்கான முற்றுமுழுதான பொறுப்பை தமிழ்ப்பாட ஆசிரியர்களில் மட்டும் சுமத்தி விட முடியாது. எமது தாய்மொழி அனுபவத்தை திறன்களை தொற்ற வைப்பதில் பலருக்கும் பங்குண்டு. அவை குழப்பத்துக்குள்ளாகும் போதே இது பிரச்சினைக்குரியதாக மாறுகிறது. தமிழில் அளவுக்கு அதிகமாக கலந்து வரும் பிறமொழிக்கலப்பும், கணனி, இணையம், கைத்தொலைபேசி முதலிய கருவித்தொடர் பாடல் மொழிக்கு அடிமையாயிருக்கின்ற தன்மையும், அவற்றிலும் பிரயோக நிலையில் தமிழைவிட ஆங்கிலமே அதிக செல்வாக்குச் செலுத்துவதும், சினிமா மோகமும் தமிழ் மொழித்திறன் விருத்திக்கான பெரும் சவால்களாக சம காலத்தில் அமைந்து விளங்குகின்றன.

தமிழ்மொழியின் அடிப்படைத் திறன்களை மாணவரிடம் விருத்தியாக்குவதிலே பாலர் கல்வி, ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு முதன்மையான பங்கு உண்டு. அவர்களால் சரியான முறையில் இடப்படும் மொழித்திறன் அடிப்படை அத்திவாரமே தொடர் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் அமைகிறது. இன்று தமிழ் மாணவர்களிடம் அதிகரித்துக் காணப்படும் தமிழ் எழுத்துப் பிழைகள், உறுப்பமைய எழுதாமை, அடிப்படை வசனப்பிழைகள், வினாவுக்கேற்ப விடை எழுதாமை, லகர, ளகர, ழகர, றகர, ரகர, ணகர, நகரப் பேதப் பிரச்சினைகள் எழுத, வாசிக்கத் தெரியாத நிலை போன்றவற்றில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கே மிக அதிகப் பொறுப்பு உண்டு. அத்துடன் வீட்டில் கல்வியை, மொழி விருத்தியை கண்காணித்து வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கும் உண்டு. குழந்தையின் மழலை இன்பத்துக்காக தவறான உச்சரிப்புக்களை ஊக்கப்படுத்தக்கூடாது. இது தொடர் செயற்பாடாக நிகழ்த்தப்பட வேண்டியதொன்று. ஆனால் துரதிஸ்டவசமாக இன்று பந்தயக் குதிரைகளாக பிள்ளைகளைக் கருதும் பெற்றோர் புலமைப்பரிசில் பரீட்சை சித்தியை மையமாகக் கொண்டு அளவுக்கு அதிகமான நிலையில் படிமுறையற்ற ஒரு திணிப்பாக தாய்மொழிக் கற்றல் - கற்பித்தல் நிகழ்வது வேதனைக்குரியதாகும்.

புலமைப்பரிசில் பரீட்சை முடிந்தவுடன் அவனது தாய் மொழி விருத்தி கைவிடப்படுகிறது. இதே போல ஆங்கில மொழி மூலத்தின் ஏனைய பாடங்களை கற்கும் மாணவர்கள் சிலரிடமும் தமிழ் மொழிப்பாடத்தில் வீழ்ச்சியை அவதானிக்க முடிகிறது. இதுவும் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். கேள்விக்கு விடையெழுதுபவர்களாக மட்டுமே தமிழ்பாட மாணவர்கள் வழிநடத்தப்படுவதால் அவர்களிடம் மொழிசார்


திறன்களை தொற்ற வைப்பது சவாலாக உள்ளது. கற்றலின் இறுதி இலக்கு பரீட்சை மையமாகவே அமைவதால் பரந்த வாசிப்புத்தேடல் அனுபவம், படைப்பாக்க அனுபவம், பங்குபற்றல் அனுபவம், கேட்டல் அனுபவம், பேச்சாற்றல் அனுபவம் போன்றன இழக்கப்படுகின்றன. இதனால் வெறும் புத்தகப் பூச்சியான ஒரு தலைமுறையையே நாம் உருவாக்குகின்றோம். இதுவே தமிழ்ப்பாட பெறுபேற்றின் வீழ்ச்சிக்கும் காரணமாய் அமைந்து விடுகின்றது. எதிர்பார்ப்பு வினாக்களோடு கற்றலை மட்டுப்படுத்தி, தெரிவு செய்து படித்து தமிழில் சித்தி பெறலாம் என ஒரு தலைமுறை தவறாக எண்ணுவதற்கும் தனியார் கல்வி நிலையம் சார் இத்தகைய மொழிசார் கற்பித்தலே காரணமாய் அமைந்து அதிர்ச்சியூட்டக்கூடிய பெறுபேறுகள் தமிழ்மொழிப் பாடத்தில் கிடைப்பதற்கும் வழி ஏற்பட்டு விடுகிறது. அண்மையில் வெளி வந்த க.பொ.த.உயர்தர, சாதாரணதர தமிழ்மொழிப் பாடபெறுபேறுகள் இதற்குத்தக்க சான்றுகளாய் விளங்குகின்றன. இதேவேளை திட்டமிட்ட, பயிற்சிசார், சிறப்பான மொழிசார் செயற்பாடுகளால் சிறந்த பெறுபேறு பெற்றவர்களும் உண்டு என்பதையும் நாம் மறுக்க முடியாது. இது விடயத்தில் வடமாகாணம் பல பயிற்சிப் பரீட்சைகளை, முன்னோடி பரீட்சைகளை நடத்தியுள்ளது. இப்போதும் நடத்தி வருகின்றது என்பதையும் மறுக்க முடியாது.


பாடசாலைகளில் தற்போது நடைமுறையில் உள்ள முறைசார், முறைசாரா இணைக்கலைத்திட்டங்கள் ஊடாக பல்வேறுபட்ட வகையில் எமது தாய் மொழிக் கற்பித்தலை வடிவமைப்பதன் மூலம் மாணவரிடம் மொழித்திறன் விருத்தியை ஏற்படுத்த முடியும். முன் அறிவு மீட்டல், காட்சிப்படுத்தல், உபகரணப் பயன்பாடு, தர உள்ளீட்டுக் கையாளுகை, மாணவர் குழுச் செயற்பாடும், வெளிப்பாடும், ஆசிரியரின் மதிப்பீடும் பின்னூட்டலும், கணிப்பீடு, பரிகாரக் கற்பித்தல், வேறுவளப் பயன்பாடு, மொழி விருத்திச் செயற்பாடுகள், மொழிமுகாம் என தாய் மொழித்திறன் விருத்தியை ஏற்படுத்துவதற்கான பல சந்தர்ப்பங்களை 5E முறையிலான கற்றல் - கற்பித்தல் மாதிரி ஒழுங்கு கொண்டுள்ள போதும் பரீட்சை மையம் என்ற இறுதி இலக்கையே எமது கல்வித்திட்டம் மாணவர் மனதில் முதன்மைப்படுத்துவதாலும் தமிழ்மொழித்தினப் போட்டிகள் உட்பட பல்வேறுபட்ட போட்டிகளுக்குமான பொறுப்பாசிரியர்களாகவும் தமிழ்பாட ஆசிரியர்களே செயற்பட வேண்டியிருப்பதனாலும் பிரயோக நிலையில் இது பிரச்சினைக்குரியதாகவே விளங்குகிறது.

தமிழ்மொழித்திறன்சார் போட்டிகளிற்கூடாகவும், ஏனைய போட்டிகளிற் கூடாகவும் தமிழ்மொழித்திறனை வளர்ப்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கின்ற போதும் கூட இணைப்பாடவிதான செயற்பாடுகளின் அளவுக்கு அதிகமான அதிகரிப்பு நிலை, போட்டிகளின் அதிகரித்த நிலை, ஓய்வின்மை காரணமாகவும், கற்றலை மட்டும் முதன்மைப்படுத்துவதாலும் மாணவர்களின் பங்கு குறைந்து வருவதைக் காண முடிகின்றது. ஆயினும் சில மாணவர்கள் உச்ச சாதனைகளை இன்றும் வெளிப்படுத்தி வருகின்றனர் என்பதையும் மறுக்க முடியாது. சமூகக் காரணிகளின் செல்வாக்கும் திறன் விருத்திக்குறைவிற்கு காரணமாக அமையலாம். எனவே தற்போது உள்ள முறை மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். பங்குபற்றல்கள் பரவலாக்கம் பெற வேண்டும். அத்துடன் முற்றுமுழுதான மரபுசார் சிந்தனை மனப்பாங்கில் இருந்து விடுபட்டு சமகாலத்துக்கு ஏற்ற வகையில் தாய்மொழித்திறன் கற்பித்தலில் சில புதிய மாற்றங்களை செய்ய வேண்டியதும் அவசியமாகும்.

தாய்மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள், ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் ஆகியோருக்கு போதியளவான வலுவூட்டல்கள் வழங்கப்படுவதுடன் மொழி விருத்தியில் பின்தங்கிய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குரிய தனியான மேலதிக மொழி விருத்தி செயற்பாடுகள், பரிகாரக் கற்பித்தல்கள் முன்னெடுக்கப்படுவதுடன் இதில் விசேட கல்வி ஆசிரியர்களின் வள உதவியையும், ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் வகுப்பறைக்கு அப்பாலான மொழி விருத்தி வழிகளை, சந்தர்ப்பங்களை மாணவருக்கு உருவாக்கிக் கொடுக்கலாம். உதாரணமாக நூலகத்தில் வாசிப்பதை ஊக்கப்படுத்தல், நாடகம் நடித்தல் போன்றன. அத்துடன் குறிப்பிட்ட மாணவர்களுக்கே மீண்டும் மீண்டும் சந்தர்ப்பங்கள் வழங்காமல் அதைப் பரவலாக்கலாம். சிறிய முன்னேற்றங்களைப் பாராட்டி ஊக்கப்படுத்தலாம், தொடர் பயிற்சிகளை வழங்கலாம், பல்வேறுபட்ட நுட்ப முறைகளை கையாளலாம்.

இதே போல குடும்பத்தில் பெற்றோர் பிள்ளையின் கொப்பிகளை பார்த்து திருத்தி பிள்ளையின் மொழித்திறன் விருத்திக்கு ஊக்கமளிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன், பல்துறைசார், நூல், பத்திரிகை வாசிக்கும் அனுபவத்தையும் ஊக்கப்படுத்தலாம். இதேபோல எமது ஊடக வெளியிலும் பிறமொழிக் கலப்பை தவிர்த்தும், மொழிக்கொலைகளை தவிர்த்தும் பொறுப்புணர்வுடன் செயலாற்ற வேண்டியதும் அவசியமாகும். இறுதியாக தாய்மொழித் திறனை வளர்ப்பது தமிழ் ஆசிரியர்களது கடமை மட்டும்தான் என்ற மனப்பாங்கில் இருந்து விடுபட்டும், தாய்மொழித்திறன் கலைப்பிரிவு மாணவர்களுக்கு மட்டும் தான் என்ற மனப்பாங்கில் இருந்து விடுபட்டும் இது ஓர்கூட்டுப்பொறுப்பு என்பதை உணர்ந்து நாம் அனைவரும் செயற்படும்போது நம் தமிழை தலைமுறை தாண்டினாலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழ வைக்க முடியும். சிந்திப்போம் எம் தமிழ் மொழி காக்க செயற்படுவோம்.





# Rama Namam

**-R.Sanmukasundaram**
*(Shan) An essayist*
*Teacher of English*
*J/M.G.H.S, Point Pedro.*

"**O**hum Sri Rama Jeyam" is a powerful divine oriented phrase - as omnipotent one. It, being, It's invinsible in any situation, even by Great Lord, incarnation of Maha Vishnu a monogamist God, Rama, Sri Raman, Gowsalya, Raman.

Questionable question to be asked among the Alwar - Vallipura Devotees who are deeply and devinely indulged in Pronouncing Mathava! Mayawa! Kesawa! Muguntha! Paranthama! Sri Rama!, While the Idols of Kannapiran and Anja Neyar are taken with piety in procession towards the majestic white quick sand blue watered Sea-Shore.

Accordingly EPICS, "Ramayana" once, Lord Rama with Deity Sita Kept on ruling "Ayouthya" with Justice and pride. After Sri Rama's Coronation great saints wiswamithra, Vasitha and the other personages had long stay at "Ashramam", growing great fire flame "Akkni" in the sacrificial pit for the welfare of Rama's union, Kingdom, and the safety of citizens - betterment of Ayothya - Bharatha country.

Meanwhile an emperer, under Rama's ruling Kingdom Sagunthan had to pass the abode - "Ashramam" where all the saints and sages were present, including wiswamithra an arrogant saint. Unavoidably, another person saint Narathar, Known for strategy and wisdom was there as well. Needless to say, he began playing his role as usual he does in the Epics, we find in Hinduism. Sagunthan emperor bowed and saluted Vasitha saint only paying reverential homage outside the Ashramam, because

of his return from "Hunting animals," in the forest. However, he failed to notice the others at that moment and he went away.


A golden opportunity, Naratha saint had and thought of playing his strategic role. Wiswamithra, an egoist saint was provoked mentioning the unmindful behaviour of Sagunthan. It was a great fault and he complained to Rama, saying furiously, "Bring Sguntha's head to my feet".

As a result , Lord Rama made a war towards Sagunthan respecting the recognition of Wiswamithra, because of the disciple orientation. Hearing this, Sagunthan hid himself seeking surrender valiant - Hero, Hanuman's mother Anjanathevi. Sagunthan's plea worked and Anjanathevi gave boon to Sagunthan for a long healthy life. Anuman took his mother's words to his mind and offered helping hand to sagunthan. Wonderful! It was , Hanuman, Sri Raman's strong soul devotee, a constant pronouncer of RamaNamam shouldered the responsibility to rescue Sagunthan. Lord Rama couldn't defeat sagunthan even he was the best archer - wonder of wonder, in his war towards Sagunthan.

Hanuman used his devine power pronouncing "Ramanama" and lengthened his tail very long way giving full security to Sagunthan and surrounded him beside a rock with his mighty tail. Lord Rama astonished and became sick of archery and he was at a standstill for a moment. When Wiswamithra arrived at the warfront with a good settlement towards Sagunthan. Sagunthan fell down and prostrated before Lord Rama, saluted copiously on his kneels.

Wiswamithra egoist realised not only his egoism but the result of his egoism too. Naratha became proud of pronouncing Rama Nama - Namo Natayana and recognised his unwanted strategic play - as a Drama, he played. Narayana Sri Raman of his opinion, he revealed that he could hear "Rama Namam" continuously , during combat, with simultaneous divine action - by his life long divine oriented soul chum. "Hanuman- Anjaneyar" A constant pronouncer of "Rama Namam". Is there a feeling of miracle we have, "Rama Namam is thousand times greater than the physical form of Sri Rama? "Ohum Sri Rama Jeyam". A destroyer and wiper of all sins we have at present and Karma from past. "Ohum Sri Rama Jeyam!, Ohum Sri Rama Jeyam! Ohum Sri Rama Jeyam!

"God is omnipresent, omniscient and omnipotent".



# புவிவெப்பமடைதலும் அதன் விளைவுகளும் ஓர் பார்வை

## (Global Warming and Its Repercussions - A Glance)

**திரு. சிவனு பூபாலசிங்கம்**
ஆசிரியர் - புவியியல் புலம்

## அறிமுகம்

பூகோளம் வெப்பமடைதல் (Global Warming) இந்த நூற்றாண்டின் மிக முக்கியமான பூகோள சூழல் பிரச்சினைகளில் ஒன்றாகும். கடந்த காலங்களில் காலநிலை மாற்றம் தொடர்பான மக்களின் சிந்தனைப்போக்கு வளர்ச்சியடைந்துள்ளது. புவியின் காலநிலை எல்லைக்குள் மனிதர்களின் நடவடிக்கைப்பற்றி விஞ்ஞானிகளால் அதிகூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனினும் பல்வேறு வகையான சூழல் மாறுதல்களுக்கு மனிதனின் செயற்பாடே பிரதான காரணமாகியுள்ளது. இதன் அடிப்படையில் இக்கட்டுரையானது.

i. புவி வெப்பமடைதல் என்றால் என்ன?

ii. புவியின் வெப்பநிலை போக்கு

iii. புவியின் வெப்பநிலை அதிகரிப்பிற்கான அடிப்படைகள்.


iv. புவி வெப்ப அதிகரிப்பும் விளைவுகளும்

v. புவி வெப்பநிலையை குறைத்தலும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் என்ற அடிப்படையில் நோக்கப்படவுள்ளது.

## 1. புவி வெப்பமடைதல்.

புவியின் சராசரி வெப்பநிலை அளவில் ஏற்படும் அதிகரிப்பு என இலகுவாக வரையறுக்கலாம். இயற்கையாகவே சூரியகதிர்களின் ஒரு பகுதி புவியின் மேற்பரப்பை அடைவதன் மூலம் வெப்பமடைகின்றது. வெப்பமான பூமி மீண்டும் அச்சூட்டினை அண்டவெளி நோக்கி செலுத்துகின்றது. இதற்கு வளிமண்டல அமைப்பு மிக முக்கிய பங்காற்றி வெப்பச்சமநிலையைப் பேணுகின்றது.

வளிமண்டலத்தில் காணப்படும் சில வாயுக்கள் காரணமாக அண்டவெளிக்கு திருப்பி அனுப்பப்படும் கதிர்கள் தடுக்கப்பட்டு மீண்டும் மீண்டும் புவியின் மேற்பரப்பை வந்தடைவதன் ஊடாக புவி வெப்பநிலை அதிகரிக்கின்றது. இதனை பச்சைவீட்டு விளைவு என்பர். புவி வெப்பமடைதலில் இவ்பச்சை வீட்டு வாயுக்களே (Green house gas) மிக பிரதான இடத்தினைப் பெற்றுள்ளது. அதாவது சூரியனில் இருந்து வரும் சிற்றலைகதிர்களை (Short Wave Radiation) உறிஞ்சி நெட்டலை கதிர்களாக (Long wave Raditation) வளிமண்டலத்துக்குள் கடத்துகின்ற செயற்தன்மையினை இவை கொண்டுள்ளன. இயற்கையாகவே குறிப்பிட்ட சேர்வைகளாக வளிமண்டலத்தில் காணப்படும் வாயுக்களின் அளவில் மிக வேகமான அதிகரிப்பிற்கு மனித நடவடிக்கைகள் காரணமாய் அமைந்துவிட்டன. பசிய இல்ல வாயுக்களாக நீராவி, காபனீரொட்சைட்டு ($CO_2$), மெதேன் ($CH_4$), நைதரஸ் ஒக்சைட்டு ($N_2O$), ஓசோன் ($O_3$), குளோரோபுளோரா காபன்கள் ($CFC_S$) காணப்படுகின்றன. இவை வெப்பசமநிலைக்கு மிகவும் முக்கிய செயற்பாட்டை நிகழ்த்துகின்றன. இதில் மனித சனத்தொகை அதிகரிப்பு காரணமாக காபனீரொட்சைட்டு ($CO_2$) வாயு அதிகமாக வளியில் கலக்கப்படுவதனால் வெப்ப உறிஞ்சல் அதிகரிக்கும் அதேவேளை அண்டவெளிக்கு திருப்பி அனுப்பும் செயன்முறையிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக புவியின் வெப்பநிலை அதிகரித்துள்ளது.




வரைபடம் 1 Increase of greenhouse gases in the atmosphere Adapted from http://blogs.sharemynz.co.nz/go

## 2. புவியின் வெப்பநிலை போக்கு.


புவியில் கடற்பிரதேசம், கரையோரப்பிரதேசம், உயர்மலைப்பிரதேசம், இடைப்பட்ட உயர் பிரதேசம் என்ற அடிப்படையிலும் காலநிலை அடிப்படையில் அயனம், இடைவெப்பம், முனைவு என பல தன்மைபட்டதாக தோற்றப்பாடுகள் காணப்பட்டபோதும் $0^0$ செல்சியசுக்கு குறைந்த பிரதேசமும் $30^0C$ அதிகம் வெப்பம் கொண்ட பிரதேசமும் காணப்படுகின்றது. எனினும் சராசரி வெப்பநிலை போக்கு $15^0c$ எனக் குறிப்பிடப்படுகின்றது. 1880 ஆம் தொடக்கம் பூமியின் வெப்பநிலை தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் 20ம் நூற்றாண்டின் முடிவில்

புவிவெப்பநிலை 0.6$^0$ செல்சியலாக அதிகரித்துள்ளதாகவும் 1990-2000 வரையான காலப்பகுதி, வெப்பதசாப்தம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1998ம் ஆண்டு வெப்ப ஆண்டாக பதிவாகியுள்ளது. மேலும் 1975 இற்கு பின் கடுமையான வெப்ப அதிகரிப்புக்கு புவிக்கோள் உட்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலக ரீதியாக காணப்படும் பிராந்திய நிலையங்கள் மற்றும் கரையோர கடல் மேற்பரப்பு வெப்பநிலை பதிவேடு (Sca-surface Temperature-SST) தகவலின் படி 1980 ஆம் பின் வந்த 7 ஆண்டுகள் வெப்பம் கூடிய ஆண்டாக கணக்கிட்டுள்ளது.

அமெரிக்காவின் வளிமண்டலவியல் நிர்வாகம் 2005 ஆம் ஆண்டு மிகுந்த வெப்ப ஆண்டாகவும் உலக வெப்ப வரலாற்றில் 1990ற்கு பின் வந்த பத்து ஆண்டுகள் வெப்பநிலை கூடிய ஆண்டுகள் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகவல்களின் அடிப்படையில் நோக்கும் போது கடந்த முப்பது நாற்பது ஆண்டுகளில் புவிக்கோளின் வெப்பநிலை அதிகரித்துள்ளது என்பதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இவ் அதிகரிப்புக்கு பிரதானமாக பங்காற்றியவர்கள் நாமே.

புவிச்சராசரி வெப்பநிலை
- 1850 - 2007




வரைபடம் 2

Source: © British Crown Copyright 2008, the Met Office

காலநிலை மாற்றம் தொடர்பான விஞ்ஞான ரீதியான ஆய்வுகளின் படி 0.6$^0$C $\pm$ 0.2$^0$C வெப்பநிலை அதிகரிப்பதாக குறிப்பிடுகின்றது. இது என்ன சிறிய அளவிலான மாற்றம் தானே என எண்ணிவிட முடியாது. காரணம் இம்மாற்றம் தான் புவியின் 'உயிர் கோளம்' நிலைத்திருப்பதற்கான சவால்களை ஏற்படுத்தியுள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையயலான ஆணைக்குழு (Inter - Governmental Panal on Climate Change - IPCC) என்ற அமைப்பு 1990 ஆண்டுக்கும் 2100 ஆண்டுக்கும் இடையில் புவிவெப்பமானது 1.4$^0$C - 5.8$^0$C வரை அதிகரிக்கலாம் என எதிர்வுகூறியுள்ளமையால் அதன் தாக்கம் அடுத்து வருகின்ற உயிரின வாழ்க்கைகாலம் மற்றும் அவற்றின் வாழ்க்கைகோலங்களில் பல அதிர்ச்சியான மாற்றங்களை கொண்டமையப்போகின்றது என்பது வெளிப்படையாகும்.

## 3. புவியியல் வெப்பநிலை அதிகரிப்பதற்கான அடிப்படைகள்.

புவியின் வெப்பநிலை அதிகரிப்பிற்கான அடிப்படைகளில் 90% பங்கினை காபனீரொட்சைட்டு ($CO_2$), மெதேன் ($CH_4$), நைதரஸ் ஒக்செட்டு ($N_2O$) குளோரோ புளோரோ காபன்கள் ($CFCS_5$) போன்ற வாயுக்களும் சிறிய அளவில் கந்தகவீர்ரொட்சைட்டு ($SO_2$) சூரிய புள்ளி வட்ட செயற்பாடு போன்றனவும் செல்வாக்கு செலுத்துகின்றன.

**3.1 காபனீரொட்சைட்டு ($CO_2$) வாயு அதிகரித்தல்.**

இயற்கையாகவே உயிரினங்களால் வளிமண்டலத்தில் சேர்க்கப்படும் $CO_2$ வாயு தாவரப்படைகளால் ஒளித்தொகுப்பு செயன்முறைக்கு பயன்படுத்தப்பட்டு சமநிலை பேணப்படுகின்றது. நீரில் கரைந்த காபன்கள் அங்கிகளின் வன்கூடுகளில் சேமிக்கப்பட்டு முருகை கற்பாறைகளாக உருவாக்கம் பெறுகின்றன. எஞ்சியவை சுண்ணாம்பு கற்பாறைகளாக மாறுகின்றன. தாவரங்களினால் சேமிக்கப்பட்ட காபன்கள் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக புவியில் புதையுண்டு சுவட்டு எரிபொருளாக மாற்றம் அடைகின்றது. இவற்றோடு எரிமலை வெடிப்பின்போது வெளிவரும் $CO_2$ உம் தாவரங்களால் பயன்படுத்தப்பட்டு வளிமண்டலத்தில் 0.03% என்ற அளவினை இயற்கை பேணி வந்துள்ளது. ஆனால் பின்வரும் செயற்பாடுகள் காரணமாக பல மடங்கு $CO_2$ வாயுக்கோளத்தில் சேர்ந்து புவியை உஷ்ணப்படுத்தி உயிரின வாழ்வை கேள்விக்குறியாக்கியுள்ளது.


✳ 1950-1982 இடைப்பட்ட காலப்பகுதியில் 50% அயனமழைக் காடுகள் அழிக்கப் பட்டமை.

✳ பல மில்லியன் வருடங்களாக தாவரங்கள் மெதுவாக சேமித்த காபனை குறுகிய காலத்தில் கைத்தொழில் நடவடிக்கை என்ற பெயரில் சுவட்டு எரிபொருட்களாக நிலக்கரி, பெற்றோலியம், இயற்கைவாயு என்பவற்றை பயன்படுத்தியமை.

✳ காடுகள் எரியூட்டப்படல், விறகுகள் எரியூட்டப்படுதல் காரணமாக வருடந்தோறும் 1.5 மெற்றிக்தொன் காபன் வளிமண்டலத்தில் சேர்கின்றமை.

இதன் காரணமாக காபனீரொட்சைட்டின் $CO_2$ அளவு மிகவேகமாக அதிகரித்துள்ளது.

Figure 3: Atmospheric concentrations of carbon dioxide ($CO_2$) between 1957 and 2007




வரைபடம் 3

Source: © Hugo Ahlenius, UNEP/GRID-Arendal; http://maps.grida.no/go/graphic/atmospheric-concentrations-of-carbon-dioxide-co2-mauna-loa-or-keeling-curve

காபனீர்ரொட்சைட்டு வாயுவானது புவி வெப்பமடைதலில் சராசரியாக 65% கொண்டுள்ளது. 1980களில் 284 ppm காணப்பட்டுள்ள $CO_2$ , 1994 இல் 330ppm வும் 2000இல் 379 ppm வும் மற்றும் 2007 இல் 382 ppm வும் அதிகரித்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

**3.2 மெதேன் - $CH_4$ வாயு அதிகரித்தல்.**

காபனீரொட்சைட்டுக்கு அடுத்தப்படியாக மெதேன் ($CH_4$) அதிகரிப்பு புவி வெப்பமடைதலுக்கு காரணமாகின்றது. இவ்வாயுவானது $CH_4$ அசைபோடும்

விலங்குகளான ஆடு, மாடு, எருமை, ஒட்டகம் போன்ற உயிரினங்களின் சமிபாட்டு செயன்முறை காரணமாகவும் நொதித்தல் செயன்முறை காரணமாகவும் வளிமண்டலத்தில் அதிக அளவில் கலக்கின்றது.

பண்ணைகளில் காணப்படும் விலங்குகளின் கழிவுகள் தேங்கியிருப்பதன் மூலமும் மெதேன் வாயு வெளியேறுகின்றது. இன்று பண்ணை விவசாய தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான நாடுகளின் செயற்பாடுகளினால் அதிகமான மெதேன் வாயு வளிமண்டலத்தில் சேர்ந்துள்ளது. குறிப்பாக வடஅமெரிக்கா, தென்னமெரிக்கா, ஐரோப்பா ஆசிய ஆபிரிக்க, அவுஸ்திரேலியா நாடுகள் உட்பட்ட பல பிரதேசங்களிலிருந்து அதிகமான $CH_4$ வாயு வெளியேற்றப்படுகின்றது. மேலும் அதிகரித்த சனத்தொகையின் உணவுத் தேவைக்காக நெல் அதிக அளவில் பயிரிடப்படவேண்டியுள்ளது. நெல்வயல்களில் தேங்குகின்ற நீரில் அதிக இரசாயன பசளைகள், ஈரலிப்பு, காற்று இல்லாத சூழல் நிலமைகளிலும் மற்றும் இயற்கையான நிலங்களிலும் காணப்படும் தேக்கமும் மெதேன் வாயுவை அதிகரிக்கச் செய்கின்றது. வருடாந்தம் சராசரியாக 0.8% $CH_4$ வாயு வளிமண்டலத்தில் சேர்வதாக குறிப்பிடப்படுகின்றது. புவி வெப்பமடைவதில் 19% மெதேன் ($CH_4$) செல்வாக்குச் செலுத்துகிறது.

### 3.3 நைதரஸ் ஒக்சைட்டு ($N_2O$) வாயு அதிகரித்தல்.

விவசாய நடவடிக்கைகளில் இன்று அதிகமாக நைதரசன் வளமாக்கிகள் மண்ணுக்கு இடப்படுவதன் காரணமாக இவை பக்டீரியாத் தாக்கத்திற்கு உட்பட்டு நைதரஸ் ஒக்சைட்டு ($N_2O$) வாயு அதிகம் வளியில் கலக்கின்றது. சுவட்டு எரிபொருள் பாவனை அதிகரித்ததன் விளைவாகவும் அதன் தகனத்தின்போது அதிகமாக $N_2O$ வாயு வளிமண்டலத்தில் கலக்கின்றது. நைதரஸ் ஒட்சைட் ($N_2O$) சராசரியாக வருடம் தோறும் 0.3% அதிகரித்து வருகிறது. புவி வெப்பமடைதலில் 6% பங்கு இவ் வாயுவிற்கு உண்டு.

### 3.4 குளோரோ புளோரா காபன் சேர்க்கைகள் ($CFC_s$) வாயு அதிகரித்தல்.

குளிரூட்டிகள், குளிர்சாதனப்பெட்டிகள், மின்விசிறிகள், வாசனை திரவியங்கள், சுத்தகரிப்புக்கு பயன்படுத்தப்படுகின்ற இரசாயனப் பொருட்கள் என்பவற்றினூடாக குளோரோ புளோரா காபன்களின் சேர்க்கைகள் அதிகமாக வெளியேறி புவியை வெப்பமடையச் செய்கின்றது. இன்று கைத்தொழில் வளர்ச்சியுடன் தொடர்பு கொண்டுள்ள நவநாகரிக உற்பத்தி மற்றும் வாழ்க்கை நடவடிக்கைக் கோலங்கள் தொடர்ந்து இந்த உற்பத்தி துறையை அதிகரித்துள்ளது. வருடாந்தம் சராசரியாக 5% வளிமண்டலத்தில் அதிகரிக்கின்றது. இவ்வாயுக்களின் சேர்வைகளானது மிக உறுதியானதாக காணப்படுவதன் காரணமாக 100 வருடங்களுக்கு மேல் வளிமண்டலத்தில் நிலையாக தங்கி தாக்கமுற்று வெப்ப அதிகரிப்புக்கு பங்காற்றுகின்றது. குளோரோ புளோரா காபன் சேர்வைகள் ($CFC_s$) வளிமண்டலத்தில் கலந்து தலைமுறை தலைமுறையாக உயிரினச்சூழலை பாதிக்கவல்லது.

### 3.5 கந்தவீரொட்சைட்டு $SO_2$ வாயு அதிகரித்தல்.

புவியோட்டின் கவசத்தகடுகளிலும் அதுசார்ந்த விளிம்புகளிலும் அதிகமான எரிமலை குமுறல்கள் நிகழ்கின்றன. இதன் போது அதிகமான கந்தவீரொட்சைட்டு வளிமண்டலத்தில் கலப்பதனால் புவி வெப்ப அதிகரிப்புக்கு காரணமாகின்றது. உலகின் பசுபிக் கரையோரம், ஆபிரிக்க வலயம், சமுத்திர மலைத்தொடர்வலயம் ஆகிய பிரதேசங்களில் அதிக எரிமலை வெடிப்புக்கள் காரணமாக $SO_2$ வாயு அதிகரிக்கின்றது.

### 3.6 நீராவி $H_2O$ அதிகரித்தல்.

இன்றைய கைத்தொழில் வளர்ச்சிக் காரணமாக சுவட்டு எரிபொருட்களின் பாவனை அளவு கூடி அதனிலிருந்து வெளியேரும் நீராவியின் அளவு வளிமண்டலத்தில் அதிகரித்துள்ளது. அதிகரித்த நீராவியானது சூரிய வெப்பத்தை அதிகளவில் உறிஞ்சு புவிக்கு வெப்பத்தை மீண்டும் வழங்குவதனூடாக வெப்பநிலை அதிகரிக்கின்றது.

### 3.7 பனிப்படலங்களின் மீது மாசுகள் படிதல்.

பனிப்படலங்கள் மீது மாசுக்கள் படிவதன் காரணமாக வெப்பத்தெறிப்பு குறைவடைந்து வெப்பநிலை அதிகரிக்கின்றது. பனிப்படலங்களின் பளபளப்பினை மாசுக்களும் புகையும் மறைத்திருப்பதன் காரணமாகவே இந் நிலை ஏற்படுகின்றது. குறைந்த மட்டத்தில் இது நிகழ்கின்றது.

### 3.8 ஞாயிற்று புள்ளி வட்ட செயற்பாடு.

ஞாயிற்று புள்ளிவட்ட செயற்பாடு, புவியின் கீழ் உள்ள காந்த வலயத்துள் நடக்கும் மேற்காவுகையை ஆதாரமாகக் கொண்டு ஞாயிற்றின் அகச்சிகப்பு வெளியீட்டில் அதிகரிப்பை ஏற்படுத்துகின்றது. ஜேர்மனிய வானியல் அறிஞரான S.M. சுவேபே என்பவர் செய்த ஆய்வின்படி ஒவ்வொரு 11 வருடங்களுக்கு ஒரு முறை சூரியனிலிருந்து வெளியாகும் ஹீலிய வாயுவின் வெடிப்பு வெப்பசக்தியை அதிகரிக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் புவிவெப்பநிலை அதிகரிக்கின்றது.

## 04. புவி வெப்பமடைவதனால் ஏற்படும் விளைவுகள்.

### 4.1 பனிப்படலம் உருகுதல்.

புவி வெப்பமடைவதன் காரணமாக சூழல், சமூக, பொருளாதார, அரசியல் போன்ற பல்வேறு விடயங்களில் குழப்பநிலைகளும் அழிவுகளும் ஏற்பட்ட வண்ணமுள்ளன.


ஆட்டிக், அந்தாட்டிக் துருவ பகுதிகள், இமயமலை, அந்தீஸ், றொக்கி, பிரனீஸ், அல்ப்ஸ் மலைத்தொடர்களின் பனிப்படலங்கள் உருகுவதன் காரணமாக உலக நீர்ச்சமநிலை பாதிக்கப்பட்டு கடல் மட்டம் உயர்வடைகின்றது.

அந்தாட்டிக் பிரதேசம் 99% பனியால் மூடப்பட்டுள்ளது. இவை முழுமையாக உருகுமாயின் கடல்மட்டம் 69 மீற்றர் உயரும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பனிப்பிரதேசங்கள் கடந்த காலங்களில் மெதுவாக உருக தொடங்கியுள்ளன.

ஆட்டிக்கடல் பிரதேசம் கோடை காலத்தில் 20% குறைகின்றது. 1980 இற்குப் பின் ஆட்டிக் பிரதேசம் 20% - 30% இழக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சில மீனினங்கள், பறவைகள், துருவக்கரடிகள், என்பன பாதிப்படையும் அதேவேளை எஸ்கிமோவர் பழங்குடியினரும் பாதிக்கப்படுகின்றார்கள்.

1999 ஆம் ஆண்டு தகவலின் படி இமயமலைச்சிகரமான எவரெஸ்ட் பகுதியில் பனி உருகுவதனால் 1.3 மீற்றர் பனிப்பாறைகள் குறைந்துள்ளன. தற்போது ஆண்டுக்கு 0.1 மீற்றர் குறைந்து கொண்டே வருகின்றது. இந்நிலை தொடர்ந்தால் 2050 களில் இமயமலையின் கிழக்கில் காணப்படும் சீனாவின் பனிமலைகள் 64% உருகிவிடும் என சீன அறிவியல் கழகம் எச்சரித்துள்ளது. வேகமாக உருகுவதன் காரணமாக சீனாவின் மேற்கு பகுதியில் உள்ள மில்லியன் கணக்கானோர் குடிநீர் தட்டுப்பாட்டால் தவிக்கின்றனர்.

26 வருடங்களில் இமாலயம், நேபாளப் பிரதேசங்கிளல் பனிப்பாறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்.





வரைபடம் 4 *Source: Laboratory of Cryosphere Variation, Nagoya University http://snowman.hyarc.nagoya-u.ac.jp*

## 4.2 கடல் மட்ட உயர்வு.

உலகின் மொத்த நன்னீர் அளவில் 75% வீதம் துருவபகுதிகளில் காணப்படும் பனிப்பாறைகளாகும். இவை தற்போது உருகி கடலை வந்தடைகின்றது. இதன் காரணமாக கடல் மட்டம் உயர்ந்து வருவதனை ஆய்வுகள் உறுதிசெய்துள்ளன. 1961 ஆம் ஆண்டு 1.8 மில்லி மீற்றராக இருந்த கடல்மட்ட உயர்வு 1993 ஆம் ஆண்டு 3.1 மில்லிமீற்றராக உயர்வடைந்துள்ளது. காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கிடையிலான ஆணைக்குழு (IPCC) வெளிப்பட்டுள்ள தரவுகளின்படி 2100 ஆம் ஆண்டு 0.6 அடியிலிருந்து 1.9 அடிவரை உயரும் என குறிப்பிட்டுள்ளது. அதிஉயர்வான மதிப்பீட்டின்படி 2.6 அடியில் இருந்து 6.6 அடியாக அதிகரிக்கவும் வாய்ப்புக்கள் உள்ளதாக வெளிப்படுத்தியுள்ளது.

கிறின்லாந்து தீவு படலங்கள் உருகி முழுவதுமாக அழியுமாயின் கடல் மட்டம் 7 மீற்றர்களை கடக்கும் எனக்குறிப்பிடும் இவ்வாய்வில், அமெரிக்க புளோரிடா மாநிலத்தின் அரைவாசி பகுதி இதனால் இழக்கப்படும். மேலும் பங்களாதேசத்தின் 12% நிலப்பரப்பும் 10 மில்லியன் மக்களுக்கு மேற்பட்டோரும் பாதிக்கப்படுவர் எனக்குறிப்பிட்டுள்ளது. இதைவிட இந்தியாவின் மும்பபை கரையோரங்களும் நகரங்களும் இழப்புக்கு உள்ளாகும். 1196 தீவுகளைக் கொண்ட மாலைதீவு 3 மீற்றர் உயர்ந்தால் கடலுக்குள் மூழ்கும் அபாய நிலை தோன்றுவதோடு பெருந்தொகையான மக்களின் வாழ்வியல் அழிந்து அகதிகளாக்கப்படும் நிலையும் காணப்படுகின்றது. இந்நிலையில் இலங்கையின் கரையோர நகரங்களும் கிராமங்களும் பெரும் பாதிப்புக்கு உள்ளாக வேண்டிவரும் எனக்குறிப்பிடலாம்.

மேலும் கடல் மட்ட உயர்வால் கரையோர அரிப்பு அதிகரிப்பு, உவர் நீர் உள்வருகை, நன்னீர் உவர் தன்மையை பெறல். கரையோர சதுப்புமற்றும் கண்டல் உயர்வாழ் சூழ்நிலை பெரும்பாதிப்பை எதிர்நோக்க வேண்டி வரும்.




வரைபடம் 5 Sea level rise observe and predicted
Adapted from http://www.wunderground.com/blog

## 4.3 கடற்கரையோர முருகை கற்பாறை அழிவு.

புவிவெப்ப அதிகரிப்பினால் முருகை கற்பிரதேசம் வேகமாக பாதிப்படைந்துள்ளது. சூடு அதிகமாகும் போது பவளப்பாறைகள் தன்னியல்புகளை இழந்து இறந்து விடுகின்றன. இதுவரை 15% பாறைகள் அழிவடைந்துள்ளதாகவும் 30 வருடங்களில் 30% அழிவடையும் எனவும் 25% மேற்பட்ட கடல்வாழ் உயிரினங்களுக்கு பாதுகாப்பாய் இருக்கும் சமுத்திர உயிர்ப்பல்வகைமை நேரடியான பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது.

## 4.4 காலநிலை மாற்றம்.

இன்று எல்லாமட்டங்களிலும் பேசப்படும் ஒரு விடயமாக மாறியிருப்பது காலநிலை பற்றிய சிந்தனையாகும். காலநிலை காரணிகளான வளிவெப்பநிலை, வளிஈரப்பதன், படிவுவீழ்ச்சி போன்றவற்றில் ஏற்படும் அசாதாரண நிலைமை காலநிலை மாற்றம் எனக் குறிப்பிடப்படுகின்றது. புவிவெப்ப அளவு அதிகமாகும் போது சமுத்திர நீர் வெப்பஅளவும் அதிகரிக்கின்றது. இந்நிலை வளிமண்டல நீராவியின் அளவினை அதிகரிக்கச் செய்து அதிகூடிய மழைவீழ்ச்சி மற்றும் பனிப்பொழிவு காரணமாக பெரும் மாற்றத்தையும் ஏற்படுத்தி வருகின்றது. இம்மாற்றங்களால் பாரிய உயிர் சேதம் மற்றும் உடைமை இழப்புக்கள் மற்றும் உளவியல் தாக்கங்களுக்கும் மனித சமூகம் உள்ளாகியுள்ளது.

1998 இல் கடும் வரட்சி காரணமாக 200 ஆயிரம் ஏக்கர் காடுகள் எரிந்து அழிந்துள்ளன. 2005 ஆம் ஆண்டு அமெரிக்காவின் புளோரிடா மானிலத்தை தாக்கிய கட்ரினா சூறாவளி பெரும் வெள்ளத்தை ஏற்படுத்தியது. 2011 டிசம்பரில் பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட சூறாவளி ஆயிரக்கணக்கானோரை பலிகொண்டு பயமுறுத்தியது.

உலகில் அயன சூறாவளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வடஅமெரிக்காவின் கிழக்குபகுதிகள், வடஐரோப்பா, வட மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்தில் 1900 - 2005 வரை மழைவீழ்ச்சி அதிகரித்துள்ளது. மத்திய தரைக்கடல் ஆபிரிக்க பிராந்தியத்தில் மழைவீழ்ச்சி குறைந்துள்ளது. மோசமான வெப்ப அதிகரிப்பு இப்பகுதியில் விவசாயத்தை முழுமையாக பாதித்துள்ளது. ஆபிரிக்க நாடுகளில் பஞ்சம், போசனக்குறைவு, குறைந்த ஆயுள், கடும் நோய் என்பன ஏற்பட்டள்ளன. உதாரணமாக சோமாலியாவில் பஞ்சமும், போசாக்கின்மையும் 12 மில்லியன் மக்களைக் கொண்ட நைகரில் 20% பாதிப்பு, நான்கில் ஒரு குழந்தை 5 வயதுக்கு முன் இறப்பு, மலேரியா போன்ற நோய் தாக்கங்களும் அதிகரித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) தகவல்படி வெப்ப அதிகரிப்பால் மலேரியா, வாந்திபேதி என்பவற்றால் சராசரியாக 150, 000 பேர் இறப்பதாகவும் இதன் எண்ணிக்கை 2030 இல் இருமடங்காக உயரும் எனவும் எச்சரித்துள்ளது. மேலும் வெப்ப அதிகரிப்பு காரணமாக பாரிய இடப்பெயர்வுகள், சனநெரிசலான வாழ்க்கைமுறை குழந்தை, சிறுவர், முதியவர் என எல்லோரினதும் பாதிப்பு, வாழ்க்கை கோலங்களில் மாற்றம் என்பவற்றோடு மனித வரலாற்றில் ஒரு சிக்கல் நிலையை தோற்றுவித்து உயிர்வாழும் உரிமைக்காய் இயற்கையோடு போராட வேண்டியுள்ளது.

## 05. புவிவெப்பமடைதலை குறைத்தலும் நடவடிக்கைகளும்.

புவி வெப்பமடைதலை குறைப்பதற்கான பல முயற்சிகள் உலக மக்களால் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் இலகுவாக அதனை நடைமுறைப்படுத்தி வெற்றிகாண்பதில் தங்களுக்குள்ளேயே முட்டி மோதிக்கொண்டுள்ளன. இங்கு சுற்றாடல் உலக மயமாதல் சிந்தனையோடு வளர்ச்சிப்பெற்ற இவ் கருத்தொற்றுமை புவிவெப்ப மடைவதால் ஏற்படும் பிரச்சினைகளை குறைப்பதற்கு பதிலாய் அதிகரித்துள்ளன.

1972 ஆம் ஆண்டு சுவிடனில் முதலாவது சூழல் மகாநாடு நடைபெற்று ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் சூழல் நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கப்பட்டது. (UNEP) இங்கு புவியின்

காலநிலை மாற்றம் தொடர்பில் பல பரிந்துரைகள் முன்வைக்கப்படும் பின்னர் செயற்றிறன் அற்ற நிலையில் கிடப்பில் போடப்பட்டது.

புவி வெப்பமடைதலிருந்து புவிக்கோளினை பாதுகாக்க 1992 இல் ஐக்கிய நாடுகள் சபை பிரேசிலின் றியோடிஜெனிரோ நகரில் புவி உச்சிமகாநாட்டை கூட்டியது. இது புவியை காப்பாற்ற விடுக்கப்படும் இறுதி அறைகூவல் எனக்குறிப்பிடப்பட்டு பாரிய மாற்றங்கள் நிகழும் என்ற அளவுக்கு 108 நாடுகளும் 180ற்கு மேற்பட்ட பிரதிநிதிகளும் பங்குபற்றினர். இங்கு புவி வெப்பமடைவதனை கட்டுபடுத்துவதற்கான ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதவாது புவிவெப்ப அதிகரிப்பு வாயுக்களை கட்டுப்படுத்துவது தொடர்பான நியதிகளின் அடிப்படையில் திட்டம் தயாரிக்கப்பட்டது. அனேக நாடுகள் கைச்சாத்திட்டன. ஐக்கிய அமெரிக்கா துரதிஸ்டவசமாக உடன்படிக்கைக்கு ஒப்புக்கொள்ளவில்லை.

பச்சை வீட்டு வாயுக்களை குறைப்பதற்கான இலக்குகளை இவ்வுடன்படிக்கை கொண்டிருந்தாலும் 'கட்டாயப்படுத்தல்' காரணமாக வாயு வெளியேற்றத்தில் குறைவு ஏற்படுவதற்கு பதிலாக அதிகரிப்பே ஏற்பட்டது. இதனை சீர்செய்ய 1997 ஆம் ஆண்டு டிசெம்பர் 11ம் திகதி யப்பானின் கியோட்டோ நகரில் ஒப்பந்தம் ஒன்றை செய்தனர்.

இவ்வொப்பந்தமும் பெரும் சிரமத்திற்கு மத்தியில் ஐரோப்பிய நாடுகளின் உதவியோடு நிறைவேறியது.

கியோட்டோ ஒப்பந்தம் அமுலாக இரு பிரதான நிபந்தனைகள் அடிப்படையாயின.

1. இவ்வொப்பந்தம் நிறைவேற குறைந்தது 55 நாடுகள் கைச்சாத்திட வேண்டும்.
2. இந்நாடுகள் வெளியேற்றும் பச்சை வீட்டு வாயுக்களின் கூட்டு அளவு உலக மொத்த வாயு வெளியேற்றத்தில் 55% தாண்டியிருக்க வேண்டும்.

இதனடிப்படையில் 142 நாடுகள் உடன்படிக்கைக்கு ஒப்புகொண்ட போது 44.2% மொத்த வெளியேற்றமே காணப்பட்டது. இறுதியில் 17% வெளியிடும் ரஷ்யா ஐரோப்பிய நாடுகளின் ஆலோசனையோடு உடன்பாட்டுக்கு வந்தது. எனினும் 2005 பெப்ரவரி 16 இல்தான் இது அமுலுக்கு வந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக வாயு கட்டுப்பாட்டிற்கு புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தப் போவதாக கூறிய அமெரிக்கா மிக அண்மையிலேயே இதில் கைச்சாத்திட்டது.

கியோட்டோ ஒப்பந்தமும் குறைபாடு உடையதாக மாறியது. அதாவது வாயு வெளியேற்றல் புவியை பாதுகாக்கும் நாடுகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டன. அப்புள்ளிகளுக்கு அதிகம் வாயுவை வெளியேற்றுகின்ற நாடுகள் நிதியுதவியினை வழங்கி அப் புள்ளிகளுக்கு ஏற்ப வாயு வெளியேற்றத்தினை செய்யலாம் என்பதால், உண்மை நோக்கம் குறைந்து போனது.

இவ்வாறு பல ஒப்பந்தங்களை புவிவெப்பமடைதலை தவிர்ப்பதற்காக உலக, பிராந்திய தேசிய மட்டங்களில் கைகொள்ளவேண்டும் என்ற நிலை காணப்பட்டாலும் காலப்போக்கில் அதிகரித்த சனத்தொகை, கைத்தொழில் உலகமயமாதல் சுற்றாடல் உலகமயமாதல் என்ற அடிப்படையில் நிலையான பெறுபேறினை தரவில்லை. தொடர்ந்து

புவி வெப்பமடைதலுக்கான ஏதுக்கள் அதிகமாகி காபன் வெளியேற்றம் அதிகரித்து உலக அரசியல் வல்லாதிக்க நிலைமைகளை உருவாக்கிக்கொள்ள பெரும்பாலான நாடுகள் பெரும் விருப்பத்தோடு போட்டி போட்டுக் கொண்டு புவியை தீமூட்டிக் கொண்டிருக்கின்றன.

எனவே உலக மக்களின் உன்னதமான வாழ்வியல் நெறிமுறைகளுக்கூடாக, ஏற்பட்டு வரும் பேரிழப்புக்களுக்கு காரணமான வாயுக்களின் வெளியேற்றத்தினை குறைப்பதற்கான புதிய அறிவியல் தொழில் நுட்பத்தில் தங்கியிருப்பதனால் அனைவரும் அவை தொடர்பில் சிந்தித்தும் செயற்பட வேண்டியுள்ளது. சூரிய குடும்பத்தில் இது வரை உயிர்வாழக்கூடிய ஒரே ஒரு கோள் புவிதான் அதனை பாதுகாப்பதிலே உலக மட்டத்தில் எல்லோருடைய தலையாய பொறுப்பும் கடமையுமாக இருக்க வேண்டும்.

> "பூமி மனிதனுக்குச் சொந்தமானதல்ல
> மனிதன் தான் பூமிக்கு சொந்தமானவன்"
>
> சியாட்டில் - 1854

**உசாத்துணைகள் :**


*அன்ரனி நோர்பேட்.எஸ் (2007) புவியியல் :* சூழலியல் முகாமைத்துவம்
சேமமடு பதிப்பகம் , கொழும்பு
பக்கம் **260-264**

*அன்ரனி நோர்பேட் எஸ் (2008) புவியியல் :* சூழலியல் முகாமைத்துவம்
சேமமடு பதிப்பகம் , கொழும்பு
பக்க் **104-109, 150-154**

National Science Foundation (2010) Science : VIDURAVA
Volume 27 Special Issue
Page 9-11

*கல்வி அமைச்சு இசுருபாய பத்தரமுல்ல (2009)*
இலங்கை இடைநிலை பாடசாலைகளுக்கான சுற்றாடல் அறிவூட்டல் வழிகாட்டி.
பக்கம் **29-35**

World Health Organization
South East Asia - Region (2008)
How is climate change affecting our health, A manual for teachers
Page 2-10

S.NOBLE SURENDRAN
K.B. BABU (1997)
*சரசு வெளியீடு - கொழும்பு -4*
*விஞ்ஞானம் : சூழல்மாசடைதல்*
*பக்கம் 47-50*

*http://globalwarming.sdsa.edu*
*www.edf.org/climate/globalwarming - facts*
*www.global warming.org*



# மாணவர்களும் போக்குவரத்துச்சேவையும்

**திரு. பொ. கதிர்காமநாதன்**
உதவி விநியோக அதிகாரசபை,
இலங்கை போக்குவரத்துசபை,
வடமாகாணம்,
கோண்டாவில்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு போக்குவரத்து இன்றியமையாதது. சமூகங்களினதும் கிராமங்கள், நகரங்களினதும் பொருளாதார, கைத்தொழில், விவசாய, சமய நடவடிக்கைகளுக்கு போக்குவரத்து இன்றியமையாதது.

அவ்வகையில் மக்களுக்கு போக்குவரத்து சேவையை திறம்பட வழங்கும் பொருட்டு 1958ம் ஆண்டு அரசாங்கம் தனியார்துறைக்கம்பனி போன்றவற்றை இணைத்து இலங்கை போக்குவரத்துச்சபையாக ஸ்தாபிக்கப்பட்டது. 15226 ஊழியர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட போக்குவரத்து சபையானது 1972ல் 53440 ஊழியர்களுடன் திருப்திகரமானதும் இலாபகரமானதுமான சேவையை ஆற்றி வந்துள்ளது. இதன் பின் 1974ம் ஆண்டு 75000 இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கொண்ட இலங்கைப் போக்குவரத்துச்சபை ஆசியாவில் 4வது பெரிய ஸ்தாபனமாகவும் கூடிய தொழிலாளர்களை கொண்ட சபையாகவும் இயங்கிகொண்டிருந்தது.

இதன் பின்பு "மக்கள் சேவை மகேசன் சேவை" என்று இயங்கிய இச்சபையின் இலாபம் குறைவடைய 1978ஆம் ஆண்டு மாகாணசபைகளாக பிரிக்கப்பட்டு ஏனைய மாகாணங்களை விட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் திறம்பட சேவையாற்றிக் கொண்டிருந்த வேளை 1980ம் ஆண்டு தனியார் துறை ஆரம்பிக்கப்பட்டது. இதனால் இலங்கை போக்குவரத்துசபையின் இலாபம் குறைவடையத்தொடங்கியது.

இதன் பின்பு 1990ம் ஆண்டு வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சபையாக செயற்படத்தொடங்கியது. 1990ம் ஆண்டிலிருந்து 1996ம் ஆண்டு வரை இது இயங்கவில்லை. பின்பு 1996ம் ஆண்டிலிருந்து மீண்டும் வடமாகாண போக்குவரத்து சபையாக இயங்கியது பின்னர் மீண்டும் 1958இல்

இருந்ததுபோல இ.போ.ச ஆக மாறி இன்றுவரை மக்களுக்கு சேவையாற்றிக் கொண்டிருக்கின்றது.

சேவையை நோக்கமாக கொண்ட சபையானது தனது 55 வருடங்கள் திறம்பட பூர்த்தி செய்து எமது வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கு சேவையை வழங்கி அவர்களையும் ஒரு பூரண மனிதர்களாக்கியது.

இச்சபையின் பெருமைக்குரிய விடயம் என்னவென்றால் எந்தவிதமான துன்பங்கள், கஷ்டங்கள் வந்தாலும் பாடசாலைமாணவர், பல்கலைக்கழகமாணவர்கள், தொழிநுட்பக்கல்லூரி மாணவர்கள் அரச, தனியார் ஊழியர்களுக்கு விசேட தேவையுடையோர்க்கும் ஓர் முக்கிய சேவையாக 1958 இலிருந்து இன்று வரை செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

பாடசாலை மாணவர்களுக்கு 90% கழிவும்<br>
பல்கலைக்கழக மாணவர்களுக்கு }<br>
தொழிநுட்பக்கல்லூரி மாணவர்களுக்கு } 75% கழிவும்<br>
அரசதனியார் ஊழியர்களுக்கு 35% கழிவுடன்<br>
பருவகாலச்சீட்டுக்களும் வழங்கப்படுகிறது. சுற்றுலாத்துறை/கல்வித்துறை போன்றவற்றுக்கு விசேட கழிவுடன் பேரூந்துக்கள் வாடகைக்கு விடப்படுகின்றன.

எமது வடமாகாணப்போக்குவரத்துச்சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் அவர்களின் நெறியாழ்கையின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச்சேவை மிகவும் திறம்பட இயங்கிக்கொண்டிருக்கிறது.

இப்பாடசாலையின் அதிபர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் அவர்கள் பிள்ளைகளின் போக்குவரத்து தொடர்பாக மிகவும் அக்கறையுடன் செயற்பட்ட ஒரு அதிபராவார். இவர் அடிக்கடி போக்குவரத்து சபையுடன் தொடர்புகொண்டு சேவையினை உறுதிப்படுத்தி மாணவர்கள் நேரத்திற்கு தமது வீடுகளுக்கு செல்வதற்கு மிகவும் உதவியாக இருந்தவர் இது மாணவர்கள் முழு மூச்சாக கல்வியில் ஈடுபடவழிசமைத்தது என்றால் மிகையாகாது.





# நேர முகாமைத்துவம்

**Mr.S.Amirthalingam**
*President, National College of Education Jaffna.*
*B.Sc.(Hons)Dip.in.Edu.*
*PGDEM (Merit)*
*M.Sc.in.information*
*M.Sc.in applied statistics.*

**நே**ரம் என்பது எமது வாழ்வில் மிகவும் பெறுமதி வாய்ந்த ஒன்றாகக் காணப்படுவதால் நேரம் பொன் போன்றது எனப் பலரும் கூறுகின்றார்கள். ஒருவரது வாழ்க்கை நேரத்தின் அடிப்படையில் இயங்குகிறது. மனிதனின் வாழ்வில் எல்லாக் கட்டத்திலும் நேரத்தைப் பார்க்கும் வழக்கம் முக்கியம் பெறுகின்றது. உதாரணமாகக் கூறுவதானால் காலை எழும்புவதில் இருந்து இரவு தூக்கத்திற்குச் செல்லும் வரை உண்பது, உடுப்பது வேலை செய்வது போன்ற ஒவ்வொரு விடயங்களிலும் நேரம் செல்வாக்குச் செலுத்துகின்றது.

நேரத்தின் பெறுமதியை நாம் மதிப்பிட முடியாது. நேரத்தை எம்மால் நிறுத்தி வைக்கவும் முடியாது. சென்ற நேரத்தை திருப்பிப் பெறவும் முடியாது. உதாரணமாக ஒருவரின் 10வது பிறந்த தினத்தை 25வது வயதில் கொண்டாட முடியாது. 10வது வயதின் பாடசாலை வாழ்க்கையை 25வது வயதில் உணரமுடியாது போன்றவாறு கூறலாம். நேரம் இழந்தது இழந்ததாகவே இருக்கும் மீண்டும் அதைப் பெற முடியாது. இழந்த நேரத்தை எண்ணி வருத்தப்படவே முடியும். இதற்காகத் தான் பெரியோர்கள் “நேரத்தைப் பிடிக்க வேண்டுமெனில் அது உன்னை எதிர் கொண்டு வரும் போதே பிடித்துக்கொள் கடந்த பின் பிடிக்க முடியாது” என்றார்கள்.

நேரத்தின் பெறுமதியை மக்கள் உணர்வதற்காக பின் வருமாறு கூறுவார்கள்.

- ஒரு வருடத்தின் பெறுமதியை பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிடம் கேட்டறியலாம்.
- ஒரு மாதத்தின் பெறுமதியை கர்ப்பிணிப் பெண்ணிடம் கேட்டறியலாம்.
- ஒரு வாரத்தின் பெறுமதியை வாரப் பத்திரிகை ஆசிரியரிடம் கேட்டறியலாம்.
- ஒரு நாளின் பெறுமதியை ஒரு நாள் கூலியாளிடம் கேட்டறியலாம்.

* ஒரு மணித்தியாலத்தின் பெறுமதியை காதலர்களிடம் கேட்டறியலாம்.
* ஒரு நிமிடத்தின் பெறுமதியை பஸ் வண்டியை தவறவிட்ட ஒருவரிடம் அறியலாம்.
* ஒரு செக்கனின் பெறுமதியை விபத்தில் தப்பிய ஒருவரிடம் கேட்டறியலாம்.
* ஒரு நனோ செக்கனின் பெறுமதியை மரதன் ஓட்ட போட்டி பதக்கம் பெற தவறியவனிடம் கேட்டறியலாம்.

நேரமானது நேர் கோட்டில் இயங்குவது போல் ஆரம்ப புள்ளியை ஒரு போதும் சந்திக்காது நேரத்தை வீணடித்தால் வாழ்க்கையை வீணடித்ததற்கு சமன். நேரம் தான் வாழ்க்கையின் உயிர் மூச்சென்பர். நேர விரயம் சமூகச் சீர்கேட்டை விளைவிக்கும் என்பர் போன்ற விடயங்களில் இருந்து நேரத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளலாம்.

முகாமைத்துவத்தில் ஓர் முக்கிய அங்கமாக நேரம் அமைவது குறிப்பிடத்தக்கது. நிறுவனமோ அல்லது குடும்பமோ அல்லது தனிப்பட்டவரோ அடைய வேண்டிய இலக்கை அடைவதற்கு நன்கு திட்டமிடல் வேண்டும் அத்திட்டமிடலுடன் நேரம் பின்னிப் பிணைந்துள்ளது. ஆகவே அவ்வாறான நேரத்தை முகாமை செய்ய வேண்டிய தேவையுள்ளது.

நேர முகாமைத்துவம் என்பது வினைத்திறன் செயற்றிறன், அல்லது உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஒரு குறிப்பிட்ட செயற்பாட்டை செய்து முடிப்பதற்கு செலவிடப்படும் நேரத்தினை திட்டமிட்டு கட்டுப்படுத்தும் செய்முறை அல்லது கலை எனக் கூறமுடியும்.

தனிப்பட்ட ஒருவர் தனது சுயவிருப்பத்திற்காக நேர முகாமைத்துவத்தை பின்வரும் முறையில் அமைத்துக் கொள்ள முடியும்.

* தனக்குரிய நாளாந்த வேலையைத் திட்டமிடல்
* காரியாலய வேலையை ஒழுங்கமைத்தல்.
* அர்ப்பணிப்புடன் கடமைகளை ஆற்றுதல்.
* உடல் ஆரோக்கியத்துடன் வாழ்தல்.
* மகிழ்ச்சியான ஊழியர்களாக சுய ஊக்குவிப்பை பெறல்.

போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

வேலையின் முக்கியத்துவத்தை பொறுத்து கீழேயுள்ள வரைபடத்தை பயன்படுத்தி வேலையை செய்யமுடியும்.

| அவசரம் | | குறைந்தது | கூடியாது |
|---|---|---|---|
| | கூடியாது | ஏனையோர் மூலம் உடனடியாக செய்தல் | தானே உடனடியாக செய்தல் |
| | குறைந்தது | ஏனையோர் மூலம் ஆறுதலாக செய்தல் | பிற்போட்டு தானே செய்தல் |

வேலையின் முக்கியத்துவம்

### சிறந்த நேர முகாமையைப் பேணுவதற்கான வழிமுறைகள்

1. செய்ய வேண்டியவற்றை எழுதி வைத்தல்.
2. எழுதியவற்றை முன்னுரிமை அடிப்படையில் நிரற்படுத்தல்.
3. வாராந்த திட்டத்தை வகுத்தல்.
4. ஒரு சிறுகுறிப்பு புத்தகத்தை பேணி வருதல்
5. இல்லை எனக் கூறப்பழகிக் கொள்ளல்.
6. செயற்பட முன்னர் சிந்தித்தல்.
7. தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு சரியாக நேரத்தை ஒதுக்குதல்.
8. நாளாந்த செயற்பாடுகளில் எவற்றைக் கைவிடுவது என சிந்தித்தல்.
9. நேர முகாமைத்துவ முறைமையை உபயோகித்து தொடர்ச்சியாக திட்டங்களை வகுத்தல்.
10. நேரத்தை வீணாக்கும் தீய பழக்கங்களை அடையாளம் காணல்.
11. குறிப்பேட்டை பராமரித்து இலக்குகள் அடையப்படுகின்றனவா என மதிப்பிடல்.
12. முக்கியமான கடமைகளில் மிகக் கவனமாக இருத்தல்.
13. தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ளல்.
14. முழுமை பெறாத தகவல்களுடன் வேலையை செய்யாதிருத்தல்.
15. பொருத்தமான வேலையை பொருத்தமானவர்களிடம் கொடுத்து செய்வித்தல்.
16. தெளிவான செய்தித் தொடர்புகளை மேற்கொள்ளல்.
17. தெளிவான நோக்கத்துடன் முன்னுரிமை அடிப்படையில் செயற்படல்.
18. நன்கு திட்டமிட்டு வேலையை ஆரம்பித்தல்.
19. நாளாந்த கடமைகளை உரிய நேரத்தில் செய்தல்.
20. உடல், உளம் சிறப்பாக உள்ள வேளைகளில் முக்கிய வேலைகளை ஆரம்பித்தல்.
21. குறுக்கீடுகளை பரிசீலித்து அவற்றை தவிர்ப்பதற்குரிய நடவடிக்கை எடுத்தல்.
22. தொடர்ச்சியாக நீண்டநேரம் செய்ய வேண்டிய வேலைகளுக்கு இடைவேளைகளை கொடுத்து புத்துணர்ச்சியுடன் செய்தல்.
23. ஒரே தன்மையான செயல்களை ஒரே நேரத்தில் ஆற்றுதல். (உதாரணம் - ஒரே நேரத்தில் பலருக்கு E.mail அனுப்புதல்)
24. ஒதுக்கப்பட்ட காலத்திற்குள்ளே வேலையை செய்து முடிக்க முயற்சித்தல்.
25. தேவையற்ற உரையாடல்களை தவிர்த்தல்.

## ஆசிரியர்களும் நேர முகாமைத்துவமும்

ஆசிரியர் எதிர் நோக்கும் சவாலாக தனது நேரத்தையும், மாணவர்களது நேரத்தையும் முகாமை செய்தலாகும். ஆசிரியர் என்பவர் கற்றலுக்காக நேரத்தையும் முன் ஆயத்த திட்டமிடலுக்காக ஒரு நேரத்தையும், கற்பித்தலை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான நேரத்தையும் ஒதுக்கி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை செய்தால் அது மாணவர்களிடம் நல்ல விளைத்திறன் ஏற்படுத்தும்.

வகுப்பு நேரத்தில் தொலைபேசிப் பாவனையை தவிர்த்தல் வகுப்பு நேரத்திற்கு வகுப்பிற்கு செல்லாமல் இன்னும் சில ஆசிரியர்களையும் மறித்து வைத்து கதைக்காதிருத்தல் (உதாரணம் - ஒரு ஆசிரியர் 40 மாணவர்களைக் கொண்ட வகுப்புள்ள பாடசாலையில் 4 ஆசிரியர்களை மறித்து வைத்து 10 நிமிடம் கதைத்தால் 5 x 40 x 10 = 2000 மாணவர் நிமிடம் வீணாகும்)

உரிய நேரத்தில் பாடவேளையைத் தொடங்கி முடிப்பதன் மூலம் ஆசிரியர்கள் போதனை நடைபெறாத நேரத்தை மிகச்சிறிய நேரமாக குறைத்துக் கொள்ள வேண்டும். அதே போல் ஒரு செயலில் இருந்து மற்ற செயலுக்கு மாறும் நேரத்தையும் மிகக் குறைந்த நேரமாக்கிக் கொள்ள வேண்டும். எல்லாச் செயற்பாடுகளும் ஒரே சமயத்தில் வகுப்பபறையில் நடைபெற முடியாததாகையில் எந்த ஒழுங்கில் செயற்பாடுகள் நடைபெற வேண்டும் என்பதற்கு ஓரளவு கவனம் செலுத்த வேண்டும். மேலும் எவ்வளவு நேரம் ஒவ்வொரு செயற்பாடும் நிகழ்வுறும் என்ற பிரச்சனைக்கும் ஆசிரியர்கள் கவனத்தை செலுத்த வேண்டும். எந்த ஒழுங்கில் செயற்பாடுகள் நடைபெறுகின்றன என்பதற்குக் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றதே ஒழிய அவை எடுக்கும் நேரத்தின் அளவுக்கு கவனம் செலுத்தப்படுவதில்லை என அண்மைக்கால அவதானிப்புக்கள் காட்டுகின்றன.

பல வகுப்பறைகளில் ஆசிரியர்களால் உண்டாக்கப்பட்ட வழமைகள் பின்வருவன தொடர்பாக காணப்படுகின்றன. வகுப்பிற்குள் நுழைதல், வகுப்பை விட்டு வெளியேறுதல், வகுப்பறைக் கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளல், அல்லது ஆசிரியருடன் உரையாடலில் ஈடுபடுதல், வீட்டு வேலையை முடித்து ஒப்படைத்தல் போன்றவையாகும். இச் செயற்பாடுகளுக்காக ஆசிரியர்கள் திட்டமிடப்பட்ட ஒழுங்கில் நேர முகாமைத்துவத்தினைப் பின்பற்றுவதன் மூலம் கூடிய விளைதிறனைப் பெற முடிகின்றது.

மேலைத்தேய நாடுகளில் வகுப்பறை முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாகிய நேரமுகாமைத்துவத்திற்கு செலுத்தப்படும் கவனம் போல வளர்முக நாடுகளில் செலுத்தப்படுவதில்லை என ஆய்வுகள் கூறுகின்றன. இந்நிலையானது ஆசிரியர்களுக்கு வகுப்பறையில் நேர முகாமைத்துவத்தைப் பின்பற்றுவது தொடர்பான ஆலோசனையும், செயற்பாடுகளும் தேவை என்பது தெளிவாகின்றது.

ஆசிரியரானவர் பாடசாலையில் வகுப்புப் பொறுப்பாசிரியர், பாடப் பொறுப்பாசிரியர், பிரிவுத் தலைவர், பாட இணைப்பாளர்கள், வகுப்பு இணைப்பாளர்கள் என பல்வேறு முகாமைத்துவப் பதவிகளில் ஈடுபடுத்தப்படுகின்றார் எனவே பல்வேறு முகாமைத்துவப் பதவிகளிலும் ஈடுபடும் ஆசிரியருக்கு நேர முகாமைத்துவம் என்பது இன்றியமையாததாகும்.

**அவசர கதியில் இயங்கும் மனிதன் தன்னை ஆற்றலுள்ளவனாய்க் கற்பனை செய்கின்றான் ஆனால் பல காரியங்களில் அவன் திறமை அற்றவன்.**

***People who are often in a hurry imagine they are energetic when in most cases they simply inefficent***



# பிள்ளையின் கல்வியில் பெற்றோரின் பங்கு

**திரு. வ. கிருஸ்ணசிங்கம்**
பாடசாலை அபிவிருத்திக்குழுச் செயலாளர்

**பி**ள்ளையை அறிதல் என்பதில் பெற்றோரும் ஆசிரியரும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஒரு பிள்ளையின் எல்லா விருத்திச் செயற்பாடுகளுக்கும் அடிப்படையாக அமைவது கல்வி. இக்கல்வியை பெற்றோர், சகபாடி, பாடசாலை, சமூகம் என்பவற்றிலிருந்து ஒரு பிள்ளை பெற்றுக்கொள்கின்றது. ஆயினும் ஒரு மாணவனின் கல்வியிலும், கல்வி அடைவிலும், வினையாற்றலிலும் பெற்றோரின் பங்களிப்பு மிக முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக பிள்ளை வளர்ச்சி, பிள்ளை விருத்தி, பிள்ளையின் கல்வியடைவு என்பவற்றில் வசதிகளை ஏற்படுத்தியும், கல்வியில் தடைகள் பிரச்சினைகள் ஏற்படாது பாதுகாத்து வருவதும் பெற்றோரின் முக்கிய கடமைகளாகும்.

பிள்ளை முதலில் தன் தாயையே அறிகின்றது. பின்னர் படிப்படியாகக் குடும்ப அங்கத்தவர்களை இனம் காணுகின்றது. பிள்ளையின் ஆரம்ப வளர்ச்சிக்கு குடும்பமே அடிப்படை அலகாக இருந்து, அவர்களோடு நீண்டநாள். நிலைத்து நின்று உறவை வளர்ப்பதாலும் குடும்பமே பிள்ளையின் முதன்மை சமூகமயமாக்கல் நிலையமாகக் கருதப்படுகின்றது. எனவே குழந்தையின் உடல், உள, சமூக, ஆன்மிக, புலன் உணர்வு, அறிகை, மொழி, உணர்ச்சி சார் விருத்தி யாவும் குடும்பத்திலிருந்தே ஆரம்பமாகின்றது. தொடர்ந்து தாய்மொழி பல்வேறு திறன்கள், சமூக விழுமியங்கள், ஒழுக்கப் பண்புகள், கலாசாரம் ஆகியவையும் குடும்பத்திலிருந்தே குழந்தை கற்றுக்கொள்கின்றது.

இவ்வாறாக வளர்ச்சியடைந்த பிள்ளைகள் 4 வயதில் முன்பள்ளிக்கும் 6 வயதில் பாடசாலைக்கும் செல்கின்றனர். அவ்வாறு செல்லுபவர்களில் ஆரோக்கியமான குடும்பங்களில் இருந்து வரும் பிள்ளைகள் பாடசாலைகளில் ஒழுங்கைப் பேணுவர். ஆரோக்கியமான குடும்பமானது தம் பிள்ளைக்கு வேண்டிய நிதி உதவி, உணர்வு, ஆதரவு ஆகியவற்றை வழங்குகின்றது.

மேலும் பெற்றோர் பாடசாலையின் முக்கிய பங்குகாரராகவோ அல்லது பாடசாலையுடன் அன்னியோனிய தொடர்பு உடையவராகவோ காணப்படும் போது அவர்களின் பிள்ளைகளின் கல்வி நிலையும் உயர்வாகக் காணப்படும். பெற்றோர் பாடசாலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் போது பிள்ளையின் கல்வியிலும் மிக்க ஆர்வமுடையவர்களாக காணப்படுவர். அத்துடன் அதிபர் ஆசிரியர்களுடனான தொடர்பும் பிள்ளையின் கல்வியில் பெற்றோரின் ஈடுபாட்டை அதிகரிப்பதுடன் அவர்களின் கல்விநிலை கல்விச் செயற்பாடுகள், கல்வி விருத்தி போன்றன பற்றியும் பெற்றோர் அதிக விளக்கத்தை பெற்றுக்கொள்வதால் பிள்ளையின் கல்வியில் அதிக அக்கறையுள்ளவராக காணப்படுவர். அத்துடன் பிள்ளையின் கல்வி பற்றி சிறந்த விளக்கத்தையும் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறான பெற்றோர்களின் பாடசாலைப் பிணைப்பானது வீட்டில் பிள்ளைகளின் கற்றலுக்கான சிறந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவும், பிள்ளையின் கற்றலுக்கு ஆதரவளிக்கவும், பிள்ளைக்கு ஆசிரியராக செயற்படவும் வாய்ப்பளிக்கின்றது.

ஒரு பிள்ளையின் ஆளுமையின் தரத்தையும் இயல்பையும் நிர்ணயிப்பதில் குடும்பச் சூழ்நிலையும், பெற்றோரின் மனப்பான்மைகள், நடத்தை முறைகள் ஆகியனவும் பெரும்பங்கு வகிக்கின்றன. மாணவரது கல்வி வளர்ச்சியில் அவர்களது குடும்பப் பின்னணிக்கு பெரும்பங்கு உண்டென்பதை ஆசிரியர்கள் உணர வேண்டும். மாணவரது முன்னேற்றத்துக்காக ஆசிரியர்களால் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்படும் எந்தச் செயலும் பெற்றோர்களது ஒத்துழைப்பின்றி வெற்றி பெற முடியாது. ஆகவே பெற்றோர்களும் ஆசிரியர்களும் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வது அவசியம்.

பிள்ளைகளின் கல்வியில் போஷாக்கான உணவும் முக்கியம் பெறுகின்றது. இதை கற்கும் மாணவர்களுக்கு வழங்கவேண்டிய பொறுப்பு பெற்றோரைச் சாரும். எனவே பெற்றோர் பிள்ளையின் நலன் அறிந்து தேவைக்கேற்ப போஷாக்கு மிக்க உணவை வழங்க வேண்டும். இல்லையேல் பிள்ளைகளின் உடல் தளர்ச்சிக்குட்பட்டு உளவிருத்தி பாதிப்புக்கு உட்படுகின்றது.

பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் பாடசாலை போன்ற பல்வேறு நிறுவனங்கள் செல்வாக்கு செலுத்துமாயினும் அதில் வலுவிலும் ஆழத்திலும் குடும்பமே முதன்மை பெறுகின்றது. குடும்ப ஆரோக்கியம் குறையும் போது பிள்ளைகள் பல்வேறு நெருக்கீட்டுக்கு உட்படுகின்றனர். குடும்பத்தில் வருமானம் குறைவாக இருக்கும் பிள்ளைகளின் கல்வி வசதிகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் கல்வியின் வளர்ச்சியானது தடைப்படுகின்றது. மேலும் குடும்பத்தில் தந்தையாரின் கெடுபிடிகள், குடி, போதை, தாயாருடன் சண்டை, தந்தை தாயின் மறுமணம், பிள்ளைகளில் பாரபட்சம் காட்டுதல், புறக்கணித்தல் என்பனவும் மாணவர்களின் கல்வி விருத்திக்கு தடையாக காணப்படுகின்றன. குறிப்பாக இரவு நேரங்களில் மது போதையில் வரும் தந்தை, தாயுடன் அகோரமாக சண்டையிடும் நிலை காணப்படும் போது, அந்நிலை பிள்ளைகளின் ஆக்க சிந்தனைகள், தேர்ச்சிகள், மகிழ்ச்சி, கற்கும் ஆற்றல் போன்றவற்றை குறைத்து விடுகின்றன. இந்நிலை பிள்ளைகளை நாளடைவில் ஒரு உளநோய்க்கு உள்ளாக்குகின்றது. எனவே பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்த வேண்டுமாயின் தாய் தந்தை தம்மிடையே மிக்க மகிழ்ச்சியுடையவராகவும், பிள்ளைகளின் கற்றலுக்கு வீட்டில் போதிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பவராகவும் இருக்க வேண்டும்.

மேலும் படிப்பறிவு குறைந்த ஏழ்மை நிலையிலுள்ள பெற்றோர்கள் தமது மகிழ்ச்சியை மட்டும் கவனத்தில் கொண்டு இரவு நேரத்தில் தொலைக்காட்சி பார்ப்பதில் தம்மை ஈடுபடுத்துகிறார்கள். இந்நிலை மாணவர்களின் கல்வியை பெருமளவில் பாதிக்கின்றது. எனவே பெற்றோர் தமது குதூகலிப்பை குறைத்து பிள்ளையின் கல்விக்கு வழிகாட்ட வேண்டும். அத்துடன் இரவு வேளையில் விழித்திருந்து கற்கும் மாணவர்களுடன் பெற்றோரும் விழித்திருக்க வேண்டியது அவர்களின் கடமையாகும். ஏனெனில் வீட்டில் அனைவரும் நித்திரைக்கு சென்றபின் தனித்திருந்து கற்பது சில மாணவர்களுக்கு பயப்பீதியை உருவாக்குகின்றது. இது கற்றலில் தடையை தோற்றுவிக்கும்.

பெற்றோரின் சரியான நடத்தைகள், முன்மாதிரிகள், பிள்ளைகளுடன் கொண்டுள்ள நெருக்கமான இடைத்தொடர்புகள், அன்பான கண்டிப்புக்கள், அரவணைப்புக்கள், பிள்ளைகளின் கற்றலுக்கு சாதகமாக அமைகின்றன. பொருத்தமற்ற கண்டிப்புக்கள், எதிலும் குறைகாணல், அடிக்கடி தண்டனை வழங்கல், குறைவான இடைத் தொடர்புகள், பொருத்தமற்ற குற்றச்சாட்டுகள் மாணவர்களின் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே பெற்றோர் பிள்ளைகளுடனாக ஊடாட்டத்தில் நேரான சிந்தனையை பின்பற்ற வேண்டும்.

பெற்றோரின் மறுமணம் என்பதும் மாணவர்களின் கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மறுமணம் தாரமிழந்தவரின் ஆரோக்கியத்துக்கு உகந்ததாக இருப்பினும் பிள்ளையை பொறுத்தவரை அவனது கல்விக்கு ஒரு தடைக்கல்லாக அமைகின்றது. இது பிள்ளைகளுக்கு ஒரு நெருக்கீட்டை தோற்றுவிப்பதுடன் உளச்சமநிலையிலும் குழப்பத்தை ஏற்படுத்தி அவனது கல்வியை பாதிக்கின்றது. பெற்றோரின் மறுமணத்தின் போது பிள்ளை கட்டிளமைப் பருவத்தினை அடைந்திருப்பின் அவர்களின் மனநிலை புதிய அங்கத்தவரை ஏற்க மறுப்பதுடன் உள நெருக்கீட்டுக்கும் உட்பட்டு, பிறழ்வான நடத்தைகளுக்கும் இட்டுச் செல்ல வழி சமைக்கின்றது.

